# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

மலர் : 52 இதழ் :7

ஜனவரி 2022

விலை ரூ. 20/–





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.12.2021 அன்று, பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் மார்பளவுச் சிலையினைத் திறந்துவைத்து மரியாதை.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.12.2021 அன்று, டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் மார்பளவுச் சிலையினைத் திறந்துவைத்து மரியாதை.

# 2022

## புத்தாண்டில் பேரிடரைக் கடந்து நலன் பெற்றிடுவோம்



இனிமை சூழ்ந்து – இன்னல் அகன்று,
அனைத்து மக்களும் நலமும் வளமும் பெற்றிட
நம்பிக்கையுடன் பிறக்கிறது 2022 ஆங்கிலப் புத்தாண்டு.
கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகம் கண்டு வரும்
பேரிடர்ச் சூழல், மனிதக்குலத்திற்குப் பெரும் சவாலாக
அமைந்துள்ள நிலையில்,
தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்து,
மாநிலத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு
செயல்படும் நமது அரசு, எதிர்வரும் புத்தாண்டில்
இன்னும் கூடுதலான செயலாற்றலுடன்
மக்கள் நலனுக்கான பணிகளைத் தொடர்ந்திட உறுதி பூண்டுள்ளது.
நமது அரசின் மீது மக்கள் வைத்துள்ள
நம்பிக்கையினை நிறைவேற்றும் வகையில்
நிருவாகச் செயல்பாடுகள் புத்தாண்டில் புதுப்பொலிவு பெறும்.

‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’ எனும்
மானுடத் தத்துவம் பாடிய பெருமைக்குரிய நமது தமிழ்நாடு
அனைத்துத் துறைகளிலும் செழித்திடவும்,
உலகில் வாழும் மக்கள் யாவரும்
பேரிடரைக் கடந்து நலன் பெற்றிடவும் விழைகிறேன்.
நமது அரசுக்கு உறுதுணையாக விளங்கிடும்
தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும்
இனிய ஆங்கிலப் புத்தாண்டு
நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052 – 2053
பிலவ வருடம் : மார்கழி – தை
ஜனவரி 2022

மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 7



ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
**த. ஹரிராம்**
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
**அ. மகேஸ்வரி**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
**சு. தீபா**
**எஸ். உதயா கதிரவன்**
**ச. மஞ்சுளா**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
**அ. சுகுமார்**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**
**கு. சுபாஷ்**

கணினி வடிவமைப்பு
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
**கோ. சந்திரசேகர்**



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542224 / 22542221**
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in


தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

***குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்***
***வடுவன்று வேந்தன் தொழில்.*** *(குறள் : 549)*

*குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.*

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## இந்த இதழில்...


★ **தமிழர் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிடப் பொங்கல் சிறப்புப் பரிசுத் தொகுப்பு** ...... 6

★ **தமிழ்நாட்டைத் தெற்காசிய நாடுகளுக்கே முன்னுதாரணமாக உருவாக்குவோம்**
(மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என். ரவி** அவர்கள் 05.01.2022 அன்று 2022ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை) ...... 8

★ **இந்த அரசு ஒளிவு மறைவற்ற அரசு மட்டுமல்ல, அனைவருக்கும் ஒளி தரும் அரசு**
(மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரைத்து 07.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை) ...... 18

★ **7,56,142 மகளிர் சுயஉதவிக் குழு பயனாளிகளுக்கு ரூ.2,750 கோடி கடனுதவி** ...... 29

★ **“இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48” திட்டம்** ...... 38

★ **“மீண்டும் மஞ்சப்பை” விழிப்புணர்வு இயக்கம் தொடக்கம்** ...... 48

★ **திருச்சிராப்பள்ளியில் ரூ.1,084.80 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகள்** ...... 56

★ **தஞ்சாவூரில் ரூ.1,231.75 கோடியில் திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள்** ...... 61

★ **கோவிட் – 19, ஒமிக்ரான் நோய்த்தொற்று தமிழ்நாட்டில் தொடரும் தடுப்புப் பணிகள்** ...... 66


## முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.01.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், தமிழர் திருநாளாம், பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட, 21 பொருட்கள் அடங்கிய சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிடும் அடையாளமாக 10 குடும்பங்களுக்குச் சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.







# தமிழர் திருநாள்

“பொங்கலோ பொங்கல்” என்று சொல்லும்போதே
மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது.
புத்துணர்வு பொங்கி வழிகிறது. உள்ளமெல்லாம் பூரிப்புப் பிறக்கிறது.
அந்த வகையில் நம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாகத்
தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது. தை முதல் நாள்
தமிழர் திருநாள், தை இரண்டாம் நாள் வான்புகழ் கொண்ட
திருவள்ளுவர் நாள் எனத் தைத்திங்களின் தொடக்கம் என்பது
தமிழர் பெருவிழா நாட்களாக அமைந்துள்ளது.

புத்தாடை அணிந்து, புதுப்பானையில், புத்தரிசி படைத்துப் பொங்கல் இடும் நாள் என்பது தமிழர்கள் இல்லமே பொங்கி வழியும் நாளாக அமைந்து வருகிறது. வேளாண்மையைத் தொழிலாக இல்லாமல், பண்பாடாகக் கடைப்பிடிக்கும் இனம் தமிழினம். உழவே தலை என்றார் வள்ளுவர். அத்தகைய உழவர் பெருமக்களையும், அவர்களுக்கு என்றும் துணையாக இருக்கும் உயிர்ச் செல்வங்களாம் மாடுகளுக்கு மரியாதை செலுத்தும் நாளாகவும் அதனைக் கடைப்பிடித்து வருகிறோம். அந்தவகையில் எல்லாம் அடங்கிய இனிய திருநாள்தான் பொங்கல் திருநாள்.

அதிலும் இந்த ஆண்டு புத்தாட்சி மலர்ந்த ஆண்டாக அமைந்திருப்பதால் – மக்கள் மனதில் அரசியல் பூரிப்பும் இணைந்துள்ளது. உங்களில் ஒருவனான நான், உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் அமர வைக்கப்பட்டுள்ளேன். பொறுப்பேற்ற நொடியில் இருந்து உங்களுக்காகவே ஒவ்வொரு நொடியையும் அர்ப்பணித்து வருகிறேன். மக்கள் மனதில் மகிழ்ச்சியை எந்நாளும் பொங்க வைப்பதே எனது பெரும்பணி என உழைத்து வருகிறேன். எட்டே மாதத்தில் ஏற்றமிகு திட்டங்களைத் தீட்டி வருகிறேன். ஐந்தாண்டு செய்ய வேண்டிய சாதனைகளைச் சில மாதங்களில் செய்தவன் என்று நடுநிலையாளர்கள் பாராட்டைப் பெற்றும் வருகிறேன். இத்தகைய பொற்கால ஆட்சியின் முதல் தைத்திருநாளைத்தான் உங்களோடு சேர்ந்து நானும் கொண்டாட இருக்கிறேன்.

கொரோனா காலம் என்பதால் கட்டுப்பாட்டுடன் நாம் இந்த விழாவைக் கொண்டாட வேண்டும். இல்லத்தில் இருந்தபடியே கொண்டாடுங்கள். பொது இடங்களில் கூட வேண்டாம். இந்த அலைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைப்போம். அதுவரை உங்களையும் காத்து, நாட்டையும் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைவருக்கும் தமிழர் திருநாள் – தமிழ் இனநாள் – பொங்கல் மகிழ்நாள் – உழவர் உயிர்நாள் – திருவள்ளுவர் வாழ்வியல் நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணங்குவோம் சூரியனை! வாழ்த்துவோம் உழவரை!
மண் செழிக்கட்டும்! மக்கள் மகிழட்டும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்







# தமிழர் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிடப் பொங்கல் சிறப்புப் பரிசுத் தொகுப்பு






உலகிற்கே அச்சாணியாகத் திகழும் உழவுத் தொழிலைப் போற்றும் தமிழர்களின் பண்பாட்டுத் திருநாளாகவும், உழைப்பின் சிறப்பையும், உழவுத் தொழிலுக்கு உயிரூட்டும் சூரியனையும், உறுதுணையாக இருக்கும் கால்நடைகளையும் போற்றுகின்ற நன்னாளாகவும், சாதி, மத, பேதமற்று நாம் அனைவரும் ஓரினம், தமிழினம் என்ற உன்னத உணர்வைப் பிரதிபலிக்கும் வகையிலும் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையைத் தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களுக்கும், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், நெய், மிளகு, புளி, கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, உளுத்தம்பருப்பு, உப்பு, ரவை, கோதுமை மாவு, வெல்லம், அரிசி, முந்திரிப்பருப்பு, திராட்சை, ஏலக்காய் ஆகிய மளிகைப் பொருட்கள் அடங்கிய துணிப்பையுடன் கூடிய தொகுப்பு மற்றும் முழு கரும்பும் சேர்த்து **2.15** கோடி குடும்பங்களுக்கு ரூ.**1,296.88** கோடி செலவில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினைத் தமிழகத்தில் வழங்கிடும் பணியினைத் தொடங்கிவைப்பதன் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **04.01.2022** அன்று தலைமைச் செயலகத்தில், **10** குடும்பங்களுக்குச் சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

பொங்கல் சிறப்புப் பரிசுத் தொகுப்புப் பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா என்பதையும், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதையும் சென்னை சத்தியா நகர்ப் பகுதி கூட்டுறவு நியாயவிலைக்கடையில் **08.01.2022** அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு செய்ததுடன் பொதுமக்களுக்குச் சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களை வழங்கினார். அங்கிருந்த பொதுமக்களிடம் பரிசுத் தொகுப்புகள் விநியோகம் குறித்துக் கேட்டறிந்தார்.



பொங்கல் பரிசுத் தொகுப்புகள் விநியோகம் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **09.01.2022** அன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :

கொரோனா பெருந்தொற்றாலும் மழை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை உவகையுடன் கொண்டாடும் வகையில்,



## பொங்கல் பரிசுத்தொகுப்பு – 2022

| வ. எண் | குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படும் பொருட்கள் | |
|---|---|---|
| | பொருட்கள் | அளவு |
| 1 | பச்சரிசி | 1 கிலோ |
| 2 | வெல்லம் | 1 கிலோ |
| 3 | முந்திரி | 50 கிராம் |
| 4 | திராட்சை | 50 கிராம் |
| 5 | ஏலக்காய் | 10 கிராம் |
| 6 | பாசிப்பருப்பு | 500 கிராம் |
| 7 | நெய் | 100 கிராம் |
| 8 | மஞ்சள்தூள் | 100 கிராம் |
| 9 | மிளகாய்த் தூள் | 100 கிராம் |
| 10 | மல்லித்தூள் | 100 கிராம் |
| 11 | கடுகு | 100 கிராம் |
| 12 | சீரகம் | 100 கிராம் |
| 13 | மிளகு | 50 கிராம் |
| 14 | புளி | 200 கிராம் |
| 15 | கடலைபருப்பு | 250 கிராம் |
| 16 | உளுத்தம்பருப்பு | 500 கிராம் |
| 17 | ரவை | 1 கிலோ |
| 18 | கோதுமை மாவு | 1 கிலோ |
| 19 | உப்பு | 500 கிராம் |
| 20 | துணிப்பை | ஒன்று |
| 21. | முழு கரும்பு | ஒன்று |

கரும்புடன் 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்தேன். இதன்படி 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் – நமது அரசுக்குப் பெரும் நிதி நெருக்கடி நிலவி வரும் இச்சூழலிலும் மக்களின் நலன்கருதி 1,297 கோடி ரூபாய் செலவில் இத்தொகுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்படுவதை நானே நேரடியாகச் சென்று நியாயவிலைக்கடைகளில் ஆய்வு செய்தேன். மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டத்தைப் பற்றிச் சிலர் தவறான விஷமத்தனமான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். எனவே இந்தப் பணிகள் முறையாக நடைபெற்று வருவதையும், தரமான பொருட்கள் எவ்விதப் புகார்களும் இன்றி அனைவருக்கும் கிடைக்கப் பெறுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கும் பணிகளை, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் தொடர்ந்து கண்காணித்து அனைவருக்கும் தரமான பொங்கல் பரிசுப் பொருள்கள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.


சத்தியா நகர்


அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.1.2022 அன்று, சென்னை, இராயபுரம், தொப்பை தெரு மற்றும் புது வண்ணாரப்பேட்டை, டாக்டர் விஜயராகவலு தெரு ஆகிய இடங்களிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு நேரில் சென்று, சிறப்புப் பொங்கல் தொகுப்புப் பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கும் பணியினை ஆய்வு செய்தார்.

பின்னர், அங்குள்ள பொதுமக்களிடம், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தும், முகக்கவசம் அணிந்தும், அரசின் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பொருட்களைப் பெற்றிட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.


இராயபுரம் தொப்பை தெரு



# தமிழ்நாட்டைத்
## தெற்காசிய நாடுகளுக்கே முன்னுதாரணமாக உருவாக்குவோம்





**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 05.01.2022 அன்று 2022ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை.**

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!

வணக்கம்.

இம்மாமன்றத்தின் பதினாறாவது சட்டமன்றக் கூட்டத்திற்கு என் முதல் உரையை நிகழ்த்துவதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன். இம்மாமன்றம் நீண்ட நெடிய பாரம்பரியமும், வரலாறும் கொண்டுள்ளது. நீங்கள் அனைவரும் இந்தப் பெருமைமிகு தொடர்ச்சியின் வழித்தோன்றல்கள். உங்கள் அனைவருக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளையும், பொங்கல் திருநாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தாண்டில் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் வளமும், நலமும் பெற்று மகிழ்வுடன் வாழ உளமார வாழ்த்துகிறேன்.

★ பதவியேற்ற முதல் நொடியிலிருந்தே, ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தையும் முடுக்கிவிட்டு, மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தி, ஆக்ஸிஜனும் அத்தியாவசிய மருந்துகளும் மாநிலமெங்கும் கிடைப்பதை உறுதிசெய்து, தடுப்பூசிப் பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி, கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலையைத் திறம்படக் கையாண்ட மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். மாநிலத்தின் பொருளாதாரமும், மக்கள் வாழ்வாதாரமும் பெருமளவில் பாதிப்படையாமல், கொரோனா பெருந்தொற்றை இந்த அரசு வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய முறை நமது நாட்டிற்கே முன்னோடியாக அமைந்தது.



★ கோவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த, மக்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கான பல சிறப்பு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும், வாரந்தோறும் மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அரசு பொறுப்பேற்றபோது, தடுப்பூசிகளுக்குத் தகுதியானவர்களில் 8.09 சதவீத மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 2.84 சதவீத மக்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும் என்ற குறைந்த அளவிலேயே செலுத்தப்பட்டிருந்தது. இந்த அரசின் சீரிய முயற்சிகளால் இந்நிலை மாறி, ஏழே மாதங்களில் 86.95 சதவீத மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 60.71 சதவீத மக்களுக்கு இரண்டாம் தவணையும் என 8.55 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகள் முழுமையான வெற்றிபெறத் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

★ கடந்த 25 டிசம்பர் அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்துள்ள புதிய கொள்கையைப் பின்பற்றி, 15 முதல் 18 வயதுள்ள குழந்தைகளுக்குத் தடுப்பூசிகளை மாநில அரசு வழங்கி வருகின்றது. மேலும், முன்களப் பணியாளர்களுக்கும், சுகாதாரப் பணியாளர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் கூடுதல் தவணையில் (precaution dose) தடுப்பூசிகள் வழங்கப்படும்.



★ அண்மையில், தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பெருவாரியான மாநிலங்களில் கொரோனாவின் உருமாறிய ஒமைக்ரான் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. இதன் பரவலைத் தடுப்பதற்காக, பன்னாட்டு விமான நிலையங்களில் சோதனையும், ஆய்வுச் செயல்முறைகளையும் அரசு வலுப்படுத்தியுள்ளது. கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலையின் அனுபவத்தின் அடிப்படையில், நமது நாட்டிற்கே எடுத்துக்காட்டாக மரபணு வரிசை முறை சோதனை வசதிகள் இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

RT-PCR சோதனை வசதிகளை அதிகரித்தல், ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் பி.எஸ்.ஏ ஆலைகளை (PSA Plants) நிறுவுதல், அவசர சிகிச்சை படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது. இப்புதிய மாற்றம் பெற்ற வைரஸின் சவால்களை எதிர்கொள்வதற்கு அரசு முழுமையான தயார் நிலையில் உள்ளது.

★ கொரோனா தொற்றால் உயிரிழந்த முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு 25 இலட்சம் ரூபாயும், பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாயும் நிவாரணமாக இந்த அரசு வழங்குகின்றது.

இது மட்டுமன்றி, இத்தொற்றால் உயிரிழப்பு நேர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும், மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா 50,000 ரூபாயை நிவாரண நிதியாக வழங்கத் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுவரை, 27,432 குடும்பங்களுக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ இந்த அரசு பொறுப்பேற்ற பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு தரப்புகளிலிருந்து ரூ.543 கோடி நன்கொடையாகப் பெறப்பட்டது. இந்நிதியிலிருந்து, இதுவரை கோவிட் தடுப்பு, நிவாரணப் பணிகளுக்கு ரூ.541.64 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு 72,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இக்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம், கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளில் அனைத்து சிகிச்சைகளையும் இலவசமாகப் பெறலாம் என இந்த அரசு அறிவித்துள்ளது. இதன் பயனாக, இதுவரை 33,117 பேர் ரூ.387 கோடி மதிப்பிலான சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்.

★ மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடத்திற்கே கொண்டு சேர்க்கும் வகையில் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதைத் தடுக்கும் வகையில் மொத்தம் ரூ.257 கோடி செலவில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை, 42,99,294 நோயாளிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட 'வருமுன் காப்போம்' திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

★ சாலை விபத்துகளால் ஏற்படும் விலைமதிப்பற்ற உயிர்களின் இழப்புகளைக் குறைக்கும் வகையில், 'இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்' என்ற உன்னதத் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் அளிக்கப்படும் அவசர சிகிச்சைகளுக்கான செலவை அரசே ஏற்கும். இத்திட்டத்தில், முதற்கட்டமாக 609 மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை, விபத்துகளில் சிக்கிய 4,482 பேர்கள் அவசர சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்.

★ வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் சென்னை உட்பட, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், வரலாறு காணாத மழைப் பொழிவும் வெள்ளப் பெருக்கும்



ஏற்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையில், முன்னெச்சரிக்கையாகச் சரியான நேரத்தில் அணைகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் உபரி நீர் விடுவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கப்படுவதை உறுதிசெய்து, பேரிடர் நிவாரணப் பணிகளை முன்னின்று நடத்தியது பாராட்டிற்குரியது. துல்லியமான திட்டமிடல், திறன்மிகு மேலாண்மை, தீவிர மேற்பார்வையின் காரணமாக உயிரிழப்புகள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன. இருப்பினும், சாலைகள், பாலங்கள், நீர்நிலைகள் போன்ற கட்டமைப்புகளும், பயிர்களும் கடுமையாக சேதமடைந்துள்ளன. நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 6,230 கோடி ரூபாய் நிதியைக் கோரி விரிவான கோரிக்கைகளை இந்த அரசு அளித்துள்ளது. வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை மறுசீரமைக்க, தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

★ இனி வரும் காலங்களில் சென்னையில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு, நீண்டகாலத் தடுப்பு மற்றும் மேலாண்மை குறித்த



பரிந்துரைகளை வழங்குவதற்கென ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று, வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட நீண்டகால நடவடிக்கைகளை இந்த அரசு செயல்படுத்தும்.

★ கோவிட் பெருந்தொற்றின் இரண்டாவது அலையாலும், வரலாறு காணாத மழை வெள்ளத்தாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பொங்கல் திருநாளை



மகிழ்வுடன் கொண்டாடும் வகையில், ரூ.1,297 கோடி செலவில், மாநிலத்திலுள்ள 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 19 மளிகைப் பொருட்களும், கரும்பும் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

★ மாநிலத்திற்கு வழங்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு 30.06.2022 அன்று முடிவுக்கு வருகிறது. முந்தைய மதிப்புக்கூட்டு வரி முறையைச் செயல்படுத்தியபோது, அதிக வரிவசூல் வளர்ச்சி விகிதத்தை மாநிலம் கண்டது. ஆனால், சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அத்தகைய வளர்ச்சி விகிதத்தை அடைய இயலவில்லை. கோவிட் பெருந்தொற்றினால் இந்த நிலை மேலும் மோசமடைந்துள்ளது. மாநிலத்தின் வருவாய் இயல்புநிலைக்குத் திரும்பாததால், குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இழப்பீடு வழங்குவதைத் தொடராவிட்டால் இது மாநில அரசுகளின் நிதிநிலையைப் பெருமளவில் பாதிக்கும். எனவே, சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு வழங்குவதை, குறைந்தபட்சம் 30.06.2024 வரை நீட்டிக்க வேண்டும் எனச் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தையும் ஒன்றிய நிதி அமைச்சகத்தையும் இவ்வரசு வலியுறுத்தும்.

★ 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு இலட்சம் கோடி (one trillion) டாலர் என்ற இலக்கை எய்த வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார். இதற்காகப் பல்வேறு திட்டங்களையும் கொள்கைகளையும் அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது. இந்த இலக்கை நிறைவேற்ற 'ஒரு இலட்சம் கோடி டாலர் பொருளாதாரத்தை நோக்கி' என்ற விரிவான செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். தொழில் நடத்துவதை எளிதாக்குவதற்கும், பொதுமக்கள், நிறுவனங்களின் இணக்கச் சுமையைக் குறைப்பதற்கும் பல தீவிர முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகின்றது.

புதிய ஒற்றைச் சாளர இணைய முகப்பையும், அதை எளிதாகச் செயல்படுத்துவதற்கு அலைபேசி செயலி ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும், கடந்த சட்டமன்ற அமர்வின் போது, 165 காலாவதியான, தேவையற்ற சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.



★ புகழ்பெற்ற ஆங்கில வார இதழ் ஒன்று மேற்கொண்ட ஆய்வில், 'சிறந்த முதலமைச்சர்' என மாநில மக்கள் மனத்தில் இடம்பெற்ற முதலமைச்சர் என்ற தலைப்பில், நமது முதலமைச்சர் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளார். பதவிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திலேயே இத்தகைய சாதனை புரிந்துள்ளது மிகவும் பாராட்டிற்குரியது.

★ 'மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்ப்போம்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை நினைவில் கொண்டு இந்த அரசு செயல்படுகிறது. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின் முதல் 100 நாட்கள் முடிவில் 2,29,216 மனுக்களுக்கு மனநிறைவு அளிக்கும் வகையில் தீர்வுகள் காணப்பட்டன.



அரசின் இந்த சீரிய நிருவாகம் சிறப்புறத் தொடரும் நோக்கத்தில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறையையும் முதலமைச்சரின் தனிப் பிரிவையும் (CM Cell) இணைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் 'முதல்வரின் முகவரி' என்கிற தனித்துறை ஒன்றை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

★ தமிழ்மொழியைப் போற்றி, அதன் செம்மையை நிலைநாட்டுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. மனோன்மணீயம் சுந்தரனார் அவர்கள் இயற்றிய 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு நிகழ்ச்சிகளில் பாட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். இப்பாடலைத் தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக (State Song) அதிகாரப்பூர்வமாக அறிவித்து, இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெறும் அனைத்துப் பொது நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில், தக்க முறைப்படி தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயமாகப் பாடப்பட வேண்டும். தனியார் அமைப்புகளிலும் இத்தகைய நடைமுறையை ஊக்குவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

★ 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' திட்டத்தின் மூலம், அரசு அமைப்புகள், தனியார்ப் பள்ளிகள், கடைகள், வணிக நிறுவனங்கள் என அனைத்திலும் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956இல் புதிய வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்படும்.

தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் படிப்புகளுக்கான 100 பாடப் புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

★ ஜனவரி 12ஆம் நாள் 'அயலகத் தமிழர் நாளாக' அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாள் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்படும். பல்வேறு நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள தமிழர் நலச்சங்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், அயலகத் தமிழர்களுக்குத் தாய்த் தமிழகத்துடன் உள்ள உறவு வலுப்பெறுவதுடன், தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் முதலீடுகளை ஈர்க்கவும் உதவும். அயலகத் தமிழர்கள், அவர்களது சொந்த ஊர்களில் கட்டமைப்புகளின் மேம்பாட்டிற்கு உதவுவதற்கு 'தாய் மண்' திட்டம் வழிவகை செய்யும்.

★ தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நலனைப் பேணிக்காப்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களின் வாழ்விடச்



சூழலை மேம்படுத்தும் வகையில், முதற்கட்டமாக ரூ.176 கோடி செலவில் 3,510 புதிய வீடுகளைக் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், உயர்த்தப்பட்ட பணக்கொடை, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கல்வி ஊக்கத்தொகை, இலவச ஆடைகள், பாத்திரங்கள், இலவச எரிவாயு இணைப்பு போன்ற பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

★ மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைத் திறம்பட நிலைநாட்டுவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகின்றது. பெருநகரச் சென்னை பகுதியில் காவல் துறையின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு, ஆவடியிலும், தாம்பரத்திலும் இரண்டு புதிய காவல் ஆணையரகங்களை அரசு தொடங்கியுள்ளது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் திறம்படப் பணியாற்றிய காவல்துறையினரின் சேவைகளைப் பாராட்டும் வகையில், 1.17 இலட்சம் காவல் துறையினருக்குத் தலா ரூ.5,000 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பு இந்த அரசின் தலையாய கடமையாகும். குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்காக, குறிப்பாகக் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021ஐ இந்த அரசு வெளியிட்டுள்ளது. கல்வி நிறுவனங்களின் அருகில் போதைப் பொருட்களின் விற்பனையைத் தடுப்பதற்கு, கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.



★ உழவர்களின் நலனைப் பேணிக்காப்பதற்கும், வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கும் உயர் முக்கியத்துவத்தை இந்த அரசு அளிக்கின்றது. தக்க நேரத்தில் கால்வாய்களைத் தூர்வாரி, மேட்டூர் அணையிலிருந்து நீரை விடுவித்து, குறுவை சாகுபடியை ஊக்குவிக்க ரூ.61 கோடியில் குறுவை சாகுபடித் தொகுப்பும் வழங்கப்பட்டது. இதன் விளைவாக, இவ்வாண்டு 4.9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்து, வரலாறு காணாத சாதனை படைக்கப்பட்டுள்ளது.

★ அண்மையில் ஏற்பட்ட எதிர்பாராத மழை வெள்ளத்தால் நெற்பயிர்கள் சில பகுதிகளில் சேதமடைந்தன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயரைத் தீர்க்கவும், மறுபயிரிடச் செய்யத் தேவையான இடுபொருட்களை வாங்கவும் ஒரு ஹெக்டேருக்கு ரூ.6,038 இழப்பீடு அரசு அறிவித்துள்ளது. மாநில அரசின் தொடர் முயற்சியால் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 25 இலட்சம் விவசாயிகள் இணைந்துள்ளனர். இத்திட்டத்தில் 37 இலட்சம் ஏக்கர் பயிர்க் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

★ மாநிலத்தின் வளமிக்க உயிரினப் பன்மயத்தையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஒவ்வோராண்டும் பெருமளவில் பறவைகள் வருகை தரும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கழுவேலி சதுப்புநிலங்களை, மாநிலத்தின் 16ஆவது பறவைகள் சரணாலயமாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பள்ளிக்கரணை சதுப்புநிலத்தில் புதிய சூழல் பூங்காவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வு என்ற தமிழர்களின்



தொன்மையான பண்பாட்டை மீட்டெடுக்கவும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் நெகிழிகளால் உண்டாகும் தீங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், 'மீண்டும் மஞ்சப்பை' என்னும் மக்கள் இயக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.

★ தமிழ்நாடு அதிக அளவில் கனிமவளங்களைக் கொண்டிருந்தாலும், அதற்கேற்ற வருவாயை மாநில அரசு பெறுவதில்லை. மேலும், கடந்த 10 ஆண்டுகளாகக் கனிமங்களிலிருந்து பெறப்படும் வருவாயில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில், சுரங்கப் பணிகள் மேற்கொள்வதற்கும், அரசிற்கு உரிய வருவாயைத் திரட்டுவதற்கும் 'இயற்கை வள மேலாண்மைத் திட்டம்' ஒன்று வகுக்கப்படும்.

★ பல ஆண்டுகளுக்குப் பின் முல்லைப் பெரியாறு அணையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள அளவான 142 அடி உயரத்திற்கு நீரை இந்த ஆண்டு தொடர்ந்து பல நாட்கள் தேக்க முடிந்தது. மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்பாணையின்படி அணையின் முழுக் கொள்ளளவான 152 அடியை எய்தத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

★ அண்டை மாநிலங்களுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்கும் அதே வேளையில், நதிநீர்ப் பங்கீட்டில் தனது உரிமைகளை ஒருபோதும் கைவிடாமல், தனது நியாயமான பங்கிற்காகத் தமிழ்நாடு தொடர்ந்து போராடும். காவிரி ஆற்றில் கர்நாடக அரசால் மேகதாதுவில் அணை கட்டும் திட்டத்தை, உழவர்களின் நலன் மீது அக்கறை கொண்ட இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

★ கிராமப்புறப் பொருளாதாரத்தில் உழவர்களின் வருவாயைப் பெருக்குவதிலும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதிலும், கால்நடை வளர்ப்பு வகிக்கும் முக்கியமான பங்கை இந்த அரசு நன்கு அறியும். இலவச கால்நடை மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக, குறிப்பாகத் தொலைதூர கிராமங்களில் 7,760 சிறப்புக் கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

★ நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். தற்போது இலங்கையில் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 68 மீனவர்களையும் 75 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். தொடர்ந்து ஏற்படும் இந்நிகழ்வுகளுக்குச் சுமூகமான தீர்வுகாண, இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் நேரடிப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகத்தைக் கேட்டுக்கொள்கிறோம். மேலும், இயற்கைச் சீற்றங்களிலிருந்து நமது மீனவர்களைப் பாதுகாப்பதற்காக, தடையில்லாத் தகவல் தொடர்பு அமைப்புகளை வழங்க, மாநிலத்தில் உள்ள அனைத்து இயந்திரப் படகுகளிலும் தகவல் தொடர்பு கருவிகளை (transponders) நிறுவ இந்த அரசு திட்டமிட்டுள்ளது. மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகை ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000லிருந்து ரூ.6,000ஆக உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டில் 1.22 இலட்சம் மீனவர் குடும்பங்களுக்கு ரூ.74 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதில் அரசு உறுதியாக உள்ளது. ஊரடங்கு காலத்தின் போது மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல இயலாததால், 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இழப்புகளை ஈடு செய்வதற்காக, 'இல்லம் தேடி கல்வி' என்ற முன்னோடித் திட்டம் சுமார் ரூ.200 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது.




மக்களின் பங்களிப்புடன் தன்னார்வலர்கள் மூலமாக 12 மாவட்டங்களில் முன்மாதிரி அடிப்படையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இத்திட்டம் தற்பொழுது மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, 80,138 இல்லம் தேடி கல்வி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

★ இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளைச் சார்ந்த 80,000 அலுவலர்களைப் பயன்படுத்தி, GPS செயலி வாயிலாக முறையாகக் கணக்கெடுத்து 1,73,792 குழந்தைகள், அவர்களின் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் வெற்றிகரமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில்தான் வடிவமைக்கப்படுகிறது என்பதை நமது அரசு நன்கு உணர்ந்துள்ளது. தாய்மொழிப் பற்றும், உலகை வெல்ல உதவும் ஆங்கிலமும் இணைந்த இருமொழிக் கொள்கை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகநீதிப் பார்வை, அறிவியல் வழிச் சிந்தனையும், தொழில் முனையும் திறனும் படைத்த இளைஞர் சமுதாயம், கலை, இலக்கியம், விளையாட்டு என பன்முகத்திறன் கொண்ட வெற்றியாளர்களை உருவாக்குதல் ஆகியவற்றை முதன்மை இலக்குகளாக முன்வைத்துச் செயலாற்றிட பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம். இந்த உயரிய நோக்கங்களுக்குச் செயல்வடிவம் தந்திடும் வகையில், மாநிலக் கல்வி அமைப்பின் முதுகெலும்பாய்த் திகழும் அரசுப் பள்ளிகளை நவீனமாக்கிட ஒரு மாபெரும் திட்டம் அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

★ தமிழ்நாட்டிலுள்ள 24,345 அரசுத் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms), உயர்ந்துவரும் மாணவர் சேர்க்கைக்கேற்பப் புதிய கட்டடங்கள், 6,992 நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், நவீன அறிவியல் மற்றும் மொழி ஆய்வகங்கள், அனைத்துப் பள்ளிகளுக்கும் அகன்ற அலைவரிசை (broadband) வசதி, தூய்மையான பராமரிப்புடன் கூடிய சுகாதார வளாகங்கள் உருவாக்கப்படும். இவை மட்டுமன்றி, நாட்டின் தலைசிறந்த



கல்வியாளர்களின் வழிகாட்டுதலுடன் ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகளும், மாணவர்களுக்கான மென்திறன் வளர்ப்புப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

★ மாநிலத்திலுள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தையும் மேம்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது. கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகள், அனைத்துப் பல்கலைக்கழகங்களில் உள்ள பேராசிரியர்களும் மாணவர்களும் பயனடையும் வகையில் உயர்தரத் தகவல் தொழில்நுட்பத் தளங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் வகையில், வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, உயர்கல்வி பாடத்திட்டத்தை மறுசீரமைக்கவும் அரசு முயற்சி செய்து வருகின்றது. இது தவிர, தொழில்துறையின் உதவியுடன் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பாடத் திட்டத்தையும் ஆய்வக வசதிகளையும் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ முன்னுரிமை அடிப்படையில் 7.5 சதவிகித ஒதுக்கீட்டில் பொறியியல் போன்ற தொழிற்படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், இதுவரை 8,371 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.181 கோடி செலவிடப்படும்.

★ தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கி, நிருவாகத் திறனை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். பல்வேறு துறைகளின் தரவுகளை, ஒருங்கிணைத்து ஆராய்வதன் மூலம், அரசுத் திட்டங்களின் பலன்களை உரிய பயனாளிகளுக்குக் கொண்டு செல்வதே 'தரவுத் தூய்மைத்' திட்டத்தின் நோக்கமாகும். வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வையும் மேம்படுத்தி, கோப்புகளின் மீது விரைவாக முடிவெடுக்கவும் மின் அலுவலக முறையை (E-Office) செயல்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் சொத்துகளைத் திறம்பட மேலாண்மை செய்வதற்குத் தகுந்த தொழில்நுட்பத்துடன் கணினிமயமாக்கப்பட்ட அமைப்பு ஒன்று செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

★ தரவு மையங்களில் (Data Centres) ரூ.30,000 கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து, தரவு மைய முதலீடுகளின் முகவரியாகத் தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. மேலும், அதிக முதலீட்டை ஈர்ப்பதற்கும் தரவு மையங்கள் அமைப்பதை எளிதாக்குவதற்கும் 'தரவு மையக் கொள்கை–2021' என்ற புதிய கொள்கையை அரசு வெளியிட்டுள்ளது.



★ தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாகத் தமிழ்நாட்டை மாற்றிட இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பின், கடந்த ஏழு மாதங்களில், மூன்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியது.

இதன் பயனாக, ரூ.56,230 கோடி முதலீட்டில் 1,74,999 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதில், இதுவரை ரூ.21,508 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கோவிட் பெருந்தொற்றுக் காலத்திலும் கூட இத்தகைய பெருமளவு முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது, இந்த அரசின் மீது தொழில்முனைவோர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நற்சான்றாக அமைந்துள்ளது.

★ தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, தமிழ்நாடு நிதிநுட்பக் (Fintech) கொள்கை ஆகிய இரண்டு புதிய கொள்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார். தமிழ்நாட்டின் பொருளாதாரம், 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு இலட்சம் கோடி டாலர் என்ற இலக்கை அடைய இக்கொள்கைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கும்.




★ மருத்துவக் கருவிகள் உற்பத்தித் துறை, ஒரு வளர்ந்து வரும் துறையாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தொழிலுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக, ஒரகடத்தில் 150 ஏக்கர் பரப்பளவில் மருத்துவக் கருவிகள் பூங்கா ஒன்றை அரசு அமைத்து வருகின்றது.

நமது நாட்டிற்கே முன்னோடியாக, ஒரு மாபெரும் அறைகலன் பூங்காவினை (Furniture Park) தூத்துக்குடியில் 1,100 ஏக்கர் பரப்பளவில் இந்த அரசு அமைத்து வருகின்றது. இந்தப் பூங்காவில் தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பூங்காவின் முதல் கட்டப் பணிகளை இம்மாத இறுதிக்குள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரு பூங்காக்கள் மூலம், கிட்டத்தட்ட மூன்று இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

★ மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புகளை அளிப்பதிலும் ஒரு முக்கியக் காரணியாக குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை விளங்கி வருகிறது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடிகளைக் களையவும், கடன்



பெறுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும் இந்த அரசு பல விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் அதிக கடன் வழங்குவதை ஊக்குவித்து, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கு இவ்வரசின் தமிழ்நாடு மாநிலக் கடன் உத்தரவாதத் திட்டம் வழிகோலும்.

★ வரும் ஆண்டு தொடங்கப்பட உள்ள வேளாண்–தொழில்களுக்கான பெருவழித் திட்டம், காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் தொழில் கட்டமைப்பு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், ஐந்து புதிய தொழிற்பேட்டைகளை ரூ.241 கோடி செலவில் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறு, சிறு, நடுத்தரத் தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில், 31 தொழிற்பேட்டைகளில் மனைகளின் விலை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது.

★ எதிர்காலத்தில் ஏற்றம் பெறக்கூடிய தொழில்களாகக் கண்டறியப்பட்ட துறைகளில் நமது மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காகத் தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன தொழிற்பயிற்சிகள் அரசால் தொடங்கப்படும்.

★ கோவிட் பெருந்தொற்றினால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை இந்த அரசு உணர்ந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலுவையிலிருந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய தள்ளுபடித் தொகையான ரூ.160 கோடியை அரசு விடுவித்துள்ளது. இத்துடன் மின்–வணிக வலைதளம், 'TNKhadi' என்ற கைபேசி செயலி போன்ற பல்வேறு புதுமையான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டுள்ளது.

★ குறைந்த மின் அழுத்தத்தையும், கூடுதல் மின்சுமையைத் தவிர்க்கவும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் 8,905 மின்பகிர்மான மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், இந்த ஆண்டு ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது.



நாடு முழுவதும் நிலக்கரிப் பற்றாக்குறை நிலவியபோதும், பெருமளவில் மழை வெள்ளத்தால் பாதிப்புகள் ஏற்பட்டபோதும், தங்குதடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டதற்கு இந்த அரசின் சீரிய முயற்சிகளே காரணமாகும்.

★ உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் மக்களாட்சியினைக் கடைக்கோடியிலும் உறுதிப்படுத்துவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வரசு பதவியேற்றவுடன், நீண்டகாலமாக நடைபெறாமலிருந்த ஒன்பது மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தியது. மேலும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 02.10.2021 அன்று, அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைகள் நடைபெற்றன. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களையும் விரைவில் நடத்திடத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது.

★ அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம், கிராமங்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு இந்த அரசு புத்துயிர் அளித்துள்ளது. இந்த ஆண்டு 1,997 ஊராட்சிகளில் ரூ.1,200 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தையும், பகுத்தறிவு சிந்தனையையும் ஊக்குவிப்பதற்காக 4,116 கிராமப்புற நூலகங்கள் ரூ.92 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படுகின்றன. 1997ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டுவரை கட்டப்பட்ட 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களின் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் இந்த ஆண்டு முதல், படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

★ நாட்டில் நகர்ப்புறங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நகர்ப்புறங்களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்த அரசு தீர்மானித்துள்ளது. சாலைகள், தெரு விளக்குகள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், நீராதார அமைப்புகள், மின் மயானங்கள் போன்ற கட்டமைப்புகளை ஏற்படுத்த, ரூ.1,000 கோடி ஒதுக்கீட்டில் 'கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்' அரசால் செயல்படுத்தப்படுகின்றது. வளர்ச்சித் திட்டங்களில் மக்களை நேரடியாக ஈடுபடுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு, நிறைவாகச் செயல்பட்ட 'நமக்கு நாமே திட்டம்' மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ நகர்ப்புற ஏழைமக்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கு ரூ.100 கோடி மதிப்பீட்டில் 'நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்' அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், சமூகப் பாதுகாப்பை வழங்குவது மட்டுமல்லாமல் பொதுச்சொத்துக்களை உருவாக்கிப் பராமரிக்கவும் உதவும். இத்திட்டத்தில், இதுவரை, 31,620 நபர்கள் பணிபுரியக் கண்டறியப்பட்டு, 18,526 நபர்களுக்கு வேலைக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ தலைநகர் சென்னையின் வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. இதற்காக, ரூ.500 கோடி மதிப்பில் சிங்காரச் சென்னை 2.0 திட்டம், 430 மில்லியன் டாலர் மதிப்பில் சென்னை மாநகரக் கூட்டாண்மைத் திட்டம், ரூ.905 கோடி மதிப்பில் சென்னை மாநகரத் திறன்மிகு போக்குவரத்து அமைப்பு போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தி சாலைகள், போக்குவரத்து, வெள்ளநீர் வடிகால்கள், குடிநீர் வழங்கல், பொழுதுபோக்கு வெளிகள் உள்ளிட்ட சமூகக் கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தி வருகின்றது.



★ அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டைக் குடிசைகளற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்லாமல், குடிசைகளில் வாழும் மக்களின் வாழ்விடத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது என்ற அரசின் நோக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயர் ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ என மாற்றப்பட்டது. நகர்ப்புற ஏழைமக்கள் குறைந்த விலையில் குடியிருப்புகளைப் பெறும் வகையில், பயனாளிகளின் பங்களிப்புத் தொகை குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தொகையை எளிதாகத் தவணை முறையில் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்களின் ஈடுபாட்டுடன் குடியிருப்புகளை முறையாகப் பராமரிப்பதை உறுதி செய்ய, ‘நம் குடியிருப்பு நம் பொறுப்பு’ என்ற திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ பொருளாதாரத்தையும், சமூக வளர்ச்சியையும் உயர்த்துவதற்கு மாநிலத்திலுள்ள சாலைகளின் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் இந்த அரசு கவனம் செலுத்துகிறது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில், இந்த ஆண்டில், ரூ.2,989 கோடி மதிப்பீட்டில் 894 கி.மீ. சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். சென்னைப் பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, ரூ.407 கோடி மதிப்பீட்டில், பரங்கிமலை – மேடவாக்கம் சாலை சந்திப்பில் கீழ்ப்பாலம், பரங்கிமலை – பூந்தமல்லி – ஆவடி சாலையில் பல்வழி மேம்பாலம், மத்திய கைலாச சந்திப்பில் மேம்பாலம் என மூன்று முக்கியத் திட்டங்களுக்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினால், கடந்த நான்கு மாதங்களில் மகளிர் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவிகிதத்திலிருந்து 61 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம், பெண்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும். ஒருங்கிணைந்தப் பன்முறை நகரப் போக்குவரத்து வசதிகளை உறுதி செய்வதற்கும், பயணிகளுக்குச் செல்லிடம் வரை போக்குவரத்து இணைப்பை வழங்கவும், சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சிற்றுந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டின் பார் போற்றும் வரலாறு, செழுமையான பண்பாடு, இயற்கை வளங்களின் அழகியல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் வாயிலாக, மாநிலத்தில் சுற்றுலா மூலம் பொருளாதாரம் பொலிவு பெறுவதற்கான திட்டம் அரசால் வகுக்கப்படும். இந்த ஆண்டு, சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலாக் கொள்கை வெளியிடப்படும்.

★ கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதி செய்ய, ஒவ்வொரு குழந்தைக்கும் ஐந்து இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத்தொகையாக அரசு வைத்து வருகின்றது. வைப்பீடு செய்யப்பட்ட அத்தொகை குழந்தைகள் 18 வயதை எட்டும்போது அவர்களுக்கு வட்டியுடன் வழங்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாக 287 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைக்கு மூன்று இலட்சம் ரூபாய் உடனடி நிவாரணமாக



வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் இதுவரை 7,513 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

★ பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012இன் கீழ், நிவாரணம் வழங்கப்பட்ட குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கவும் இழப்பீட்டுத் தொகை வழங்கவும், ‘தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டுநிதி’ என்றஒருசிறப்புநிதியைஅரசுஉருவாக்கியுள்ளது. இதன் மூலம், இதுவரை 103 குழந்தைகளுக்கு இரண்டு கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது இந்த அரசு கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

★ மகளிரின் மேம்பாட்டிற்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், 1989ஆம் ஆண்டில் நாட்டிற்கே முன்னோடியாக தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் தொடங்கப்பட்டது. அந்த விதை இன்று ஆல்போல் தழைத்து, மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது.

இந்த நிதியாண்டில், 4,02,829 உறுப்பினர்களைக் கொண்ட 29,425 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, ரூ.20,000 கோடிக்கு மேலாக சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். இதுவரை 1,83,096 சுய உதவிக் குழுக்களுக்குப் பல்வேறு வங்கிகள் மூலம் ரூ.14,872 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆக வேண்டும் என்ற தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கனவை நனவாக்கும் வகையில், பல்வேறு சாதிகளைச் சேர்ந்த 58 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்குப் பணி நியமன ஆணைகளை இந்த அரசு வழங்கியுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சுமார் ரூ.1,628.61 கோடி



மதிப்பில் 432.82 ஏக்கர் பரப்பளவு ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 'ஒரு கால பூஜை' திட்டத்தில் 12,959 கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக 1,000 ரூபாயை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.



கோயில்களிலும், கோயில்களுக்குச் சொந்தமான திருமண அரங்குகளிலும் மாற்றுத்திறனாளிகளின் திருமணங்களுக்குக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாது என அரசு உத்தரவிட்டுள்ளது.

★ கோயில்களின் வரலாறு, கட்டடக்கலை, பக்தி இலக்கியங்கள் உள்ளிட்ட செந்தமிழ் இலக்கியங்கள் குறித்த புத்தகங்களை வெளியிடுவதற்கு, நவீன வசதிகளுடன் பதிப்பகப் பிரிவு இந்து சமய அறநிலையத் துறையால் அமைக்கப்படும். கோயில்களிலும் மடங்களிலும் கிடைக்கப்பெறும் அரிய பனைவோலைச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கோயில்களின் வரலாறு, மரபு, பண்பாடு, தமிழ் மொழி தொடர்பான நூல்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தும் புத்தகக் கடைகளை முக்கிய கோயில்களில் அமைத்திட ஊக்குவிக்கப்படும். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பழமைவாய்ந்த திருக்கோயில்களைப் பழமை மாறாமல் புதுப்பிக்கவும், புனரமைத்துப் பாதுகாத்திடவும் உரிய ஆலோசனைகளை வழங்கிட, மிகுந்த அனுபவம் வாய்ந்த மத்திய, மாநிலத் தொல்லியல் துறைகளிலிருந்து ஓய்வுபெற்ற அலுவலர்கள் தொல்லியல் ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருக்கோயில் நிலங்களை மீட்டெடுப்பதிலும், திருக்கோயில் சொத்துகளைச் சிறப்பாக மேலாண்மை செய்வதிலும், இந்த அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

★ அண்மையில் தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகமானது 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிவியல்ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. தொல்லியல் களங்களைப் பாதுகாக்கும் வகையில், தொல்லியல் களங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல்





இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தடைவிதித்துள்ளது.

★ சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும், குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளோருக்குச் சுயமரியாதை, கண்ணியம் மற்றும் சமூக நீதியை உறுதிப்படுத்துவதே திராவிட இயக்கத்தின் அடிப்படை சித்தாந்தம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நரிக்குறவர், இருளர் ஆகியோர் குடும்பங்களின் இருப்பிடத்திற்கே சென்று, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றியது போன்ற செயல்கள், விளிம்பு நிலையில் உள்ளோர் மீது அவர் வைத்திருக்கும் தனிப்பட்ட அக்கறையை வெளிப்படுத்துகின்றது.



★ பட்டியலின, பழங்குடி மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தன்னாட்சி அதிகாரங்களுடன், சட்டப்படி அமைக்கப்பெற்ற தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தை அரசு உருவாக்கியதன் மூலம், அவர்களின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை உயர்த்துதல், புதிய விடுதிகளுக்கு ஒப்புதல் அளித்தல், புதிய பயிற்சித் திட்டங்களைத் தொடங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இடையறா முயற்சியின் பயனாக இளநிலை மற்றும் நிறைநிலை மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய அளவிலான இடஒதுக்கீட்டில்

இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (OBCs) 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு சாத்தியமானது. இதுபோன்றே, அனைத்துத் தொழிற் படிப்புகளிலும் அகில இந்திய அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இடஒதுக்கீட்டை உறுதிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். இவ்வாறு, நீதிக்கட்சியின் காலத்திலிருந்தே சமூக நீதிக் கருத்துகளை முன்வைத்து மானுடம் வெல்லும் பாதையில் மற்ற மாநிலங்களை வழிநடத்திச் செல்லும் தமிழ்நாட்டின் வரலாற்றுப் பொறுப்பை இந்த அரசு நிறைவேற்றும்.

★ பொதுவாக, நுழைவுத் தேர்வுகள் கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு சமனற்ற தளத்தையும், பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன. எனவே, தொழிற்படிப்புகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் தேவையற்றன என்ற இந்த அரசின் நிலைப்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

★ சிறுபான்மையினரின் நலனையும், வளர்ச்சியையும் பேணிக் காப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டிலிருந்து ஹஜ், ஜெருசேலம் போன்ற புனிதப்பயணம் மேற்கொள்வோருக்கு மானியத்தை அரசு தொடர்ந்து வழங்கும். சிறுபான்மையினரைக் கவலையடையச் செய்த குடியுரிமை திருத்தச் சட்டத்தினைத் திரும்பப் பெறவேண்டும் என்று இம்மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தின் நோக்கத்தை நிறைவேற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

★ மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது.



அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிய வேலைவாய்ப்புகளைக் கண்டறியும் நோக்கத்தோடு, அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் சமவாய்ப்புக் கொள்கையை வெளியிட வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளைக் கண்டறிய, மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் ஒன்றை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

★ மாநிலத்திலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க இந்த அரசு விழைகிறது. உலக அளவில் நம் மாநில விளையாட்டு வீரர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில் டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் ரொக்கப் பரிசையும், பணி ஆணையையும் வழங்கியுள்ளார்கள்.




தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பாட்டத்தினைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் விளையாட்டு வீரர்களுக்கான அரசுப் பணி இடஒதுக்கீட்டில் சிலம்பாட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது.

★ இந்த அரசு பதவியேற்றபின், கொரோனா பெருந்தொற்றின் இரண்டாம் அலை, எதிர்பாராத மழைப்பொழிவு என எதிர்கொண்ட அனைத்துச் சோதனைகளையும் வென்று அவற்றைச் சாதனைகளாக மாற்றி, மக்களின் நலனிற்காக அயராது செயல்படும் அரசாக இந்த அரசு இயங்குகின்றது. இதே வேகத்துடனும், துல்லியத்துடனும் ஒவ்வொரு நாளும் செயல்படுவோம் என்று உறுதியேற்கிறோம்.

★ சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம், பகுத்தறிவு, அன்புடைமை போன்ற தத்துவங்களை இந்த அரசு கடைப்பிடித்து வருகின்றது.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய உன்னதமான தலைவர்களின் சிந்தனைகள் இந்த அரசின் வழித்தடத்தைத் தீர்மானிக்கின்றன.

★ மக்களின் எதிர்பார்ப்புகளையும், கனவுகளையும் தொடர்ந்து நிறைவேற்றி, இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக நிருவகிக்கப்படும் மாநிலமாக மட்டுமன்றி, தெற்காசிய நாடுகளுக்கே முன்னுதாரணமாக நமது மாநிலத்தை உருவாக்குவோம்.

★ மீண்டும் உங்கள் அனைவருக்கும் என் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, காலத்தை வென்ற மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!**

**வாழிய பாரத மணித்திரு நாடு!**



# இந்த அரசு ஒளிவு மறைவற்ற அரசு மட்டுமல்ல, அனைவருக்கும் ஒளி தரும் அரசு




**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரைத்து 07.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து, 2022ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். அனைவருக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத் தமிழகம் எல்லா வகையிலும் உயர்வையும், மேம்பாட்டையும் அடைய நாம் அனைவரும் சேர்ந்து உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டனாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி அமைந்து நிகழ்த்தப்பட்ட முதல் ஆளுநர் உரையிலே, அனைத்து மாநிலங்களும் தலைநிமிர்ந்து நோக்கும் மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அந்த இலக்கை நோக்கிய பயணத்துக்கு உற்சாகமும், உத்வேகமும் தரக்கூடிய வகையில் இந்தப் புத்தாண்டு, 2022ஆம் ஆண்டு அமையும் என்ற அந்த நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022ஆம் ஆண்டின் தொடக்கத்திலே நடைபெறுகிற முதல் கூட்டத்தொடர் என்கிற காரணத்தால், கடந்த 5ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இந்த மாபெரும் சபைக்கு வருகை தந்து வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் உரையினை ஆற்றினார்கள். பொதுவாக ஆளுநர் உரை, அரசின் கொள்கை அறிக்கை; அதாவது, Statement of Policy என்றுதான் வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலக்கணத்தையே, கடந்த காலத்தில் அ.தி.மு.க. ஆட்சியின்போது ஆளுநர் உரைமீது நான் கருத்துரை எடுத்துச் சொன்ன நேரத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுகுறித்து இந்த மன்றத்தினுடைய பழைய ஏடுகளை எடுத்துப் பார்த்தால் அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் 06.05.1957 அன்று, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். ‘பொதுவாக, ஆட்சியாளர்களுடைய கொள்கைத் திட்டங்களை விளக்குவதே கவர்னருடைய பேருரை என்பதும், அக்கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப நிதியைப் பகிர்ந்தளிப்பதாகிய புள்ளி விவரங்களைக் கொண்டதே, வரவு செலவுத் திட்டம் என்பதுதான் நான் அறிந்துள்ள வரையில் உணர்ந்திருக்கிறேன்'' என்று இவ்வாறு ஒரு சில வரிகளிலேயே, மிகவும் சுருக்கமாக, ஆளுநர் உரை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்; வரவு செலவுத் திட்டம் எப்படி வரையப்பட வேண்டும்; என்று அவருக்கே உரியச் சான்றாண்மையை அவர் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்றுப்படி, ஆளுநர் உரை, மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டு அமைந்துள்ளது என்பதில் நான் உள்ளபடியே, மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆளுநர் உரையைப் படித்து ஆராயும் நடுநிலையாளர்கள், இந்த உரை, கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையாக, அதாவது Statement of Policy and Programme என அமைந்துள்ளதை நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் மனதார நம்புகின்றேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலே என்னுடைய சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தான் ஆற்றிய உரையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வரக்கூடிய விதத்தைப் பற்றி தன்னுடைய உரையிலே சொல்லியிருக்கிறார். அதேபோன்று, அறிவித்துள்ள திட்டங்கள் குறித்தும், செயல்படுத்தவிருக்கும் கொள்கைகள் குறித்தும் ஒவ்வொன்றாக விளக்கிப் பாராட்டிப் பேசியிருக்கிறார். அதற்காக மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இவையெல்லாம் எனக்குக் கிடைத்த தனிப்பட்ட பாராட்டுகள் அல்ல. இந்த அமைச்சரவைக்கே கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். இந்த அரசினுடைய அங்கமாக இருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுக்கள். எங்களை ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்திய மக்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய பாராட்டுகள் எங்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த உழைத்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகள். அத்தகைய உணர்வோடுதான் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கின்றது; ஆளும் கட்சியாகவும் இருந்து மேன்மை கொண்டிருக்கிறது. 04.05.1957 அன்று ஆளுநர் உரைமீது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ''மேன்மை தாங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை; தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டுச் சொன்னார். அத்தகைய நடுநிலை தவறாத மாண்பையும், பக்குவத்தையும் பெற்றிருப்பவர்கள் நாங்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், ''ஆளுகின்றவர்கள் யாரைத் துணை கொள்ளல் வேண்டும் என்பதைப்பற்றி, வள்ளுவர் பெருமான் தன்னுடைய திருக்குறளில், ''பெரியாரைத் துணைக்கோடல்'' என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரைத் தங்களுடைய துணைவராகக் கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைகொள்ள வேண்டும் என்று கூறினார் என்று சொன்னால், எதையும் 'சரி – சரி' என்று சொல்லி, அதைக் கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல. சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன், பகைவர்கள் இல்லையாயினும், தன்னைத்தானே கெடுத்துக் கொள்வான்; கெட்டு விடுவான் என்று சொல்லியிருக்கிறார்.'' என்று முத்தமிழறிஞர் கலைஞர் இந்த அவையிலே பேசியிருக்கிறார்.

இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசாக, பேரறிஞர் அண்ணாவினுடைய அரசாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசாக நடைபோடுகிறது என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அந்த அறிவிப்பில் துளி மாற்றம் எப்போதும் இல்லை; இருக்காது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது ஏராளமான உறுப்பினர்கள் பேசி, அனைவருக்கும் கால அவகாசம் கொடுத்து, பிறகு நான் அவை எல்லாவற்றுக்கும் விரிவான பதிலுரை தருவதற்குக் காலம், நேரம் இல்லாத அளவுக்கு கொரோனா, ஒமிக்ரான் தொற்று மீண்டும் மிரட்டத் தொடங்கியிருக்கிறது. அதனால்தான் அலுவல் ஆய்வுக் குழுவினுடைய முடிவுக்கு ஏற்ப, விரைந்து இந்த அவையை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.இருந்தாலும்,இரண்டுநாட்கள் இந்த அவையில் நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திலே 15 உறுப்பினர்கள் பேசி ஆக்கப்பூர்வமான கருத்துகளை அரசுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக முதலில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க.–வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம் அவர்கள் பேசும்போது, கொரோனா தடுப்புப் பணிகளில் இந்த அரசு துரிதமாகச் செயல்படுகிறது என்று சொன்னார்கள். அதற்காக முதலில் அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்திற்கு அ.தி.மு.க. முழுமையான ஆதரவு தரும் என்று சொன்னதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் நேற்றைய தினம் இங்கே பேசும்போது, ''ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்கு நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இதுகுறித்து நான் ஏற்கெனவே கடந்த 27.11.2021 அன்று ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம் எழுதி ''நூல் விலை ஏற்றத்தினைக் குறைக்க வேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்துள்ளேன். இந்த அரசு நெசவாளர்கள் நலன் காக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப.அப்துல் சமது அவர்கள் ''சிறைச்சாலைகளில் நீண்ட காலமாகச் சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஒரு கோரிக்கை வைத்தார். நான் ஏற்கெனவே அறிவித்தவாறு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 113ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பிறகு பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை ஏற்று, தமிழகச் சிறைச்சாலைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும், பயன்பெற இயலாத – தகுதி பெறாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள், வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் உள்ள உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் உள்ளிட்டவர்கள் குறித்து தற்போது உள்ள சட்ட விதிகளின்படி ஆராய்ந்து பரிந்துரை அளிக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்பட்டுவரும் இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சின்னதுரை மற்றும் திரு. இராமச்சந்திரன் ஆகியோர் பேசும்போது, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது குறித்துப் பேசினார்கள். இந்த அரசு விவசாயிகளின் நலனில் எப்போதும் அக்கறை உள்ள அரசு




என்பதால், கடந்த அக்டோபர் 25ஆம் நாள் தொடங்கி மூன்று கட்டங்களாகப் பெய்த வடகிழக்குப் பருவமழை காரணமாகப் பாதிக்கப்பட்ட, பின் குறுவை பருவத்தில் விளைந்த பயிர்கள், சேதமடைந்த முன் பருவத்தில் பயிரிடப்பட்ட விளைந்த சம்பா நெற்பயிர்கள், மறு நடவுச் செலவு, பயிறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், சிறு தானியப் பயிர்கள், கரும்புப் பயிர்கள், தென்னை பயிர்கள் ஆகியவற்றிற்கு நிவாரணமாக 1 இலட்சத்து 62 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான நிலங்களுக்கு ரூ.132.12 கோடி நிதி மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு, பெரு விவசாயிகள் 2 இலட்சத்து 65 ஆயிரத்திற்கும் மேல் பயனடையும் இந்த நிவாரண நிதி இரண்டொரு நாட்களில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஒன்றிய அரசிடமிருந்து பேரிடர் மேலாண்மை நிதி வரவில்லை என்றாலும், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த அரசு மாநில நிதியிலிருந்து இந்த நிவாரணத் தொகையை வழங்குகிறது என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிந்தனைச் செல்வன் அவர்கள் “நமக்கு நாமே திட்டத்தின்கீழ் உள்ள மூன்றில் ஒரு பங்கு மக்களுடைய பங்கு என்பதைப் பழங்குடியினர் மற்றும் பட்டியல் இன மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகளைத் தளர்த்த வேண்டும்” என்று இம்மாமன்றத்திலே கோரிக்கை வைத்துள்ளார். அடித்தட்டு மக்களின் குரலுக்குத் தொன்று தொட்டு செவி சாய்த்துவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு “நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தமட்டில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு என விதிகள் தளர்த்தப்படும்” என்று நான் அறிவிக்கிறேன்.

அதேபோல், அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் ஸ்மார்ட் கிளாஸ் ரூம் என்று ஆளுநர் உரையில் அறிவிப்பு இடம்பெற்றிருந்தாலும் – மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, “மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மட்டுமின்றி – பழங்குடியினர் நலப் பள்ளிகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகளும் – அதற்குத் தேவையான உட்கட்டமைப்பும், கூடுதலாக நிதி ஒதுக்கி நிறைவேற்றித் தரப்படும்” என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் மாண்புமிகு கோ.க.மணி அவர்கள் பேசும்போது “பெண் குழந்தைகள் பாலியல் சீண்டல்களுக்கு உட்படும் நேர்வுகளில் தொடர்புடைய நபர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்திருந்தார். இதுதொடர்பாக நானே காவல் துறை அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்க, பல்வேறு




நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து 24 ஆயிரத்து 513 முகாம்கள் பள்ளிகள், கல்லூரிகளில் நடத்தப்பட்டுள்ளன. 249 விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. போக்சோ வழக்குகளை விசாரிக்கத் திண்டுக்கல், தருமபுரி, தேனி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் புதிதாக “போக்சோ நீதிமன்றங்கள்” அமைக்கப்படுகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குழந்தைகளுக்கு எதிரான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் இதுவரை 2,363 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பதிவுசெய்யப்பட்ட 338 வழக்குகளில், 135 வழக்குகளில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. வழக்குகளில் விரைவான விசாரணைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் அறிவுறுத்தியதற்கேற்ப, மே மாதத்திற்குப் பிறகு சென்னை இராயப்பேட்டை காவல் நிலையத்தில் 19.05.2021 அன்று போடப்பட்ட போக்சோ வழக்கு ஒன்றில் 23 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்திலே வழக்கு விசாரணை 82 நாட்களில் முடிந்து 31.08.2021 அன்று தண்டனையே வழங்கப்பட்டு விட்டது என்பதை நான் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதுபோன்று முதல் தகவல் அறிக்கைகளில் விரைந்து குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வது, நீதிமன்றங்களில் வழக்கு விசாரணையை விரைவுபடுத்துவது ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திட வேண்டும் என்று காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்கள், “பாக்ஸ்கான் தொழிற்சாலையில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று ஒரு கோரிக்கை வைத்தார் – நேற்றைய விவாதத்தின் போது அதை எடுத்துச் சொன்னார். இத்தொழிற்சாலையில் இருக்கக்கூடிய பெண் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவதாக எனக்குத் தகவல் வந்த உடன் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆகியோரைப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கே அனுப்பி வைத்து, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நான் நடவடிக்கை எடுத்தேன். எனது அறிவுறுத்தலின் பேரில், 23.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் தொழில் துறைக்கான அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு கூறிய ஆலோசனைகளைத் தவறாமல் செயல்படுத்துவதாக ஃபாக்ஸ்கான் நிறுவனமும் உறுதி அளித்திருக்கிறது. இதன் விளைவாக, ஃபாக்ஸ்கான் நிறுவனம் முதற்கட்டமாக இரண்டு விடுதிகளில் தங்கியிருக்கக்கூடிய 500 தொழிலாளர்கள் மூலம் 12.01.2022 அன்று உற்பத்தியைத் தொடங்க உள்ளது என்ற செய்தியும் தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனத்தின் மூலம் ஏறத்தாழ, 18,750 பாக்ஸ்கான் நிறுவன ஊழியர்கள் மற்றும்

பிற நிறுவன ஊழியர்கள் தங்குவதற்கேற்ப வல்லம் வடகாலில் ஒருங்கிணைந்த தங்கும் விடுதி அமைக்கப்படவுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலே செயல்படக்கூடிய அரசு. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு வித்திடும் தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கும் என்றைக்கும் ஆதரவாக இருந்தும், தொழிலாளர்களுடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும் செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த விடுதி ரூ.570 கோடி செலவிலே 20 ஏக்கர் நிலப்பரப்பிலே 8 தொகுதிகளாக 11 மாடிகளைக் கொண்டதாக வடிவமைக்கப்படவுள்ளது. புதுக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொண்டு, 15 மாதங்களில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அம்மா மினி கிளினிக்குகளை மூடிவிட்டோம், அம்மா உணவகத்தைக் கவனிக்கவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டியல் படித்தார். இதுபோன்ற பட்டியலைப் படிக்க வேண்டுமானால் என்னிடம் நிறையவே இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் மாபெரும் சட்டமன்ற – தலைமைச் செயலக வளாகம் கட்டப்பட்டு, அது அன்றைய மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் சட்டமன்றமும் நடந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், சட்டமன்றம் நடந்த இடத்தை மருத்துவமனையாக மாற்றியது யார்? பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு மாடி அளவில் கட்டப்பட்ட மாபெரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற முனைந்ததும், பராமரிக்காமல் பாழடைய வைத்ததும் யார்? அங்கிருந்த பேரறிஞர் அண்ணாவின் சிலையின்கீழ் இருந்த கலைஞர் பெயரை மறைத்தது யார்? கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் கலைஞர் பெயரை நீக்கியது யார்? செம்மொழிப் பூங்காவில் கலைஞர் பெயரைச் செடி, கொடிகளை வைத்து மறைத்துப் பராமரிக்காமல் விட்டது யார்? கடற்கரைப் பூங்காவில் இருந்த கலைஞர் பெயரை எடுத்தது யார்? ராணி மேரி கல்லூரியில் கலைஞர் அரங்கத்தின் பெயரை நீக்கியது யார்? கலைஞர் கொண்டு வந்தார் என்பதற்காகப் பெரியார் பெயரில் அமைந்த சமத்துவபுரங்களை பாழ்படுத்தியது யார்? உழவர் சந்தைகளை இழுத்து மூடியது யார்? தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உடன்குடி பவர் கார்ப்பரேசன் லிமிடெட்டை முடக்கியது யார்? நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம் ஆகியவற்றைக் கிடப்பில் போட்டது யார்? மதுரவாயல்–சென்னை துறைமுக உயர்மட்டச் சாலைத் திட்டத்தை முடக்கியது யார்? சமச்சீர்க் கல்விப் பாடப்புத்தகத்தில் கலைஞர் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும், 7ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் நாடகக் கலை குறித்த பாடத்தில் இருந்த கலைஞர் பெயரையும் ஸ்டிக்கர் வைத்து மூடி மறைத்தது யார்?




இப்படி வரிசையாக நீண்டநேரம் என்னால் சொல்ல முடியும். பல கேள்விகளைக் கேள்வி கேட்க முடியும். இதை எல்லாம் நீங்கள் செய்தீர்கள்–அதனால் நாங்கள் செய்தோம் என்று நான் சொல்ல வரவில்லை. அப்படி நடந்துகொள்ளக்கூடிய எண்ணம் எனக்கு ஒருகாலும் ஏற்பட்டதில்லை; வரவும் வராது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்றைக்கும் இருக்கிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் என்றுதான் இன்னமும் இருக்கிறது. சென்னை உயர்கல்வி மன்றத்துக்குள் அவருக்குச் சிலை இருக்கிறது. அவரது நினைவகம், பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதை இந்த அரசே பராமரித்துக் கொண்டும் இருக்கிறது. அம்மா கிளினிக் என்று பெயர் வைத்தீர்களே தவிர, கிளினிக் இல்லை. இல்லாத ஒன்றை எப்படி இந்த அரசு மூட முடியும்? அம்மா உணவகம் மூடப்பட்டுள்ளது என்று கூறினார்கள். மாண்புமிகு அவை முன்னவர் கூட, கலைஞர் பெயரில் இருந்த திட்டங்களை மாற்றப்பட்ட ஆதங்கத்தில் "ஒரு உணவகத்தை மூடினால் அதில் என்ன தவறு?" என்று ஒரு கேள்வியை எழுப்பினார். என்னைப் பொறுத்தமட்டில், நான் அப்படி நினைக்கவில்லை. எந்த அம்மா உணவகமும் மூடப்படக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். அதனால்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அம்மா உணவகங்கள் தொடரும் என்று நான் அறிவித்தேன். இன்றுவரை அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கிறேன். நிச்சயமாக இருப்பேன், அதில் எந்தவிதத்திலும் மாற்றம் ஏற்படாது என்பதை மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஓராண்டுக்கு ஒருமுறை ஆற்றப்படுவது. ஆனால், சென்ற ஆளுநர் உரைக்கும், இப்போதைய ஆளுநர் உரைக்கும் ஆறு மாதம்தான் இடைவெளி. முந்தைய ஆளுநர் உரை, கடந்த ஜுன் 21ஆம் நாள் ஆற்றப்பட்டது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் மிகக் குறைவுதான். ஆனால், இந்த இடைப்பட்ட காலத்திலே ஏராளமான சாதனைகளையும் நாங்கள் செய்திருக்கிறோம்; ஏராளமான சோதனைகளையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம். கொரோனா என்கிற பெருந்தொற்றுக் காலத்திலே ஆட்சிக்கு வந்தோம். போர்க்கால வேகத்திலே செயல்பட்டோம். அதனால் இரண்டாவது அலைக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். அதிலிருந்து மீண்ட நிலையிலே, வரலாறு காணாத மழை, வெள்ளம் என்கிற இயற்கைப் பேரிடர் நம்மைச் சூழ்ந்தது. அதற்கான நிவாரணப் பணிகளையும் மின்னல் வேகத்திலே செய்து கொடுத்தோம்.

தேர்தலுக்கு முன்பு, நாம் பெற்றிருக்கக்கூடிய நம்பிக்கையை விட, இப்போது பல மடங்கு நம்பிக்கையை மக்களிடையே இந்த அரசு பெற்றுள்ளது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய மனசாட்சி கூட மறுக்காது என்பதை நான் நம்புகிறேன். மக்களுக்கு உண்மையாக இருந்தோம். அதனால் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றுள்ளோம். இதே உண்மைத் தன்மையோடுதான் நான் என்





வாழ்நாள் முழுவதும் செயல்படுவேன் என்று திட்டவட்டமாக இந்த மாமன்றத்திலே உறுதி அளிக்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி இங்கு பேசினார்கள். கொரோனாவைத் தடுக்கின்ற அரண் என்பது தடுப்பூசிதான். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டிலே முதல் தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 8.09 விழுக்காடு மட்டும்தான். இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் 2.84 விழுக்காடு மட்டும்தான். அதாவது முதல் நான்கு மாதங்களில் செலுத்தப்பட்ட தடுப்பூசியின் அளவு இவ்வளவுதான். ஆனால், அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த ஏழே மாதங்களில், மக்களுக்கு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தடுப்பூசி செலுத்திக்கொள்வதை மக்கள் இயக்கமாக ஆக்கினோம். தற்போது தமிழ்நாட்டு மக்களிலே 87.27 விழுக்காடு மக்கள் முதல் தவணை தடுப்பூசி செலுத்தி இருக்கிறார்கள். 61.25 விழுக்காடு மக்கள் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தியிருக்கிறார்கள். இதுவரை மொத்தம் 8.76 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கிறது. 15 முதல் 18 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஜனவரி 3ஆம் தேதி தடுப்பூசி போடும் பணியைத் தொடங்கி வைத்தேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, பள்ளிகளுக்கே சென்று தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 60 வயதுக்கும் மேற்பட்ட எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கும், முன்களப் பணியாளர்களுக்கும் ''கூடுதல் தவணையில்'' தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒமிக்ரான் வைரஸ் தொற்று ஏற்பட்டாலும், அதனால் பெரும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்குத் தடுப்பூசியைப் பெரும்பாலானவர்களுக்குச் செலுத்தியதுதான் காரணம். கொரோனா வார்டுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்தேன். சாலையில் இறங்கி முகக்கவசம் அணியாதவர்களுக்கு முகக்கவசம் அணிவித்தேன். ஒவ்வொரு உயிரும் நமக்கு முக்கியம் என்ற உன்னதமான எண்ணம்தான் இதற்குக் காரணம். உங்களின் அரசாக மட்டுமல்ல; உயிர் காக்கும் அரசாக இந்த அரசு இயங்கி வருகிறது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டு போதுமானது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் மட்டுமல்ல; அனைத்துத் துறைகளும் இந்த அரசைப் பொறுத்தவரையில் மக்கள் நல்வாழ்வுத் துறைதான். அந்த எண்ணத்தோடுதான் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறோம். கடந்த ஆளுநர் உரையில் 66 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 49 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். மீதமுள்ள 17 அறிவிப்புகளில் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளவை 3 இன்னும் அரசாணை வெளியிட வேண்டிய அறிவிப்புகள் 14 என்ற நிலையில் உள்ளது. இவை ஏதோ அறிவிப்புகளாக மட்டுமல்ல; வெளியிட்ட அறிவிப்புகளில் 6 மாதத்தில் 75 விழுக்காடு அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. ஆகவே, இந்த அரசு அறிவிப்போடு நிற்பது இல்லை. எல்லா அறிவிப்புகளையும் ஆணைகளாக வெளியிடுகிற அரசு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.





சொற்கள் தனி மனிதனுடைய வெறும் சொற்களாக இல்லாமல், அரசாங்கத்தினுடைய ஆணைகளாக அதை மாற்றி வருகிறோம். இந்த ஆணைகள் அனைத்திற்கும் செயல் வடிவம் கொடுத்து வருகிறோம்.அந்த அரசாணைகளில் மிக முக்கியமானவைகளை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி, கொரோனா கால நிவாரணமாக 4,000 ரூபாய்; ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; பெட்ரோல் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; இலங்கைத் தமிழர்களுக்கு ரூபாய் 317 கோடியிலான பல்வேறு திட்டங்கள்; பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாளாகக் கொண்டாட்டம்; மீனவர்களுக்கு வழங்கக்கூடிய சிறப்பு உதவித்தொகை 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்வு; விழுப்புரத்தில் சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம்; நெசவாளர் கோரிக்கையை ஏற்றுப் பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி ரத்து; அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு; தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் உருவாக்கம்; கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்களும், தமிழக வரலாற்றில் முதன்முறையாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெற்ற கடன்கள் முழுமையாக ரத்து – இப்படி எண்ணற்ற சாதனைகளைச் செய்திருக்கிற அரசுதான் இந்த அரசு, உங்கள் அரசு என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினோம். குறுகிய காலத்தில் அவற்றில் பெரும்பாலான வாக்குறுதிகளுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் என்பது ஐந்து ஆண்டுகள். அந்த ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம் என்பதுதான் தேர்தல் அறிக்கையின் சாராம்சம்.


ஆனால் பெரும்பாலான வாக்குறுதிகளை 5 மாத காலத்திலே நிறைவேற்றியுள்ள ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றியும், பேரறிஞர் அண்ணா அவர்களே முதலமைச்சராக இருந்தபோது விளக்கம் தந்திருக்கிறார்கள். நீங்கள் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். கேட்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் கேட்பதற்கு முழு உரிமை பெற்றவர்கள்


எங்களுக்கு வாக்களித்தவர்கள். ஏனென்றால் நம்பி எங்களுக்கு வாக்களித்தார்கள். அவர்கள் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் கேட்கிறீர்கள். பரவாயில்லை. ஏன் பரவாயில்லை என்று சொல்கிறேன் என்றால், வாக்காளர்களுக்கு அந்த அவநம்பிக்கை ஏற்படவில்லை. ஆகையால் அவர்கள் எங்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கேட்கிறீர்கள் என்ன ஆயிற்று என்று? நான் முன்பே சொல்லியிருக்கின்றபடி படிப்படியாக முறையாக உரிய காலத்தில் உரிய அளவிற்கு நிச்சயமாக அது நிறைவேற்றப்படும்.உடனே இல்லை, எல்லாம் மொத்தமாக இல்லை, எதையாவது விட்டுவிடுவீர்களா, அதுவும் இல்லை என்றால் நிறைவேற்றப்படுமா? உரிய காலத்தில் முறையாக, படிப்படியாக, அதற்கென்ன தேவை, எது முதலில், எது இரண்டாவது, எது மூன்றாவது என்ற priority தேவை. எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும்படியான பேரறிஞர் அண்ணா அவர்களின் விளக்கத்தை அனைவரும் ஆய்ந்து சிந்தித்துப் பார்த்து ஏற்க வேண்டும் என்று நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சொன்னதை மட்டும் செய்யாமல் – சொல்லாததையும் செய்யக்கூடிய அரசுதான் இந்த அரசு. அந்த அடிப்படையில், சில முக்கிய சாதனைகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொரோனாவால் குழந்தைகள் பள்ளிகளில் படிக்க முடியாததால் கற்றல் இழப்புப் பிரச்சினை பெற்றோர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியது. அந்தக் கவலையைப் போக்க வந்ததுதான் ''இல்லம் தேடிக் கல்வி'' என்கிற திட்டம். ரூ.200 கோடி மதிப்பில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 12 மாவட்டங்களில் முன்மாதிரி அடிப்படையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 80 ஆயிரத்து 138 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 80 ஆயிரம் அலுவலர்களைப் பயன்படுத்தி, ஜி.பி.எஸ். செயலி வாயிலாகக் கணக்கெடுத்து, இன்றைக்கு 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 இடைநின்ற குழந்தைகள், அவரவர் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் வெற்றிகரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

''மக்களைத் தேடி மருத்துவம்'' என்கிற மகத்தானத் திட்டம். மருத்துவ சேவையை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கின்ற திட்டம்தான் இது. ரூ.257 கோடி மதிப்பில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 43 இலட்சத்து 66 ஆயிரத்து 518 பேர் பயனடைந்திருக்கிறார்கள். மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தி, இந்த முன்னோடித் திட்டம், இன்றைக்கு மக்களின் ''இல்ல மருத்துவமனைகள்'' போல செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.





அரசாங்கப் பள்ளிக்கூடங்களை அனைவரும் விரும்பும்பள்ளிக்கூடங்களாக மாற்றிட இந்த அரசு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நான், சென்னை மாநகர மேயராக இருந்தபோது மாநகராட்சிப் பள்ளிகளை அந்தளவுக்குத் தரம் உயர்த்தி நான் மேம்படுத்தினேன் என்பது உங்களுக்கே தெரியும். அதேபோல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து அரசாங்கப் பள்ளிகளையும் நாங்கள் விரைவில் மேம்படுத்துவோம் என்பது உறுதி.

அதனால், இந்த ஆளுநர் உரையில் – மிக மிக முக்கியத் திட்டமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ''ஸ்மார்ட் கிளாஸ்'' என்கிற திட்டம் – அதாவது திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்குகின்ற திட்டம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ள 24 ஆயிரத்து 345 தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகள் தொடங்கப்படும். அரசுப் பள்ளிகள், அந்தப் பள்ளிகளின் வரலாற்றில் – இது ஒரு மாபெரும் கல்விப் புரட்சியை உருவாக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகள் – இந்தியாவிற்கே முன்னோடியாகச் செயல்படுகின்ற பெயரை எட்டிட இந்த அரசு தனது அனைத்து சக்தியையும் பயன்படுத்தும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கிய உயிர் காக்கும் திட்டம், ''இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்'' ஆகும். அது உங்களுக்குத் தெரியும்.சாலை விபத்துகளில் சிக்கி, பாதிக்கப்படுகிற விலைமதிப்பற்ற உயிர்களைக் காக்கக் கூடிய உன்னதமான திட்டம். தமிழ்நாட்டில் எந்த மூலையில் ஒருவர் விபத்துக்குள்ளானாலும், அது மற்ற மாநிலத்தவரானாலும், ஏன், வேறு நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் முதல் 48 மணி நேர சிகிச்சையை இந்த அரசே ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய கருணைமிக்க திட்டம். கருணையையே தன்னுடைய பெயரிலே கொண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அரசு அல்லவா இது! அதனால்தான் அத்தகைய கருணை உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை நாங்கள் தீட்டியிருக்கிறோம்.இந்தத் திட்டத்தின்கீழ், 609 மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டு, இதுவரை 5,274 பேர் அவசர சிகிச்சைகளைப் பெற்றுப் பயனடைந்திருக்கிறார்கள். விபத்தில் சிக்குகிறவர்களுக்கு ''ஒரு கோல்டன் திட்டம்'' இது என்பது மட்டுமல்ல; மனித உயிர், மனித உரிமை இரண்டையும் இந்த அரசு இரு கண்கள் போல் காத்து வருகிறது என்பதற்கு மேலும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ள திட்டம்.


மேலும், பருவ மழையும், திடீர் மழையும் தமிழகத்தை விட்டு வைக்கவில்லை. சமீபத்தில் சென்னையில் ஒரே நாளில் இரண்டு முறை கனமழை கொட்டித் தீர்த்திருக்கிறது. கொட்டித் தீர்த்தது என்று சொல்வதைவிட, ஏதோ வானைப் பிளந்து ஊற்றுவதுபோல மழை சென்னை மாநகர வீதிகளை நிரப்பியது. ஒவ்வொரு முறையும் மழை வெள்ளப் பாதிப்பு வந்தவுடன் முதல் ஆளாக களத்தில் நிற்கிறவர்தான் உங்களுடைய முதலமைச்சர். மக்களின் துயரங்களை நேரில் கேட்டு, அவற்றைச் சீர்படுத்துவதற்கு, துடைப்பதற்கு, துன்ப, துயரங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நமது அமைச்சர்களும், ஏன் நம்முடைய அதிகாரிகளும், நாடாளுமன்ற,

சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர் தொகுதிகளில் மழை வெள்ள நிவாரணப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு, விவசாயிகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட இன்னல்களைத் துடைத்தெறிவதில் பொறுப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல, சமீபத்தில் பெய்த மழையின்போது நான் வெளியூர் பயணத்தில் இருந்தேன். சென்னை திரும்பியவுடன், நேரடியாக விமான நிலையத்திலிருந்து அந்த நள்ளிரவிலேயே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் களமிறங்கி, நடவடிக்கை எடுத்தேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சென்னையில் மழை கொட்டி, குடிநீர் தரக்கூடிய ஏரிகள் எல்லாமே நிரம்பி வழிந்து, முறைப்படுத்தப்பட்ட தண்ணீர் வெளியேற்றத்தின்மூலம் மக்களுக்கு ஏற்படவிருந்த பாதிப்பைத் தவிர்த்தோம்; உடைமைகள் பாதுகாக்கப்பட்டன; உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய பேரிடர் நிவாரண நிதிக்காக இந்த அரசு காத்திருக்கவில்லை. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 801 கோடி ரூபாய் அதற்கென ஒதுக்கி பணிகளை முடுக்கி விட்டோம்; நிவாரண உதவிகளை வழங்கினோம். இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முன்னாள் ஐ.ஏ.எஸ்.அதிகாரி திருப்புகழ் தலைமையில் குழு அமைத்து ஆலோசனைகளை அவர்களிடத்திலிருந்து பெற்றோம்; தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த ஆலோசனைகளின் அடிப்படையில்தான் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் செயல்படுத்திட, நகராட்சி நிருவாகத் துறை, நீர்வளத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை போன்ற பல துறைகள் இணைந்து அந்தத் திட்டங்களைச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இந்தப் பணிகளுக்காக முதற்கட்டமாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை இந்தப் பேரவையிலே நான் அறிவிக்கிறேன். உடனடியாக இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்படும். இயற்கைப் பேரிடர்களிலிருந்து மக்களைக் காப்பதில் இந்த அரசு உறுதியோடு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, அடுத்த பருவமழை வருகிறபோது, சென்ற மழையின் துயரங்கள் மக்களுக்குத் துளியும் இருக்கக் கூடாது என்பதை மனதில் வைத்து இந்த அரசு தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

காவேரி டெல்டாவில் 61 கோடி ரூபாய் செலவில் குறுவை சாகுபடித் தொகுப்பு வழங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேட்டூர் அணையில் உரிய நேரத்தில் தண்ணீரைத் திறந்து, கால்வாய்களை முன்கூட்டியே தூர்வாரிய காரணத்தால் 4.9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்து வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.



மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியிலே மாற்றுத் திறனாளிகளின் நீண்ட நாள் கோரிக்கையை





ஏற்று, ஓர் அறிவிப்பை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடுமையான இயலாமை; கடுமையான அறிவுசார் குறைபாடு; தசைச்சிதைவுகள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய ரூ.1,500/– இனி ரூ.2,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 2,06,254 பேர் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு 123 கோடியே 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலிருந்து இன்றைக்கு வெளியில் சென்று பேசியிருக்கிறார். அதற்கான காரணங்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. அதேபோல, வெளிநடப்பு செய்து தொடக்கத்திலேயே, இந்த கவர்னர் உரையைப் படிக்கத் தொடங்கியவுடனே வெளிநடப்பு செய்து, வெளியில்போய் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்தபோது என்ன சொன்னாரென்றால், மழை, வெள்ளம் குறித்தும், தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சரியில்லை என்றும் சொல்லியிருக்கிறார். மழை வெள்ளம் குறித்துப் பேச அ.தி.மு.க.வினருக்கு எந்தத் தகுதியும் இல்லை; எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. ஏனென்றால், 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல், செம்பரம்பாக்கம் ஏரியை நள்ளிரவில் திறந்துவிட்டு, சென்னை மாநகரத்தையே மிதக்க விட்டனர்; நூற்றுக்கணக்கானோர் மாண்டனர்; வீடுகளும், குடிசைகளும் மூழ்கின; ஏழை, நடுத்தர மக்கள் உடைமைகளை இழந்தனர்; சொந்த ஊரிலேயே தமிழர்கள் அகதிகளாக அலைந்தனர்; இது இயற்கைப் பேரிடர் இல்லை; செயற்கைப் பேரிடர்; man-made disaster என்று பத்திரிகைகள் தலையங்கம் எழுதின; கடைசியில், புண்ணுக்குப் புனுகு தடவுவதைப் போல, நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. Smart City என்று விளம்பரப்படுத்திக் கொண்டு, எந்தெந்த வகையில் Smart ஆக வேலை பார்த்தனர் என்பதை நாடே வேடிக்கை பார்த்து, கைகொட்டிச் சிரித்தது.

மழை, வெள்ளம்தான் இப்படியென்றால், சட்டம்–ஒழுங்கு குறித்துப் பேசுவதற்காவது அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா ? கொடநாடு கொலை, கொள்ளையில் தொடங்கி, பொள்ளாச்சி பாலியல் விவகாரங்கள், குட்கா வரை பல்வேறு முத்திரைகளைப் பதித்தவர்கள்தான் அவர்கள். நான் சொல்லித் தெரியவேண்டுமா ? நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் விரிவாகப் பேசி சட்டசபையை, சத்த சபையாக மாற்ற நான் விரும்பவில்லை. குற்றம் சாட்டுவதற்கு முன்பாக தன் கையில் கறை இருக்கின்றதா என்பதைப் பார்த்துவிட்டுப் பேசவேண்டும். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம் நடக்கின்றது என்று பத்திரிகைச் செய்திகளை வைத்து எங்கேயாவது குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் இருக்கின்றார்களா ? எங்கள் ஆட்சியில். எங்காவது குற்றவாளிகள் தப்பித்துப் போயிருக்கிறார்கள் என்ற செய்தி உண்டா ? தப்பிய ஒரேயொரு ஒரு குற்றவாளியையும் 5 ஆம் தேதி கைது செய்துவிட்டோம். வேறு யாராவது தலைமறைவாக இருக்கின்றார்களா, இருந்தால் சொல்லச் சொல்லுங்கள். பதுங்கும் எவரையும் இந்த அரசு பாய்ந்து பிடிக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன். பதுங்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயமாக அவர்களைப் பிடித்து உரிய தண்டனையை இந்த அரசு வழங்கும்; அதில் எந்த மாற்றமும் கிடையாது. காவல் துறையை ஏவல் துறையாக


மாற்றிவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். தூத்துக்குடியில் 13 பேரை துள்ளத் துடிக்கச் சுடச் சொன்னது யார்? டி.வி.யைப் பார்த்துதான் நான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னது யார்? அதெல்லாம் நமக்குத் தெரிகின்றதோ இல்லையோ மக்களுக்குத் தெரியும்.

‘எங்களது கட்சிக்காரர்களை விசாரணை என்ற பெயரால் அழைத்துச் செல்கிறார்கள்’ என்று பொத்தாம் பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அது எந்த வழக்கு என்பது தெரியவில்லை. அந்த வழக்கு பாயுமோ, இந்த வழக்கு பாயுமோ என்று பயந்து நடுங்குறவங்களுக்கெல்லாம் எங்களால் பாதுகாப்புத் தர இயலாது. தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. தி.மு.க.–வைச் சேர்ந்தவர்களே யாராவது தவறு செய்தால், ஒரு சின்ன குற்றத்தில் ஈடுபட்டாலும், நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், அண்ணாமீது ஆணையாகச் சொல்கிறேன், கலைஞர்மீது ஆணையாகச் சொல்கிறேன், இந்த ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுப்பார். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

‘‘52 மணி நேர ஆபரேஷன் டிஸ் ஆர்ம்’’ நடத்தி, 6,112க்கும் மேற்பட்ட ரவுடிகள் சுத்தி வளைக்கப்பட்டார்கள்.’’ ஒருமாத சிறப்பு கஞ்சா வேட்டை’’ மேற்கொள்ளப்பட்டு 9,498 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பவர்கள் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். பள்ளி கல்லூரிகள் வட்டாரத்தில் போதைப் பொருள்கள் விற்கப்படுவதை நாம் அடியோடு தடுத்திருக்கிறோம். அதைக் கடுங்குற்றமாக்க சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டு வருகிறது. ரவுடிகளை ஒடுக்க, கூலிப்படைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மாநிலத்தில் ஒவ்வொருவரின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதால்தான் இன்றைக்குத் தொழில் வளர்ச்சியில், புதிய முதலீடுகளை நம்மால் ஈர்க்க முடிகிறது. புதிய அத்தியாயத்தை இந்த அரசு எழுதிக் கொண்டிருக்கிறது. கடந்த ஏழு மாதங்களில் மூன்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியிருக்கிறோம். அதன்மூலம் 56 ஆயிரத்து 230 கோடி அளவிலான முதலீடுகள் திரட்டப்பட்டிருக்கின்றது. 1 இலட்சத்து 74 ஆயிரத்து 999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதில், இதுவரை 21 ஆயிரத்து 508 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தில் திட்டமிட்டப் பாதையில் தொழில்





வளர்ச்சியைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தமிழ்நாடு நிதி நுட்பக் கொள்கை FinTech Policy சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையும், Tamil Nadu Export Promotion Policy வெளியிடப்பட்டிருக்கின்றது. ஒரகடத்தில் 150 ஏக்கர் பரப்பளவில் மருத்துவக் கருவிகள் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. நாட்டுக்கே முன்னோடியாகத் தூத்துக்குடியில் மாபெரும் அறைகலன் பூங்கா 1,100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இரண்டு பூங்காக்கள் மூலம் மட்டும் 3 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட இருக்கின்றது. 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு இலட்சம் கோடி டாலர் என்கிற இலக்கை எட்டுவதற்காகத்தான் நாங்கள் தினமும் உழைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நலத் திட்ட நிகழ்ச்சிகளில், பல நிகழ்ச்சிகளுக்கு நானே நேரிடையாகச் சென்று கலந்து கொண்டிருக்கிறேன். 714.13 கோடி ரூபாய் மதிப்பிலான 185 அரசுத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்துள்ளேதோடு, 339.86 கோடி ரூபாய் மதிப்பிலான 190 புதிய திட்டங்களுக்கு நாங்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறோம். மேலும், பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 8 இலட்சத்து 18 ஆயிரத்து 835 பயனாளிகளுக்கு 3 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன். தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாகத் தமிழ்நாட்டை மாற்ற இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது.

ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியுள்ளபடி, ‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ்’ என்பது இந்த அரசினுடைய கொள்கையாகும். தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956இல் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர் குடும்பத்திற்குத் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், 27 ஆயிரத்து 432 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குப் பெறப்பட்ட 543 கோடி ரூபாயில், கோவிட் தடுப்பு நிவாரணப் பணிகளுக்காக 541.64 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் வெளிப்படைத்தன்மை இருக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்; அது தற்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், 2 இலட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மகளிருக்குப் பேருந்துகளில் இலவசப் பயணத் திட்டம் நல்ல பலனைத் தந்திருக்கிறது. 40 விழுக்காடாக இருந்த மகளிர் பயணிகளின் எண்ணிக்கை தற்போது 61 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.

இந்த நிதியாண்டில், 4 இலட்சத்து 2 ஆயிரத்து 829 பேர் கொண்ட 29 ஆயிரத்து 425 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஆக்கிரமிப்பிலிருந்த 1,628 கோடி ரூபாய் மதிப்பிலான 432 ஏக்கர் பரப்பளவிலான திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்பு ஒரு தொலைநோக்குத் திட்டத்தை நான் வெளியிட்டேன். அந்தத் தொலைநோக்குத்



திட்டத்தை நிறைவேற்ற சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைக்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, விதி 110இன் கீழான அறிவிப்புகள் உள்ளிட்ட பல்வேறு தருணங்களில் இந்த 8 மாதங்களில் வெளியிடப்பட்ட 1,641 அறிவிப்புகளில், 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது, வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 75 விழுக்காடு அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 24 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது, 389 அறிவிப்புகளைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன.1 விழுக்காடு அறிவிப்புகள், அதாவது 14 அறிவிப்புகள் மட்டும் ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ளன. இப்படி அறிவிப்புகளை, அதைச் செயல்படுத்தும் விதத்தை வெளிப்படையாக அறிவித்து, ஒளிவு மறைவில்லாத நிருவாகம் கொடுக்கும் அரசாக இந்த அரசு விளங்குகிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டுகிறேன்.

இது ஒளிவு மறைவற்ற அரசு மட்டுமல்ல; அனைவருக்கும் ஒளிதரும் அரசு! இது சொன்னதைச் செய்யும் அரசு மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும் அரசு! இது ஒரு கட்சியின் அரசு அல்ல, ஓர் இனத்தின் அரசு! இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல, கோடிக்கணக்கான ஸ்டாலின்களின் எண்ணங்களைச் செயல்படுத்தும் அரசு! நாங்கள் இந்தப் பக்கம், நீங்கள் அந்தப் பக்கம் என்று ஓர் அடையாளத்துக்காகத்தான் உட்கார்ந்திருக்கிறோம். நாம் எல்லோரும் சேர்ந்து மக்களின் பக்கம்தான் என்பதை மக்களுக்குச் சேவை செய்வதன் மூலமாகக் காட்டி, எதிர்காலத் தமிழகத்தை ஒளிமயமானதாக அமைப்போம். அதற்கு இந்த ஆளுநர் உரை நிச்சயமாக வழிகாட்டியிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

ஆளுநர் உரையில், ‘அது இல்லை’, ‘இது இல்லை’ என்று குற்றம், குறை காண்பவர்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 30.03.1967 அன்று இதே பேரவையில் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அதை இங்கே நினைவுபடுத்துவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சில காரியங்கள், தேவைகள் என்பதற்காக ஆளுநர் உரையில் விடப்படவில்லை. கோடிட்டுத்தான் காட்டுவார்கள். கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டுவதை வைத்துக் கொண்டு, வெற்றிலை பாக்கு போடுவீர்களா என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக் கொள்ள வேண்டுமென்று அர்த்தமல்ல. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுவீர்களா என்று யாரும் கேட்பதில்லை. வெற்றிலை, பாக்கு போடுவீர்களா என்றுதான் கேட்பார்கள். போட்டுக் கொள்கிறேன் என்று சொல்வார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலை, பாக்குதானே போட்டுக்கொள்ளச் சொன்னார் என்பதால் சுண்ணாம்பு வேண்டாமென்று யாரும் புறந்தள்ளிவிடமாட்டார்கள். அதுபோல, கவர்னர் உரையிலே அது இல்லை, இது இல்லை, ஆகவே இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா! கவர்னர் உரையிலே சில குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும். அதுதொடர்பாக நாம்தான் மற்ற விஷயங்களை யூகித்துக் கொள்ள வேண்டும். குறை காண்பவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய இந்த விளக்கமே போதும் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு நடைபோடும் பாதையை அடையாளப்படுத்தும் உரையை ஆற்றிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேசமயம், எதிர்வரும் பொங்கல் திருநாளையொட்டி, 2 கோடியே 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1,296 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த வேளையில் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதில் முகாம்களில் வாழக்கூடிய இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களும் அடங்குவார்கள். பொங்கல் பரிசினைப் பெற்றுத் தமிழர் திருநாளை, கொரோனா கால கட்டுப்பாடுகளைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் கொண்டாட தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை இந்தத் தருணத்தில் நான் பகிர்ந்து கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய தமிழர் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து – மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஏழு பேர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்கள் அளித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய அமைச்சர்களுக்கு நடவடிக்கை எடுக்க அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கக்கூடிய திருத்தங்களைத் திரும்பப் பெறுமாறு கேட்டு, அனைவரும் கட்சி எல்லைகளை மறந்து மக்கள் நிலையை உணர்ந்து இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.









# ‘நீட்’ தேர்வுக்கு எதிரான, சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடரும்...




‘நீட்’ தேர்வு தொடர்பாகவும், சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டுவது குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் விதி 110இன்கீழ் அளித்த அறிக்கை – 06.01.2022.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நகரட்டும் இந்த வையம்’ என்ற உன்னதமான குறிக்கோளைக் கொண்டதுதான் இந்த அரசு. குறிப்பாக, கல்வி என்பதை அடிப்படை உரிமையாகச் செயல்படுத்திக் காட்ட நினைக்கக்கூடிய அரசாகவும் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. எந்தவொரு கல்லூரிச் சேர்க்கையாக இருந்தாலும், அதற்கு வைக்கப்படும் நுழைவுத் தேர்வானது ஏழை, எளிய, கிராமப்புற விளிம்புநிலை மாணவ சமுதாயத்தைப் பாதிக்கும். அதனால் அந்தத் தேர்வுகளைத் தவிர்த்து, பள்ளிக் கல்வித் திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாகக் கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் மாற்றமுடியாத உறுதிப்பாடு கொண்டதாக இந்த அரசு இருக்கிறது. அதாவது, 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

இந்த அடிப்படையில்தான், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மாநில அளவில் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை, 2007ஆம் ஆண்டு அகற்றி, அதற்காகத் தனிச் சட்டம் இயற்றினார்கள். அச்சட்டத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில், ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களின் நலன் காக்கப்படுவதை உறுதிசெய்தார். இதன் அடிப்படையில்தான், பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிலே மருத்துவ மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்று, திறன்மிக்க நம் மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்பும் கிடைக்கப் பெற்றது. இத்தகைய மருத்துவர்கள் மூலமாக இன்று மருத்துவத் துறையிலே நம் நாட்டிற்கே முன்னோடியாக நாம் விளங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், கடந்த காலத்தில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வுக்கான திருத்தச் சட்டம், அதன்பிறகு கொண்டுவரப்பட்ட தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஆகியன மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வை முன்னிறுத்தி, நமது மாணவர்களை வெகுவாக பாதித்துள்ளன. மாநில அரசு நிதியிலிருந்து, மாநில அரசுகளால் தொடங்கப்படக் கூடிய மருத்துவக் கல்லூரிகளில் எவ்வாறு அம்மாநில மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யக்கூடிய உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறித்து விட்டது ஒன்றிய அரசு. இதுமட்டுமன்றி, நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதற்கு வசதி வாய்ப்புகள் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாகவும், மருத்துவ மாணவர் சேர்க்கையில் 12 ஆண்டுகள் படிக்கக்கூடிய பள்ளிக் கல்வியால் எவ்விதப் பயனும் இல்லை என்ற நிலையை உருவாக்கி, பள்ளிக் கல்வி அமைப்பையே அர்த்தமற்றதாக ஆக்குவதாகவும் இந்த ‘நீட்’ தேர்வு முறை உள்ளது.



இவ்வாறு மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைப்பதாக மட்டுமல்ல; இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தைச் சீர்குலைப்பதாகவும் இந்தச் செயல்கள் அமைந்துவிட்டன. இதனை நாம் வேடிக்கை பார்க்க முடியாது. மாணவர்களது எதிர்காலம் பாழாகி வருவதைக் கண்டும் காணாமல் நாம் இருந்து விடமுடியாது. இதனைச் சரிசெய்து, மாநில உரிமைகளையும் நமது மாணவர்களுடைய நலனையும் மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கத்தோடு இந்த அவையால் ஒருமனதாக 19.09.2021 அன்று ஒரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு இன்னமும் மாண்புமிகு ஆளுநர் அவர்களால், மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படாமல் இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களை நானே நேரில் சென்று சந்தித்து வலியுறுத்தியிருக்கிறேன்.

இதனைத் தொடர்ந்து, கடந்த 28.12.2021 அன்று நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையிலே, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அலுவலகத்தில், நீட் தேர்வால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், இந்தச் சட்ட முன்வடிவுக்கு ஒப்புதல் பெறப்படுவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கக்கூடிய மனு ஒன்றை அளித்திருக்கிறார்கள். பின்னர், அம்மனு மேல் நடவடிக்கைக்காக ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளதாக மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய செயலகத்தின் சிறப்புப் பணி அலுவலர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இதுகுறித்து மேலும் வலியுறுத்திட, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்திக்க நேரம் கேட்டனர்.

ஆனால், இதுவரையிலே, அவர்களைச் சந்திக்க மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் மறுத்து வருகிறார். மக்கள் பிரதிநிதிகளை மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் சந்திக்க மறுப்பது, மக்களாட்சியினுடைய மாண்புக்கு எதிரானதாகும். எட்டரைக் கோடி தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளையும், நமது மாணவர்களுடைய கனவுகளையும் நிறைவு செய்வதற்கான இந்த அரசின் முயற்சிகள் வெற்றி பெறவேண்டும். அதற்காகவே இவ்வாறு பல வகைகளில் இந்த அரசு அயராது முயற்சி செய்து வருகின்றது. பல நாட்கள் கடந்தும், உள்துறை அமைச்சர் அவர்கள் நேரிலே சந்திக்க நேரம் ஒதுக்காத நிலையிலே, அவரிடம் கொடுக்கப்பட வேண்டிய மனு, அவரது அலுவலகத்திலே நேற்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சமூக நீதியை நிலைநாட்டுவதில் நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டின் வரலாற்றையும், திராவிட இயக்கங்களின் வரலாற்றையும் புரட்டிப் பார்க்கும் போது, நமது வெற்றிகள் அனைத்தும் நீண்ட நெடிய அரசியல், சட்டம் மற்றும் மக்கள் போராட்டங்களுக்குப் பின்னரே கிட்டியிருக்கின்றன.

நாமும், நமது மாநிலமும் இன்று அடைந்துள்ள இந்த வளர்ச்சியை இப்போராட்டங்களின் மூலமாகத்தான் நாம் பெற்றுள்ளோம் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 'நீட்' போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு எதிரான நமது இந்தப் போராட்டத்தையும், நமது சமூகநீதி இயக்கத்தின் அடுத்தக் கட்டப் போராட்டம் எனக் கருதி, நாம் நமது கொள்கையிலிருந்து எள்முனையளவு கூட பின்வாங்காமல் முன்னெடுத்துச் செல்வோம்.

மேற்கூறிய இந்தச் சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து நாம் ஒருமித்த நிலைப்பாட்டினை எட்டுவதற்கு, நமது சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை நாளை மறுநாள், அதாவது, 08.01.2022 அன்று கூட்டுவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று சட்டமன்றக் கட்சிகளுடைய தலைவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்; உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்களும் சேர்த்து நிறைவேற்றிய தீர்மானம்தான் அது. அதனால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அனைத்துச் சட்டமன்றக் கட்சித்தலைவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய முடிவுகளின் அடிப்படையில் நீட் தேர்வுக்கு எதிரான, சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடரும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.



# ஆன்லைன் சூதாட்டத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி

மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு – 06.01.2022.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள், ஆன்லைன் சூதாட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதுகுறித்துத் தொடர்ந்து பத்திரிகைகளிலும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆன்லைன் சூதாட்டத்தைப் பொறுத்த வரையில், சென்ற ஆட்சியிலே தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 03.08.2001 அன்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிலே, 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவல் சட்டங்கள் திருத்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறிவிட்டது. ஆனாலும், அந்தத் தீர்ப்பின்மீது சட்ட ஆலோசனை கேட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினைத் தடைசெய்யக் கோரி, இந்த அரசு உச்சநீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்திருக்கிறது. வழக்கைப் பொறுத்தவரைக்கும், விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விசாரணை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. விரைவில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தமிழகத்திலே நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.




# குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணை

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் 13 உதவி இயக்குநர்கள் மற்றும் 86 குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர்கள் பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 உதவி இயக்குநர்கள் மற்றும் 7 குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர்கள் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



# 7,56,142 மகளிர் சுய உதவிக் குழு பயனாளிகளுக்கு ரூ.2,750 கோடி கடனுதவி



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.12.2021 அன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் நடைபெற்ற அரசு விழாவில் கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :

அரசு நலத்திட்டங்கள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு, மன்னிக்கவும், சிறப்பான நிகழ்ச்சி மட்டுமல்ல, சிறப்பான ஒரு மாநாட்டிற்கு வருகை தந்து முன்னிலை உரை ஆற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களே! விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றியிருக்கக்கூடிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்களே!

முதன்மைச் செயலாளர் அமுதா அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள், நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபோது, அவர் டில்லியில் ஒரு அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார், அதுவும் பிரதமருடைய அலுவலகத்தில் அவர் பணிபுரிந்து கொண்டிருந்தார். ஊரக உள்ளாட்சி, அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களை மேம்படுத்த வேண்டும் என்று நான் தொடர்ந்து சிந்தித்தேன். அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையில், அவர்கள் வளர்ச்சி பெறக்கூடிய நிலையில், மகளிர் சுய உதவிக் குழு பணியாற்றிட வேண்டும் என்று நான் கருதினேன். அப்படிக் கருதிய நேரத்தில், அதற்கு யாரைச் செயலாளராக, யாரிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை நடத்தியபோது, நம்முடைய ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கக்கூடிய திருமதி அமுதா அவர்களுடைய நினைவுதான் எனக்கு நினைவிற்கு வந்தது. டில்லியில், அதுவும் பிரதமர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய அந்த அதிகாரியை நாம் அழைத்தால் வருவாரா என்று நான் யோசித்தது உண்டு. அதற்குப் பிறகு இந்தத் தகவல் அவருக்குத் தெரிந்தவுடன், நிச்சயமாக நான் வருகிறேன், உறுதியாக நான் வருகிறேன், அதற்குரிய சம்மதத்தை ஒன்றிய அரசிடம், குறிப்பாகப் பிரதமரிடத்திலும் நான் அனுமதி பெற்றுவிட்டேன், வருகிறேன் என்று சொல்லி, அதற்குப்பிறகு, அவர் அங்கிருந்து மாற்றல் ஆகி நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுவைக் கட்டிக் காக்கக்கூடிய ஊரக வளர்ச்சித்துறையின் செயலாளராக இன்றைக்கு அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், உள்ளபடியே நமக்கெல்லாம் மிக மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. காரணம், அவர் தருமபுரி மாவட்டத்தில் ஆட்சித்தலைவராக இருந்தபோதுதான், நான் அன்றைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சராக, துணை முதலமைச்சர் என்ற அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தபோது அந்த மாவட்டத்தில் பல்வேறு பணிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்குத் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்கள் துணை நின்றார்கள், அன்றைக்கு அங்கு ஆட்சித்தலைவராக அந்தப் பணிகளையெல்லாம் சிறப்பாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்போது மகளிர் சுய உதவிக் குழுவைப் பற்றி நான் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. திருமதி அமுதா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தால், அது தானாக வளரும், தானாகச் சிறப்புப் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.





அதேபோல், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் நடுவண் அரசினுடைய துணை அமைச்சராக இருந்த டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள், திரு.ச.சந்திரன் அவர்களே, திரு.வி.ஜி.ராஜேந்திரன் அவர்களே, திரு.ஆ.கிருஷ்ணசாமி அவர்களே, திரு.சு.சுதர்சனம் அவர்களே, திரு.டி.ஜெ.கோவிந்தராசன் அவர்களே, திரு.க.கணபதி அவர்களே, திரு.ஜோசப் சாமுவேல் அவர்களே, திரு.கே.பி.சங்கர் அவர்களே, திரு.துரை சந்திரசேகர் அவர்களே, நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், ஐ.ஏ.எஸ் அவர்களே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி பல்லவி பல்தேவ், ஐ.ஏ.எஸ் அவர்களே, மாவட்ட ஊராட்சிக் குழுவின் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி அவர்களே, மாவட்ட அளவிலான வங்கிகள் கூட்டமைப்பு மேலாண்மை இயக்குநர் திரு.பார்த பிரதிம் சென்குப்தா அவர்களே! பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய உயர் அதிகாரிகளே, அரசு அலுவலர்களே, உள்ளாட்சிப் பிரதிநிதிகளே, தொலைக்காட்சி, பத்திரிகை, ஊடக நண்பர்களே, காவல்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, இங்கே எழுச்சியோடு திரண்டிருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே, சகோதரிகளே, குறிப்பாக என் பாசத்திற்கும் பேரன்பிற்கும் உரிய மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கும் சகோதரிகளே, தாய்மார்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்தில் வரவேற்புரை நல்கியிருக்கக்கூடிய இந்தத் துறையின் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்கள், இந்தச் சுய உதவிக் குழு எப்போது தொடங்கப்பட்டது? யாரால் தொடங்கி வைக்கப்பட்டது? திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி பொறுப்பேற்றவுடன், தலைவர் கலைஞர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில்தான் இதை முதன்முதலாகத் தொடங்கி வைத்தார். எந்த நோக்கத்தோடு, எந்த அடிப்படையில் இது தொடங்கி வைக்கப்பட்டது என்றால், அதற்கும் அவரே விளக்கம் சொன்னார். பெண்கள், மகளிர், சகோதரிகள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவரவர்கள் சொந்தக் காலிலே நிற்கவேண்டும். அவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை, தன்மானத்தோடு வாழக்கூடிய அளவிற்குத் தன்னம்பிக்கையைத் தந்தாக வேண்டும். அந்த அடிப்படையில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தச் சுய உதவிக் குழுவைத் தொடங்கி வைத்தார்கள்.

அதற்குப் பிறகு நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக பொறுப்பிலிருந்த நேரத்தில் எந்த அளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டது, எந்த அளவிற்கு இது ஊக்குவிக்கப்பட்டது என்பதைப்பற்றியெல்லாம் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி நான் அதிகம் பேசவேண்டிய அவசியமில்லை.

இன்றைக்கு மட்டும் தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், மகளிர் சுய உதவிக் குழுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தத் திட்டம் புதியதாகப் புதுப்பித்து, வங்கிகள் மூலமாகப் பெற்றிருக்கும் கடனை, அதாவது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3,000 கோடி மதிப்பிலான கடனுதவி வழங்குகிற விழா இந்த விழா.

திருத்தணியில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உள்ள எல்லா மாவட்டத்திலும் இந்த நிகழ்ச்சி இன்று நடந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்று திருத்தணியில் நடைபெறுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதில் நானும் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு முதலில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் அவர்களுக்கு நான் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எப்போதும் அமைச்சர்களைப் பொறுத்தவரை, என்னதான் தமிழ்நாட்டின் அமைச்சராக இருந்தாலும், அவர்கள் மாவட்டத்தை ஒரு முக்கியத்துவம் கொடுத்து அதைக் கவனிப்பதுண்டு. அது அனைவருக்கும் இருக்கக்கூடிய இயல்பு. நானே கூட, முதலமைச்சராக இருந்தாலும், கொளத்தூருக்குச் சென்றுவிட்டால் எனக்கு ஒரு வேகம் வந்துவிடும். அதுபோல, அமைச்சர்களுக்கு அந்த எண்ணம்தான் வரும், அது தவறு என்று சொல்லமாட்டேன். மக்கள் பணி, மக்களுக்காக ஆற்றக்கூடிய கடமை. அதனால் இந்த நிகழ்ச்சியைக் கூட முதன் முதலில் நடத்தவேண்டும் என்று நான் பெரியகருப்பன் அவர்களை அழைத்துப் பேசியபோது, அவரிடமிருந்து நான் என்ன எதிர்பார்த்தேன் என்றால், எங்கள் மாவட்டம் சிவகங்கையில் நடத்துகிறோம், அங்கு வாருங்கள் என்றுதான் சொல்லுவார் என்று நினைத்தேன். ஆனால், அப்படிச் சொல்லாமல் உங்களுக்கு எது வசதியோ, நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அந்த அடிப்படையில் நான் நிகழ்ச்சியை நடத்துவேன் என்ற உறுதிதந்து, அந்த வகையில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியைத் திருத்தணியில் நடத்தக்கூடிய ஒரு சூழலை அமைத்துத் தந்தமைக்காக மீண்டும், மீண்டும் மாண்புமிகு அமைச்சர் பெரியகருப்பன் அவர்களுக்கும்,





இந்தத் துறையின் செயலாளர் திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் மற்றும் இந்தத் துறையைச் சார்ந்திருக்கும் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று திருத்தணியில் தொடங்குகிற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 58,463 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7,56,142 பயனாளிகளுக்கு ரூ.2,750 கோடி அளவுக்குக் கடனுதவியும், நலத்திட்ட உதவிகளும் கிடைக்க இருக்கிறது. நீங்கள் இதை நல்லவகையில் பயன்படுத்திச் சிறப்புப் பெறவேண்டும் என்று நான் உங்களை உளமார வாழ்த்துகிறேன்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டிருக்கக்கூடிய வகையில் ஒரு விழா என்பது மட்டுமல்ல, ஒரு மாநாடு போல இது ஏற்பாடு செய்யப்பட்டு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக, நான் வந்தவுடனே உங்களுக்கு நடுவில் நடந்துவந்து உங்களை எல்லாம் நான் சந்தித்தேன், நீங்கள் வாழ்த்து சொன்னீர்கள், அதற்கு நன்றி. அப்போது என்னுடைய மனதில் என்ன நினைத்தேன் என்றால், இதில் ஆண்கள் 25 சதவிகிதமும், பெண்கள் 75 சதவிகிதமும் இருக்கிறீர்கள். இதை ஏன் நான் சொல்கிறேனென்றால், அதில் ஒரு விஷயம் இருக்கிறது. இவ்வளவு அமைதியாக ஒரு கட்டுப்பாட்டுடன் நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கும்போது, இனிமேல் மகளிர்தான் பெண்கள் தான் முடிவு செய்ய முடியும் என்ற நிலை உருவாகிறது. சாதாரணமாக பெண்கள் இவ்வளவு அமைதியாக உட்கார்ந்து எங்கும் நான் பார்த்ததில்லை. இவ்வளவு பெரிய கூட்டத்தில் இவ்வளவு கட்டுப்பாட்டோடு நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்றால், இதிலேயே நீங்கள், இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரைக்கும் மிகப் பெரிய வெற்றியைத் தொடர்ந்து நீங்கள் பெறப் போகிறீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நான்கு பெண்கள் ஒரு இடத்திலிருந்தால் அந்த இடம் கலகலவென இருக்கும். ஆயிரக்கணக்கில் பெண்கள் உட்கார்ந்திருக்கும்போது, இவ்வளவு அமைதியாக, இவ்வளவு கட்டுப்பாட்டோடு உட்கார்ந்திருக்கக்கூடிய இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது.

2006–2011ஆம் ஆண்டுக் காலத்தில் நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது பல்லாயிரக்கணக்கான மகளிருக்குப் பல மணி நேரம் நின்று கொண்டே கடனுதவியை வழங்கினேன், சுழல் நிதியை வழங்கினேன். அதன் காரணமாகத் தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக் குழு உயர்வுக்குப் பாடுபட்டோம். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக தேர்தல் பிரச்சாரத்துக்கு நான் எந்த ஊருக்குப் போனாலும், அதிலும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் பிரச்சாரம் செய்தால், நான் மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவள் என்றும், நீங்கள் செய்த உதவியால்தான் என் குடும்பம் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறது என்று நிறையப் பெண்கள் இப்போதும் என்னிடத்தில் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் புதிய ஆட்சி அமைந்தவுடன், மகளிர் சுய உதவிக் குழுவை மறுபடியும் புதுப்பொலிவோடு புதுப்பிக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். அதை இன்றைக்குச் சிறப்பாக நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்களும், செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ் அவர்களும் மற்றும் அவருக்குத் துணையாக இருக்கக்கூடிய அனைவரும் இன்றைக்கு அந்தக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெண்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்கு அடித்தளம் அமைத்த ஆட்சிதான் தலைவர் கலைஞர் தலைமையிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. அந்த ஆட்சியில்தான் இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலில் தொடங்கியிருந்தாலும், அதைத் தொடர்ந்து சேலம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் அது தொடங்கப்பட்டது. அடுத்து வந்த ஆட்சி அந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தவில்லை. நான் அரசியலாக்க விரும்பவில்லை. இந்தச் சுய உதவிக் குழுவின் வரலாற்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

1996ஆம் ஆண்டு மீண்டும் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. முதலில் 5,177 சுய உதவிக் குழுக்களும், அதற்கு அடுத்த ஆண்டில் 7 மாவட்டங்களில் 6,014 மகளிர் சுய உதவிக் குழுக்களும், அதற்கு அடுத்த ஆண்டில் 8 மாவட்டங்களில் 15,029 சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்பட்டது. இப்படியே அது வளர்ந்தது.

2006ஆம் ஆண்டு நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போது ஆயிரக்கணக்கு என்பது லட்சக்கணக்கு ஆனது.

இன்று தமிழ்நாடு முழுவதும் 7.22 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில் ஒரு கோடியே 6 இலட்சத்து 68 ஆயிரம் மகளிர் உறுப்பினராக இடம்பெற்றிருக்கிறார்கள்.





இத்தனை இலட்சம் குழுக்கள் செயல்படுகிறது என்றால் – ஒரு கோடிக்கும் அதிகமான மகளிர் இதில் இயங்கி வருகிறார்கள் என்றால் – அதற்கு விதை போட்டவர் தான் நம்முடைய இதயத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். அதனால் தான் மகளிர் நலம் காத்த மாண்பாளர் என்று தலைவர் கலைஞர் அவர்களை இன்றைக்கும் போற்றிக்கொண்டிருக்கிறோம்.

மகளிரை ஒருங்கிணைக்கிறோம் – கடன் கொடுக்கிறோம் – அதை அவர்கள் திருப்பிக் கட்டுகிறார்கள் – இது ஏதோ ஒரு வழக்கமான திட்டம் (ஸ்கீம்) என்று நினைக்கக்கூடாது. எத்தனையோ கடன் கொடுக்கும் திட்டத்தைப் போல இதுவும் ஒரு திட்டம் என்று சொல்ல முடியாது.

ஒரு பெண், யார் தயவையும் எதிர்பார்த்துக் காத்திருக்காமல் அவரவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு, சொந்தக் காலில் நின்று அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அடித்தளம் அமைக்கக் கூடிய திட்டம்தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம்.

சிக்கனத்தை உருவாக்குவது, அதன் மூலமாகச் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவது, குடும்ப எல்லைகளைத் தாண்டிச் சிந்திக்கும் திறனை உருவாக்குவது, தானே சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவது, அனைவரும் சேர்ந்து கூட்டுறவு மனப்பான்மையுடன் வாழ்ந்திட வேண்டும், எத்தனையோ நல்ல குணத்தை இக்குழுக்களில் இணைவதன் மூலமாக ஒரு பெண் பெறுகிறாள். தனி மனிதர்களாக இல்லாமல் ஒரு குழுவாக வாழும் போது ஒரு பெண் தன்னம்பிக்கை பெறுகிறாள். அத்தகைய தன்னம்பிக்கையை இந்தத் திட்டம் உருவாக்குகிறது.

இந்தத் திட்டத்தின் மகுடமாக இருப்பது சுழல் நிதி. இந்தச் சுழல் நிதி பெண்கள், பொருளாதாரத்தின் தலைநிமிர்ந்து நிற்க தூண்டுதலாகவும், அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

❖ இந்த நிதியாண்டில் மட்டும் 17,479 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.87.39 கோடி சமுதாய முதலீட்டு நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ மாற்றுத்திறனாளி, நலிவுற்றோர் கண்டறியப்பட்டு 5,838 சங்கங்கள் மூலமாக ரூ.14.59 கோடி இந்த நிதியாண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

❖ மகளிர் தயாரிக்கும் பொருளுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

❖ வட்டார அளவிலான கூட்டமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலமாகக் கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

❖ இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதற்கான இலக்கு நிர்ணயம் செய்யும் முறை நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோதுதான் – 2007ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

❖ இதுவரை 36 இலட்சத்து, 97 ஆயிரத்து 59 குழுக்களுக்கு ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 13 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ இந்த ஆண்டில் ரூ.20,000 கோடி கடன் தர இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இதுவரை ரூ.6,777 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் இந்தத் தொகை 10 ஆயிரம் கோடி ஆகிவிடும். அடுத்த ஆண்டுக்குள் 10 ஆயிரம் கோடி இலக்கை எட்டிட நான் உத்தரவிட்டுள்ளேன். சிறப்பு முகாம்கள் அமைத்துக் கடன் வழங்குவதை துரிதப்படுத்தவும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

❖ ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரை சொத்துப் பிணையம் இல்லாமல் கடன் வழங்க குறுந்தொழில் கடன் உத்தரவாத நிதியும் வழங்கப்பட்டு வருகிறது.

❖ ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை உருவாக்கவும், அக்கூட்டமைப்புகளுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கவும் உத்தரவுகள் போடப்பட்டுள்ளது. இந்த வகையில் 10 இலட்சம் முதல் ஒன்றரைக் கோடி ரூபாய் வரை கடன் பெறலாம்.

❖ மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ சான்று விதை உற்பத்தி மையம் செயல்படுகிறது.

❖ இயற்கை பண்ணையம் என்ற திட்டம் நடைமுறையில் உள்ளது.

❖ விவசாயம், கைவினைப் பொருட்கள் செய்தல், உணவு பதப்படுத்தும் தொழில் செய்தல் ஆகியவை ஊக்கப்படுத்தப்படுகிறது.

❖ இவை அனைத்துக்கும் மேலாகத் தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ மகளிர் சுய உதவிக் குழுக்களின் அனைத்துப் பொருட்களையும் சந்தைப்படுத்த வழிகாட்டி வருகிறோம்.

❖ கழக ஆட்சியில் முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை மீண்டும் புதுப்பித்து இருக்கிறோம்.

❖ தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம்.

❖ வறுமை ஒழிப்பு என்பதையும் தாண்டி, ஊரகத் தொழில் மேம்பாட்டுத் திட்டமாக இதனை வடிவமைத்துள்ளோம்.





இப்படி ஏராளமானத் திட்டங்கள் நம்முடைய தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்களைத் தலைப்புச் செய்திகளாக மட்டுமே சொன்னேன். இவை அனைத்தையும் விரிவாகச் சொன்னால் பல மணி நேரம் ஆகும். ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால், மகளிர் அனைவரையும் மேம்படுத்தும் மகத்தான திட்டங்களைத்தான் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் தேர்தலைச் சந்திப்பதற்கு முன்பு நான் சொன்ன உறுதிமொழிகளை முழுமையாக நாங்கள் நிறைவேற்றிவிட்டோம் என்று நான் சொல்லவில்லை, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நிறைவேற்ற முடியாமல் நாங்கள் விட்டுவிட மாட்டோம். அனைத்தையும் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றியே தீருவோம் என்ற அந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மகளிர் மேம்பாடு மூலமாக அவர்களது குடும்பமும்–அந்த குடும்பத்தின் மூலமாக சமூகமும் மேம்பாடு அடையும். சமூக மேம்பாட்டில் தான் இந்த மாநிலத்தின் மேம்பாடு அடங்கி இருக்கிறது.

திராவிட இயக்கத்தின் அடிப்படையான கொள்கையில் ஒன்று, பெண்ணுரிமை, மகளிர் மேம்பாடு என்பதாகும். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் என்ற தீர்மானம் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் நடத்திய சுயமரியாதை இயக்க மாநாட்டில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய தீர்மானத்தைப் போட்டவர் தந்தை பெரியார் அவர்கள். 1989ஆம் ஆண்டு பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு என்ற சட்டத்தை நிறைவேற்றிக் காட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அந்த சட்டத்தைக் கொண்டுவந்து சட்டமன்றத்தில் நிறைவேற்றுகிறபோது தலைவர் கலைஞர் சொன்னார், “பெரியார் அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது நான் ஐந்து வயது பையன். இன்று அவரது தீர்மானத்தை நான் சட்டமாகக் கொண்டு வரும்போது எனக்கு 65 வயது” என்று குறிப்பிட்டு அந்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார். இதனை நான் இங்கே சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், பெண்களின் உரிமைக்கான இத்தகைய புரட்சிகர சீர்திருத்தத்தை நூற்றாண்டுக்கு முன்பே முழங்கிய இயக்கம் தான் திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அத்தகைய தலைவர் தான் தந்தை பெரியார் அவர்கள். அவர் வழி வந்த திராவிட முன்னேற்றக் கழகம் மகளிருக்கான ஏராளமான திட்டங்களைத் தீட்டி உள்ளது.

சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை, பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித்தொகை, விதவைகளுக்கு மறுவாழ்வுத் திட்டம், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாகப் பெண்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்ற சட்டம், ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்குத் திருமணம் என்றால், திருமணத்திற்கு உதவி செய்யக்கூடிய திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் கொண்டு வரப்பட்டது, அனைத்துக்கும் மேலாகப் பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் மகளிர் சுய உதவிக் குழு திட்டம், ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கியது தி.மு.க. அரசு.

இப்படி பெண்களின் முன்னேற்றத்திற்காக எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் – பொறுப்பேற்ற அன்றே மகளிருக்குக் கட்டணமில்லாத பேருந்து பயணத்துக்கு உத்தரவிட்ட கைதான் இந்தக் கை.

ஐந்து பவுனுக்குக்கீழ் அடமானம் வைக்கப்பட்டுப் பெற்ற கடனை ரத்து செய்தோம்.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாங்கிய கடன்கள் ரூ.2,756 கோடி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

அந்த வரிசையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3,000 கோடிக்குக் கடன் வழங்கியிருக்கிறோம். இதன் மூலமாகத் தொழில்முனைவோர்களாக மட்டுமல்ல–தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும், அனைத்து மகளிரும் உயர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்வதற்கான, நீங்கள் உயர்வதற்கான அனைத்து உதவிகளையும் என்னுடைய தலைமையில் இருக்கக்கூடிய, மன்னிக்க வேண்டும், என்னுடைய தலைமையில் என்று சொல்லக்கூடாது, நம்முடைய ஆட்சி இப்போது நடந்துகொண்டிருக்கிறது, நம்முடைய ஆட்சியின் மூலமாக இவைகள் எல்லாம் தொடரும், தொடரும் என்ற உறுதி கூறி, மீண்டும் சொல்கிறேன், இவ்வளவு அமைதியாக இந்த நிகழ்ச்சி நடந்திடக் காரணமாக இருந்த இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்துரையாடல் மேற்கொண்டார்.**



# இண்ட்கோ தேநீர் ஊர்திகள் துவக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக ரூ.3 கோடி மதிப்பீட்டிலான 20 இண்ட்கோ தேநீர் ஊர்திகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்தத் தேநீர் ஊர்தியானது இந்தியாவின் மாபெரும் கூட்டுறவு இணையமான இண்ட்கோசர்வ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தேநீர் மற்றும் சிற்றுண்டி ஊர்திகளின்மூலம் வியாபாரம் மேற்கொள்ளும் முறையானது அகில இந்திய அளவில் மிகவும் பிரபலமடைந்து வருகிறது.

1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இண்ட்கோசர்வ் நிறுவனம், நீலகிரி மாவட்டத்திலுள்ள 30,000 சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படும் வகையில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் 16 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் ஆண்டொன்றுக்கு 14 மில்லியன் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தேநீர் ஊர்திகளில், மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த ஊர்திகள் சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இயக்கப்பட உள்ளது. இதன்மூலம் இண்ட்கோசர்வின் தேயிலை தயாரிப்புகளைச் சில்லரை வர்த்தகத்தில் கொண்டு செல்ல மிகவும் உறுதுணையாக அமையும். இண்ட்கோசர்வ் தயாரிப்புகள் அனைத்தும் 100 இயற்கைப் பொருட்களை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். இந்த ஊர்திகளில் பல வகையான தேநீர், கூடுதலாகக் காபி மற்றும் சிற்றுண்டிகளும் விற்பனை செய்யப்படும்.



அதனைத் தொடர்ந்து, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆலோசனை சேவைகள் நிறுவனத்தின் மூலம் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதிவாழ் பழங்குடியினரின் நலனிற்காகச் செயல்பட்டுவரும் கீ–ஸ்டோன் பவுன்டேஷன் நிறுவனத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.19.98 இலட்சம் நிதியுதவிக்கான அனுமதி கடிதத்தினை கீ–ஸ்டோன் பவுன்டேஷன் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இயக்குநர் திரு. பிரிதம் ராய் அவர்களிடம் வழங்கினார். இதன்மூலம், இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்தல், தேயிலை செடிகளைக் கவாத்து செய்தல், அமிலத் தன்மையைக் குறைத்தல், இரசாயன இடுபொருட்களைத் தவிர்த்தல் போன்றவைகள் குறித்து முதற்கட்டமாக 640 சிறு தேயிலை விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

# ரூ.14.50 கோடியில் சென்னை கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம்











**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.12.2021 அன்று சென்னை, கத்திப்பாராவில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் பன்முகப் போக்குவரத்துகளை ஒருங்கிணைத்து, பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொரு போக்குவரத்திற்கு மாறிச் செல்வதற்கும், பொதுமக்கள் மற்றும் பயணிகள் இளைப்பாறிச் செல்லும் வகையிலும், கத்திப்பாரா மேம்பாலத்திற்குக்கீழ் உள்ள இடங்களில் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

கத்திப்பாரா சந்திப்பு சென்னை நகரின் குறிப்பிடத்தக்கப் பெரிய அடையாளங்களின் ஒன்றாகவும், சென்னை நகரின் நுழைவாயிலாகவும் அறியப்படுகிறது. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய குளோவர் இலை வடிவமைப்புடன் கூடிய மேம்பாலம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. இம்மேம்பாலம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.



ஆசியாவிலேயே மிகப்பெரிய குளோவர் இலை வடிவமைப்புடன் கூடிய மேம்பாலமாக இருப்பதால் பூங்கா மற்றும் சிறார் விளையாடுமிடம் ஆகிய வசதிகளுடன் கூடிய நகர்ப்புற சதுக்கமாக ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டது.

கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம், அனைத்துப் பெரிய சாலைகளுடனும், வடக்கில் ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ நிலையம், தெற்கில் ஆலந்தூர் மெட்ரோ நிலையம் மற்றும் கிழக்கில் கிண்டி மெட்ரோ நிலையம் ஆகிய மெட்ரோ நிலையங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த இடம் நகரப் போக்குவரத்துடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு, மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், நகர்ப்புறச் சதுக்கத்தில் தற்போது யு–திருப்பம் (U-turn) மேற்கொள்ள முடியும்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஒரு மைல் கல்லாகக் கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம் மேம்படுத்தப்பட்டுள்ளது. எந்த நேரமும் சுறுசுறுப்புடன் இயங்கும் சந்திப்பின் இடையே இளைப்பாறும் பகுதியாக அமைந்துள்ளதுடன் நகரத்தின் இதுமாதிரியான இடங்களில் இதுவே முதலாவதாகும்.

நகர்ப்புறச் சதுக்கத்தின் வடிவமைப்பு நவீன சென்னையின் அடையாளத்தையும், கலாச்சாரப் பெருமையையும் பிரதிபலிக்கிறது மேலும், கைவினைப் பொருள் அங்காடி, உணவுக்கூடம், பசுமைப் பகுதியுடன் கூடிய சிறார் விளையாடுமிடம் ஆகியவையும், 128 சீருந்துகள் மற்றும் 340 இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வாகன நிறுத்தங்கள் மற்றும் 8 பேருந்து நிறுத்தங்கள் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.






# தொல்காப்பியப் பூங்காவில் மேம்பாட்டுப் பணிகள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.12.2021 அன்று சென்னை, அடையாறில் உள்ள தொல்காப்பியப் பூங்காவினைப் பார்வையிட்டு, அங்கு நடைபெற்றுவரும் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு சுமார் 58 ஏக்கர் பரப்பிலான தொல்காப்பியப் பூங்கா அடிக்கல் நாட்டப்பட்டு, 22.01.2011ஆம் நாள் மக்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் சார் துறைகளுடன் இணைந்து மேற்கொண்டுவரும் கூவம் மற்றும் அடையாறு நதிகள் சீரமைப்புப் பணிகள் மற்றும் சுமார் ரூ.2,773.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பக்கிங்காம் கால்வாய் மற்றும் அதன் பிரதான கால்வாய்கள், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் வடிகால்கள் சீரமைப்பு, எண்ணூர் கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு ஆகிய பணிகள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இச்சீரமைப்புப் பணிகள் அரசின் பல்வேறு சார் துறைகளான பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை, பெருநகரச் சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகள் ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறைகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளன.

இச்சீரமைப்புப் பணிகளின் ஒரு பகுதியாக, ஆற்றின் கரையோரங்களில் தாவரங்கள் நடவு செய்யக்கூடிய பணிகள் பெருநகரச் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இப்பணிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் வல்லுநர்களின் கருத்துக்கள் பெறப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, அக்குடும்பங்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான மறுவாழ்வு திட்டப் பணிகள் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்பொழுது நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகள், திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலி அமைத்தல், கழிவுநீரை இடைமறித்தல், மாற்று வழிகளை அமைத்தல் போன்ற சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இப்பூங்காவிற்கு அதிக அளவில் மாணவர்கள் வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.







# தமிழ்த்தாய் வாழ்த்து
# தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 17.12.2021

**த**மிழர்களின் வாழ்வாக அவர்தம் உணர்வுக்கு ஒளியாகத் திகழ்வது தமிழ் மொழி. அத்தகைய ஒப்புயர்வற்ற உயர்தனிச் செம்மொழியாம் இலக்கண, இலக்கிய வளங்கள் நிறைந்த தமிழ் மொழியைத் தாயாகப் போற்றும் தமிழர், தம் அன்னையை வாழ்த்திப் பாட பொதுவான பாடல் ஒன்றை ஏற்கவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை ஒரு நூற்றாண்டுக்கும் முன்னதாகவே வெளிப்படுத்தியுள்ளனர். இதனைத் தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், இலக்கிய அமைப்புகளும், தமிழ்ச் சங்கங்களும், பொதுமக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர்.

தமிழ்நாட்டின் அனைத்து விழாக்களிலும் மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய “நீராரும் கடலுடுத்த” எனும் பாடல் பாடப்பட வேண்டும் எனும் கோரிக்கை 1913ஆம் ஆண்டைய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டறிக்கையில் இடம் பெற்றது.

இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக, 1914ஆம் ஆண்டு முதல், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களில் பாடி வந்துள்ளார்கள். மேலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தாய்ச் சங்கமாகக் கொண்டு தமிழகத்தின் பல பகுதிகளில் உருவான தமிழ்ச் சங்கங்களின் விழாக்களிலும் தொடக்கப் பாடலாக இப்பாடல் பாடப்பட்டது.

இதனைத் தமிழக அரசின் பாடலாக அறிவிக்க வேண்டும் என்று அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் கோரிக்கையாக எழுதி அனுப்பியும் வைத்தார்கள் தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, 1970ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11ஆம் தேதியன்று நடந்த அரசு விழாவில் அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசும்போது, “இனி தமிழக அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து இருக்கும். ‘நீராருங் கடலுடுத்த’ எனும் மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய பாடலே தமிழ்த்தாய் வாழ்த்து பாடலாக அமையும்” என்று அறிவித்தார்கள்.

அதன்படியே 1891ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புகழ்பெற்ற நாடக நூலான மனோன்மணீயம் நூலில் உள்ள பாயிரத்தில் “தமிழ் தெய்வ வணக்கம்” எனும் தலைப்பிலுள்ள பாடலின் ஒரு பகுதியைத் தமிழ்த்தாயைப் போற்றும் வகையில் அமைந்த வரிகளை ஏற்று, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை 23 நவம்பர் 1970ஆம் ஆண்டு அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த அன்றைய தமிழக அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்து, அரசாணையும் வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் அரசு விழாக்களில், கல்வி நிலையங்களில், பொது நிறுவனங்களில், பொது நிகழ்ச்சிகளின்போது நிகழ்வு தொடங்குவதற்கு முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவது குறித்து, சில வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டிய காலச் சூழ்நிலையை ஒட்டி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் மூலம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இசை வட்டுக்களைக் கொண்டு இசைப்பதைத் தவிர்த்து, பயிற்சி பெற்றவர்கள், நிகழ்ச்சியில் பாடவேண்டும் எனவும் சமீபத்தில் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில் அன்னைத் தமிழ் மொழியைப் போற்றிடும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவதை ஒருங்கிணைத்து, நெறிமுறைப்படுத்த வேண்டிய நிலையில், கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என தற்போது அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய கீழ்க்கண்ட வரிகளைக் கொண்ட தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்தின் கீழ்க்கண்ட வரிகள், 55 வினாடிகளில் முல்லைப்பாணி இராகத்தில் (மோகன இராகம்) மூன்றன் நடையில் (திசுரம்) பாடப்படவேண்டும்,

*“நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!*
*உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!”*

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு துவங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு இவ்வரசாணையின்படி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படும்போது எழுந்து நிற்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

பொது நிகழ்வுகளில் ‘தமிழ்த்தாய் வாழ்த்து’ இசை வட்டுக்களைக் கொண்டு இசைப்பதைத் தவிர்த்து பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாகப் பாடப்பட வேண்டும்.

அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும், இளம் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதிலும், பொதுமக்களும், தனியார் அமைப்புகளும் பெரும்பங்காற்ற முடியும் என்பதால், தமிழ்நாட்டில் நடைபெறும் தனியார் அமைப்புகள் நடத்திடும் கலை, இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும்.

# "இன்னுயிர்க் காப்போம்- நம்மைக் காக்கும் 48" திட்டம்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.12.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவில், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான நம்மைக் காக்கும் 48 திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், ஈரோடு, IRT பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம், ஸ்ரீ மூகாம்பிகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை, வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்சி, காவேரி மெடிக்கல் சென்டர், கரூர், அமராவதி மருத்துவமனை, திருநெல்வேலி கேலக்ஸி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள் காணொலிக் காட்சி வாயிலாக "இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48" திட்டத்தில் இணைக்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தை 609 மருத்துவமனைகளில் தொடங்குவதன் அடையாளமாக, 18 மருத்துவமனைகளின் பிரதிநிதிகளிடம் அதற்கான கடவுச் சொற்களை வழங்கி, இன்னுயிர்க் காப்போம் திட்டத்தின் காணொலி குறுந்தகட்டினையும் வெளியிட்டார்கள்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் – 48 திட்டம் குறித்த கண்காட்சி அரங்கினைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்கள்.

**விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.**

இன்னுயிர்க் காப்போம் திட்டம், நம்மைக் காக்கும் – 48 என்கிற ஒரு சிறப்பான திட்டத்தைத் தொடங்கி வைக்கக்கூடிய நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி அவர்களே! மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்களே! மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜி.செல்வம் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர் அவர்களே, திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்களே, திரு.இ.கருணாநிதி அவர்களே, திருமதி எம்.வரலட்சுமி அவர்களே, திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ் அவர்களே, திரு.சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்களே, திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்களே, திரு.எம்.பாபு அவர்களே,

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறக்கட்டளையின் துணைத்தலைவர் போற்றுதலுக்குரிய திருமதி லட்சுமி பங்காரு அடிகளார் அவர்களே! மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்புப் பணி அலுவலர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்களே! தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்களே! தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின் திட்ட இயக்குநர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., அவர்களே!






இந்தத் திட்டத்தில் இணைந்து தங்களுடைய கடமையாற்றக் காத்திருக்கக்கூடிய தனியார் மருத்துவமனைகளின் பிரதிநிதிகளே! காவல்துறை நண்பர்களே! தொலைக்காட்சி, பத்திரிகை, ஊடக சகோதரர்களே! நண்பர்களே! இந்தக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கக்கூடிய என்னுடைய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'உடுக்கை இழந்தவன் கைபோல' என்ற குறளுக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னதுதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது. "அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படி கைகள் உடனடியாகச் செயல்படத் தொடங்குகிறதோ, அதைச் சரிசெய்ய வேண்டும் என்று எண்ணுகிறதோ, அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்" என்று அவர் உரை எழுதியிருக்கிறார். அப்படி உடனடியாக உதவக்கூடிய வகையில், தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த "இன்னுயிர்க் காப்போம் திட்டம்". உயிர் காப்பான் தோழன் என்பார்கள். அத்தகைய தோழமை எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த "இன்னுயிர்க் காப்போம் திட்டம்".

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி நமது நாட்டிற்கே முன்னணி மாநிலமாக, பெருமை சேர்க்கக்கூடிய வகையில் நம்முடைய தமிழ்நாடு இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலத்தினுடைய முதலமைச்சர்களை எல்லாம் ஒப்பிட்டு, அதேபோல, தமிழகத்தின் முதலமைச்சராக உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டு அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய எனக்குக் கருத்துக் கணிப்புகளின் மூலமாக அவர்கள் எடைபோட்டார்கள். அப்படி எடைபோட்ட போது, இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலத்தின் முதலமைச்சர்களில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் முன்னணியில் இருக்கிறார் என்று ஒரு செய்தியைப் போட்டார்கள். எனக்கு மகிழ்ச்சிதான், எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் மகிழ்ச்சிதான், தமிழ்நாட்டிற்கே மகிழ்ச்சிதான்.

நான் பல இடங்களில், பல நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இந்தியாவிலேயே இருக்கக்கூடிய முதலமைச்சர்களில் முதல் இடம் என்று சொல்வதைவிடப் பெருமை என்னவென்றால், இருக்கின்ற மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாடு தான் முதலிடத்தில் இருக்கிறது என்று சொல்ல வேண்டும், அதைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

கல்வியில், வேலை வாய்ப்பில், தொழில் வளர்ச்சியில், ஏற்றுமதியில், சமூக வளர்ச்சியில், மகளிர் மேம்பாட்டில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்க வேண்டும் என்று நாம் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறோம். அதே நேரத்தில் வறுமையில், பசியில், குற்றங்கள் நடப்பதில், சாலை விபத்துகள் நடப்பதில் குறைந்த மாநிலமாகத் தமிழ்நாடு இருக்க வேண்டும்.

ஆனால், சாலை விபத்துக்களைப் பொறுத்தவரையில், நமது நாட்டில் அதிக உயிரிழப்புகள் ஏற்படக்கூடிய மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது. அது உள்ளபடியே நமக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்துகொண்டிருக்கிறது. சாலை விபத்துகளால் ஏற்படக்கூடிய ஒவ்வொரு உயிர் இறப்பிலும், அந்த நபர் மட்டுமன்றி அந்தக் குடும்பத்தின் எதிர்காலமே ஒடுங்கி விடுகிறது, பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகிறது. சாலை விபத்துகளில் இறப்பவர்கள் பெரும்பாலும் இளம் வயதினர் என்பதையும் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், விலைமதிக்க முடியாத இளைஞர்களின் எதிர்காலத்தைச் சேர்த்தே எடுத்துச்சென்று விடுகின்றது.

சாலை விபத்துகளைக் குறைத்தும், சாலை விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுத்தும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் தமிழ்நாடு அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றது. ஒவ்வொரு தனிமனிதரும் அவரவர் தரக்கூடிய அந்த உயிர் அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல; இந்த அரசுக்கும் நாட்டுக்கும் மிகமிக முக்கியம் என்பதை நாம் அனைவரும் உணர்ந்தாக வேண்டும். இந்த வகையில் சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்டுள்ள திட்டம்தான் இந்த இன்னுயிர்க் காப்போம் என்கிற திட்டம். விபத்து நடக்கக் கூடாது. விபத்துக் காரணமாக எந்த உயிரும் பறிபோகக் கூடாது என்கிற அந்த நடவடிக்கைகளில் நாம் அதிகம் கவனத்தைச் செலுத்த வேண்டும், அதில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எல்லாம் அரசின் சார்பில், முதலமைச்சர் என்கின்ற அந்த முறையோடு நான் தெரிவித்திருக்கிறேன்.

விபத்தில் உயிர் போவதற்கு முக்கியமான காரணமாகச் சொல்லப்படுவது – நேரமும் காலமும்தான். விபத்து நடந்ததும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்து விட்டால் நிச்சயமாக அந்த உயிரைக் காப்பாற்றிட முடியும். காலதாமதம் ஆகும்போது உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதனை மருத்துவர்கள் கோல்டன் ஹவர்ஸ் (Golden Hours) என்று சொல்வது உண்டு.

விலைமதிக்க முடியாத அந்தத் தருணத்தில் எடுக்கும் முடிவுகள், துரிதமான செயல்பாடுகள்தான் மனித உயிர்களைக் காப்பாற்றுகிறது. விபத்தை எதிர்கொள்பவர் அடையக்கூடிய மாபெரும் துன்பம் என்பதும் இந்த நேரம்தான். அப்படிச் சேர்க்கப்படும் இடம், அரசு மருத்துவமனையா, தனியார் மருத்துவமனையா என்ற பாகுபாடு இல்லாமல் இருந்திட வேண்டும். அதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். அதனால்தான் இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான ஒரு அம்சமாக – சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில், முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவச் சிகிச்சைச் செலவைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்துள்ளோம்.

48 மணி நேரத்திற்குள் உரியச் சிகிச்சை அளித்து உடனடியாகக் கவனித்து விட்டால், பெரும்பாலும் உயிர்கள் காக்கப்படும். அப்படியானால் அதற்குப் பிறகு என்ன என்று நீங்கள் கேட்பது என்னுடைய செவிகளில் விழாமல் இல்லை. அதன்பிறகுதான் முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் இருக்கிறது. அதில் சிகிச்சை பெறலாம். சாலை விபத்துகளால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் அறுவை சிகிச்சைகளும் தீவிர சிகிச்சைகளும் முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே அந்தக் கவலையும் யாருக்கும் வேண்டாம்.

உயிர் காக்கக்கூடிய அவசர சிகிச்சைகள் பெரும்பாலும் முதல் 48 மணி நேர காலத்திலேயே தேவைப்படக்கூடிய சூழ்நிலையில், இந்த அவசர சிகிச்சைகளை மேற்கொள்வதில் பல தனியார் மருத்துவமனைகள் தயக்கம் காட்டி வருவதாகச் சொல்லப்படுகிறது. இதனால், விபத்துகளில் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகள் அருகில் இருந்தாலும், பல நேரங்களில் தொலைவில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு நோயாளிகளைக் கொண்டு செல்லக்கூடிய, அவர்களுக்கு அவசர சிகிச்சை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பிரச்சினைகள் அனைத்திற்கும் நல்லதொரு தீர்வாகத்தான் இந்தத் திட்டம் இன்றைக்குத் தொடங்கப்பட்டுள்ளது.

முதல் 48 மணி நேரத்தில் தேவைப்படக்கூடிய அவசர சிகிச்சை அனைத்தையும் அருகில் இருக்கும் தனியார் மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளக்கூடிய நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

★ சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவச் சிகிச்சை செலவை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும்.

★ இத்திட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 201 அரசு மருத்துவமனைகள் மற்றும் 408 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் உரியத் தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு, மருத்துவச் சிகிச்சைகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய சிறப்பம்சமாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை உடையவர்கள், இல்லாதவர்கள், பிற மாநிலத்தவர், வேறு நாட்டவர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் – அதாவது தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடைவோர் அனைவருக்கும் முதல் 48 மணி நேரம் வரை கட்டணமின்றி மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படும்.

★ சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்படும் மருத்துவமனையிலேயே முதல் 48 மணி நேரம் வரை அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறைகளில் (81 treatment packages) சிகிச்சை அளிக்கப்படும்.

★ 48 மணி நேரத்திற்கு மேலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நிலையற்றவராக (unstable) இருந்தால் அல்லது மேலும் தொடர் சிகிச்சை நடைமுறைகள் தேவைப்பட்டால், முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அல்லது தகுந்த வழிகாட்டுதல்களின்படி தொடர் சிகிச்சைகள் நிச்சயமாக வழங்கப்படும்.

விபத்துகள் நடந்தால் அரசு எப்படி உதவும் என்பதைத்தான் இதுவரை நான் சொன்னேன். ஆனால் அரசாங்கத்தில் மிகமுக்கியமான நோக்கம் விபத்தே இருக்கக் கூடாது என்பதுதான். விபத்துக்கு மிக முக்கியமான காரணம், அதிகப்படியான வேகம்தான். சாலைகளில் வாகனத்தை ஓட்டும்போது வேகத்தைக் குறையுங்கள். வேகத்தை உங்களது உழைப்பில், செயல்படுத்துங்கள். சாலைகளில், தெருவில் காட்ட வேண்டாம். அதில் உங்கள் வேகத்தைக் காட்ட வேண்டியதில்லை. இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும். சிலர் ஹெல்மெட் வாங்கி பைக் முன்னால் வைத்திருப்பார்கள். போலீசைப் பார்த்ததும் போட்டுக் கொள்வார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பிரபல நரம்பியல் மருத்துவர் ராமமூர்த்தி அவர்கள் தலைவரைச் சந்தித்தபோது ஒரு செய்தியைச் சொன்னார். "நாட்டில் அதிகப்படியான ஆக்சிடெண்ட் நடக்கிறது, சின்னச் சின்ன பசங்க எல்லாம் பைக் எடுத்துட்டுப் போய் தலையை உடைச்சிட்டு ஆஸ்பத்திரிக்கு வர்றாங்க, அதனால ஹெல்மெட்டைக் கட்டாயமாக்க வேண்டும்" – என்று முதல்வரிடம் கோரிக்கை வைத்தார்.

ஹெல்மெட் கம்பெனிக்கு நான் லாபம் பார்த்து தர்றேன்னு சொல்லி ஒரு பிரச்சாரத்தை நடத்துவார்கள் என்று தலைவர் அவர்கள் கிண்டலாகப் பதில் சொன்னார். உயிரைப் பற்றி கவலைப்படும் மக்கள் அவர்களாகவே ஹெல்மெட் அணிய வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். "ஹெல்மெட் போட்டா முடி உதிரும் என்று பலரும் போடாம இருக்காங்க, உனக்கு உயிர் முக்கியமா? முடி முக்கியமான்னு நான் கேட்டேன்" என்று அப்போது ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். எனவே, இளைஞர்கள் அனைவரும் தங்கள் உயிரைக் காக்கக் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும்.

கார்களின் விலைக்குச் சமமாக பைக் விலை வந்துவிட்டது. சில பைக்குகள் கார்களை விட அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. இந்த பைக்குகளை எல்லோரும் ஓட்டிவிட முடியாது. அதற்கான முழுமையான பயிற்சியும் திறமையும் இருப்பவர்கள்தான் இயக்க முடியும். பையன் கேட்கிறான் என்பதற்காக இப்படி விலை உயர்ந்த பைக்குகளை வாங்கிக் கொடுத்து பிள்ளைகளை இழந்த பெற்றோர்களையும் பார்க்கிறோம். ஆகவே, பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளுக்கு வாகனங்கள் வாங்கித் தருவதில் கவனமாக இருக்க வேண்டும். கார்களில் பயணம் செய்யும்போது, எப்போதும் சீட் பெல்ட் அணிய வேண்டும். மிக அதிகமான வேகத்தில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இவை அனைத்தையும் விடச் சாலை விதிகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். சிவப்பு விளக்கு விழுந்தால் நிற்பதைக் கூட, தங்களுக்கு இழைக்கப்படும் அவமானமாகச் சிலர் நினைக்கிறார்கள். சாலை விதிகளைக் கடைப்பிடிப்பது என்பதைப் போலீஸுக்குப்



பணிந்து போவதாகச் சிலர் நினைக்கிறார்கள். இல்லை, சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக ஒரு தனிமனிதரின் சமூகப் பண்பாடு வெளிப்படுகிறது. தனிமனித ஒழுக்கம் வெளிப்படுகிறது. அத்தகைய சமூகப் பண்பாடு கொண்டவர்களாக மக்கள் அனைவரும் செயல்படுவதன் மூலமாக விபத்து இல்லாத தமிழகத்தை நிச்சயமாக, உறுதியாக அமைப்போம்! அமைப்பதற்கு எங்களைப் போன்றவர்கள் மட்டுமல்ல, உங்களைப் போன்றவர்களும் இணைந்து கைகோர்த்து, இந்தத் திட்டத்திற்கு நாம் துணை நிற்போம் என்ற அந்த உறுதியை நீங்கள் அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டு, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

முன்னதாக, மேல்மருவத்தூரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில், நடைபெற்ற சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை நந்திவரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு தடுப்பூசி செலுத்தப்படும் விவரம் குறித்து மருத்துவ அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மாநிலம் முழுவதும் 15ஆவது கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் 17.12.2021 வரை 7,85,50,493 பயனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில், முதல் தவணையாக 4,81,57,452 பயனாளிகளுக்கும், இரண்டாவது தவணையாக 3,03,93,041 பயனாளிகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிபராசக்தி அறக்கட்டளை மருத்துவமனைக்குச் சென்று, அங்கு இத்திட்டத்திற்கான அவசர சிகிச்சைப் பிரிவினை திறந்து வைத்தார். பின்னர் அம்மருத்துவமனையில், சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற்றுவரும் ரங்கநாதன் என்பவரைச் சந்தித்து, உடல்நலம் குறித்து விசாரித்து அறிந்தார். காயமடைந்த ரங்கநாதனுக்கு, இன்னுயிர்க் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ் சிகிச்சை அளித்திட மருத்துவர்களுக்கு உத்தரவிட்டார்.



## நனவாகும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணம்




எத்தனை முறை சென்றாலும்
சலிக்காதது கடல் என்பார்கள்.
அந்தக் கடலலையில்
ஒரு முறையேனும்
கால் நனைக்க நினைத்திருந்த
மாற்றுத்திறனாளிகளின் எண்ணம்
நனவாகும் வண்ணம்
தற்காலிகப் பாதையினை ஏற்படுத்தியுள்ளோம்;
விரைவில் நிரந்தரம் ஆக்குவோம்.

சிறிய பணிதான் இது;
பெரிய மாற்றத்துக்குத் தொடக்கமும் கூட...

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு
(28.12.2021)



# இனமான பேராசிரியர்



'இனமான பேராசிரியர்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெருமிதத்தோடும், பேரறிஞப் பெருந்தகை அண்ணா அவர்களால் "பேராசிரியர் தம்பி" என்று அன்போடும் அழைத்துப் போற்றப்பட்டவர் பேராசிரியர் க.அன்பழகனார் ஆவார்.

படிக்கின்ற காலகட்டத்தில் தந்தை பெரியார் அவர்களின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளாலும், பேரறிஞப் பெருந்தகை அண்ணா அவர்களின் தமிழ் உணர்வுமிக்க பேச்சாற்றலின்பாலும் ஈர்க்கப்பட்டு, பொதுவாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். திருவாரூர் மாவட்டம் காட்டூர் கிராமத்தில் 1922ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம் நாள் கல்யாண சுந்தரனார் – சொர்ணாம்பாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

பள்ளிப் பருவத்திலேயே தமிழ் மொழியின் மீது தணியாத தாகம் கொண்டிருந்த காரணத்தினால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் முதுகலைப் படிப்பை முடித்தார். பேரறிஞர் அண்ணாவின் அன்பு வேண்டுகோளை ஏற்று 1944 முதல் 1957ஆம் ஆண்டு வரையில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மாணவர்களின் பங்கு மகத்தானது என்பதை நன்குணர்ந்து, அரசியல், மொழிப்பற்று மற்றும் இனப்பற்றில் மாணவர்களின் பங்களிப்பினை உறுதி செய்ததில்,




*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளின் தொடக்க நாளான 19.12.2021 அன்று, சென்னை, நந்தனத்திலுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்திற்கு "பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை" என்று பெயர் சூட்டி, அவ்வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச்சிலையினைத் திறந்துவைத்தார்.*

பேராசிரியப் பெருமகனாரின் பங்கு மகத்தானது என்றால், அது மிகையாகாது.



பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற நாட்களிலும், துணைப் பேராசிரியராகப் பணியாற்றிய காலங்களிலும் திராவிட இயக்கத்தின்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, பொது வாழ்க்கையில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பங்கேற்ற விழாவில், பேராசிரியப் பெருமகனார் ஆற்றிய உரையே அவர் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. 1962ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1967ஆம் ஆண்டு தொடங்கி 1971ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 9 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில் மக்கள் நல்வாழ்வு, சமூக நலத்துறை, நிதி மற்றும் கல்வித்துறை அமைச்சராக, தான் அமைச்சராகப் பதவி வகித்த துறைகளில் எல்லாம் தனது முதிர்ந்த அனுபவத்தாலும், பரந்த தொலைநோக்குப் பார்வையாலும் பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தியுள்ளார்.

1942ஆம் ஆண்டு திருவாரூர், விஜயபுரத்தில் இஸ்லாமிய இளைஞர்கள் இணைந்து நடத்திய சிக்கந்தர் விழாவில்தான் பேராசிரியர் க. அன்பழகனாருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடனான முதல் அறிமுகம் ஏற்பட்டது. அன்று தொடங்கிய அந்த நட்பு 75 ஆண்டுக் காலம் இணைபிரியாத உயரிய நட்புக்கு இலக்கணமாகும். 'நாங்கள் இருவரும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்' என்று மகிழ்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டு மகிழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்மொழியின் மீது பேராசிரியர் கொண்டிருந்த அளவற்ற பற்றின் காரணமாக, க. இராமையா என்கின்ற தனது பெயரை க. அன்பழகன் என்று மாற்றிக் கொண்டார். 'முதலில் நான் மனிதன், இரண்டாவது நான் அன்பழகன், மூன்றாவது நான் சுயமரியாதைக்காரன், நான்காவது நான் பேரறிஞர் அண்ணாவின் தம்பி, ஐந்தாவது முத்தமிழறிஞர் கலைஞரின் தோழன். இந்த உணர்வுகள் என் உயிர் உள்ளவரை என்னோடு இருக்கும் எனப் பேராசிரியர் அவர்கள் தன்னைப் பற்றிக் குறிப்பிடுவார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் குறித்து, பேராசிரியப் பெருந்தகை அவர்கள் "என் அன்புக்குரிய தம்பி திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்தையைப் போலவே உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டவர். மக்கள் பணியில் சட்டமன்ற உறுப்பினராக, சென்னை மாநகர மேயராக, உள்ளாட்சித்துறை அமைச்சராக, துணை முதலமைச்சராகப் பணியாற்றிப் படிப்படியாக உயர்ந்து உச்சம் தொட்டவர். காலமும் கடமையும் என்றும் தவறாதவர். சட்டமன்றத்தில் புள்ளி விவரத்துடன் திறம்படப் பதில் அளிப்பதில் என்றுமே சளைக்காதவர்'' என்று பாராட்டி மகிழ்ந்தவர் ஆவார்.

அரசியலில், ஆட்சிப் பணியில், அளப்பரிய பல சாதனைகளை, சரித்திரங்களை நிகழ்த்தி இருந்தாலும், எழுத்துப் பணிக்கு என்றுமே அவர் ஓய்வு தந்ததில்லை. 1948ஆம் ஆண்டு புதுவாழ்வு என்னும் மாத இதழ் வாயிலாகத் தனது எழுத்துப் பணியைத் தொடங்கி, சமூக சீர்திருத்தம், இனமொழி, வகுப்புரிமை, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரைப் பற்றி 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். குறிப்பாக, 'தமிழர் திருமணமும் இனமானமும்', 'நீங்களும் பேச்சாளர் ஆகலாம்', 'வாழ்க திராவிடம்', 'திராவிட இயக்கத்தின் வரலாறு' ஆகிய நூல்கள் இன்றளவும் அனைவராலும் விரும்பிப் படிக்கப்படுகின்ற நூல்களாகும்.

நீதிக்கட்சி தொடங்கி 100 ஆண்டுகளுக்கு மேல் நீண்ட வரலாறு கொண்ட திராவிட இயக்கத்தில், பல்வேறு காலகட்டங்களில் பல தலைவர்கள் தங்களின் பங்களிப்பினைத் தமிழ்நாட்டுக்கும், தமிழ் இன மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் தந்திருந்தாலும், பேராசிரியப் பெருமகனார் காலத்தில், மாணவர் சமுதாயத்தினை அரசியலில், அரசியல் மாற்றத்தில், ஆட்சியின்பால் ஈர்த்துள்ளது அளப்பரிய ஒன்றாகும்.

பேராசிரியப் பெருமகனாரின் நூற்றாண்டு பிறந்த நாளின் தொடக்க நாளான 19.12.2021 அன்று அன்னாரின் அருமைப் பெருமைகளைப் போற்றிப் பாராட்டுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் சிலையினைத் திறந்து வைத்து, ஏறத்தாழ 1,20,000 சதுர அடியில் இயங்கிவரும் இந்த வளாகத்தில், கருவூல கணக்குத் தொடர்பான அலுவலகங்கள், ஓய்வூதிய இயக்ககம், மாநில, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவுத் தணிக்கை அலுவலகங்கள் மற்றும் அரசு சிறுசேமிப்புத்துறை உள்ளிட்ட 15 அலுவலகங்கள் இயங்கிவரும் இவ்வளாகத்திற்கு ''பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை'' என்று பெயர் சூட்டியும், நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள அவரின் நூல்களுக்கான நூலுரிமைத் தொகையினையும் குடும்பத்தாருக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

# அன்பும், அமைதியும் அனைவரது வாழ்விலும் தவழ்ந்திட வேண்டும்

**“உ**ன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு” என ஈகையையும்; “ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு” எனச் சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையையும்; எதிரிகளையும் நேசியுங்கள், பகைவருக்கும் நன்மை செய்யுங்கள்” என எக்காலத்தும் போற்றத்தக்க உயர்ந்த அன்பையும் போதித்த மனித நேய மாணிக்கம் இயேசு பிரான் பிறந்தநாளை உலகெங்கும் உள்ள கிறித்துவ மக்கள் கிறிஸ்துமஸ் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். அன்பும் அமைதியும் அனைவரது வாழ்விலும் தவழ்ந்திட வேண்டும் என்ற உயரிய நோக்கோடு இவ்விழா கொண்டாடப்படுவதுடன், அன்பினை பரிமாறிக்கொள்ள ஒருவருக்கொருவர் பரிசுப் பொருட்களையும்; ஏழை எளியோருக்கு உதவிகளையும் வழங்கி மகிழ்கின்றனர். அனைவரும் சமம் என்ற சமத்துவக் கொள்கை இந்நாளில் மிளிர்வதைக் காண்கிறோம்.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியிலும் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றிய கிறித்துவ மக்களின் நலனையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் திராவிட முன்னேற்றக் கழகமும் கழக அரசும் என்றைக்கும் தோளோடு தோள் சேர்ந்து துணை நின்றிருக்கிறது. அதேவழியில் தொடர்ந்து பயணித்துச் சிறுபான்மை மக்களின் உரிமைகளை நமது அரசு பாதுகாக்கும்.

மகிழ்ச்சி பொங்கக் கொண்டாடப்படும் இந்த விழாவை கொரோனா கால பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு – தனிமனித இடைவெளியைக் கடைப்பிடித்து – பாதுகாப்புடன் கொண்டாட வேண்டும் என்று அன்போடு கேட்டு, என் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **20.12.2021** அன்று சென்னை, சாந்தோம் மேல்நிலைப்பள்ளியில், கிறித்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் குடிலைத் திறந்துவைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை.

**இ**ந்த மாபெரும் கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய கிறித்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், எம்.எல்.ஏ., அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்களே!






மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திரு.திண்டுக்கல் லியோனி அவர்களே!

பங்கேற்றுப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இ.கருணாநிதி அவர்களே! திரு. ஐட்ரீம்ஸ் மூர்த்தி அவர்களே! திரு. பிரபாகர் ராஜா அவர்களே! திரு. ஹசன் மௌலானா அவர்களே! திரு. மயிலை த.வேலு அவர்களே!

இங்கே எனக்கு முன்னால் மிகச் சிறப்போடு, எழுச்சியோடு உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் என் பாசத்திற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே!

தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவை துணைத் தலைவர் மேதகு டாக்டர் அ.நீதிநாதன்அவர்களே! தென்னிந்தியத் திருச்சபை பிரதம பேராயர் பேரருட் திரு. A. தர்மராஜ் ரசாலம் அவர்களே! அய்யாவழிச் சமயத் தலைவர் சன்னிதானம் திரு.பூஜிதகுரு பாலபிரஜாபதி அடிகளார் அவர்களே! அனைத்துச் சமயத் தலைவர்களே! பேராயர் பெருமக்களே! எங்களுக்கு எப்போதும் துணை நிற்கக்கூடிய சிறுபான்மை சமுதாய சகோதர, சகோதரிகளே! என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் பாசத்தோடு அழைக்கக்கூடிய உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

கிறித்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் நடைபெறும் இந்த மாபெரும் திருவிழாவில் உங்களோடு இணைந்து, பிணைந்து நானும் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திக்கக் கூடிய ஒரு நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.



இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று அதற்குரிய தேதியை நிர்ணயித்து இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து வந்து உங்களிடத்தில் நிறுத்தி வைத்திருக்கக்கூடிய என்னுடைய அருமை நண்பர் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு முதலில் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இனிகோ இருதயராஜ் அவர்கள் ஆண்டுதோறும் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து வந்திருக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் வருகிறபோது நான் வந்திருக்கிறேன். கலைஞர் அவர்களுடைய உடல்நலம் பாதிக்கப்பட்டபோதும், அவருடைய மறைவிற்குப் பிறகும் அந்தச் சூழ்நிலையிலும் நான் வந்திருக்கிறேன். அவர் அழைப்பதற்கு முன்னாலேயே அவர் வந்து தேதியைச் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை, நடத்தப் போகிறோம் என்று சொன்னால் போதும், நான் என்ன தேதி தருகிறேனோ அந்தத் தேதியைப் பயன்படுத்திக்கொண்டு அந்த நிகழ்ச்சியை அவர் நடத்துவதுண்டு. நெஞ்சுக்கு நெருக்கமான விழாவாக இந்த விழா அமைந்திருக்கிறது. எத்தனையோ விழாக்களுக்குச் சென்றாலும், எவ்வளவு பெரிய கூட்டம் கூடக்கூடிய கூட்டத்திற்குச் சென்றாலும், இங்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சிக்கு வருகின்ற போது அதில் நிறைய வேறுபாடுகள் உண்டு. அந்த வேறுபாட்டின் உணர்வுகளை எல்லாம் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உங்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

கிறித்துவ மக்களாக இருந்தாலும் – சிறுபான்மை மக்களாக இருந்தாலும் – அவர்களோடு எப்போதும் துணையாக நிற்பவர்கள்தான் நாங்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதைச் சொல்லித்தான் நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை.

சிறுபான்மையினருக்கு இந்த அரசு எத்தகைய முக்கியத்துவம் தரும் அரசு என்பதன் அடையாளமாகத்தான் – கிறித்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவராக இருக்கக் கூடிய இனிகோ இருதயராஜ் அவர்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட வைத்துச் சட்டமன்றத்துக்குக் கழகத்தின் சார்பில் நாங்கள் அனுப்பி வைத்திருக்கிறோம்.

சிறுபான்மை, கிறித்துவ மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் பிரதிநிதியாக ஒருவர் சட்டமன்றத்தில் இடம்பெற வேண்டும் என்பதன் அடையாளமாகத்தான் இனிகோ அவர்கள் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ளார்கள். முதலில் என் இதயத்தில் இடம்பெற்றார். இப்போது சட்டமன்றத்தில் இடம்பெற்றார். நாளைக்கு என்னவோ, அது தெரியாது எனக்கு.

அதேபோல், இந்த ஆட்சி அமைந்ததும் சிறுபான்மையினர் ஆணையம் புதுப்பிக்கப்பட்டது. நம்முடைய மதிப்புக்கும்,




மரியாதைக்கும் உரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அந்த ஆணையத்தின் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சொல்லை வில்லாகப் பயன்படுத்தும் பேச்சாளர் அவர். எழுத்தை அதன் வலிமையோடு எழுதும் எழுத்தாளர் அவர். கொண்ட கொள்கையில் யாருக்கும் அஞ்சாமல் உறுதியாக இருக்கக்கூடியவர். இந்தப் பெருமைகளைப் பெற்றவர்தான் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்.

அவர் தலைமையில் சிறுபான்மையினர் ஆணையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை, நானும் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். இந்த அரசுக்கும் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் அவருடைய பணி அமைந்திருக்கிறது. எப்படி நீங்கள் மனதார என்னை வாழ்த்தினீர்களோ அதுபோல நானும் மனதார உங்களுக்கு அன்போடு நன்றி சொல்லி என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் சிறுபான்மையினருக்கு எல்லா வகையிலான ஏற்றமும் வழங்கும் காலமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலம் தொடங்கி இருக்கிறது.

கிறித்துவர்கள் என்றோ – சிறுபான்மையினர் என்றோ – ஒரு வித அடையாளச் சொல்லாகத்தான் நாம் அதனைப் பயன்படுத்துகிறோம். நாம் மொழியால் தமிழர்கள்தான். இனத்தால் தமிழர்கள்தான். வழிபாடு என்பது அவரவர் விருப்பம். ஆனால் தமிழர்கள் என்பது பண்பாட்டுப் பிணைப்பு ஆகும்.

ஒரே வயிறு தாங்காத காரணத்தால் தனித்தனி தாய் வயிற்றில் பிறந்த தமிழ் சமுதாயத்தின் உடன்பிறப்புகள்தான் நாம். அந்த உணர்வோடுதான் நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்.

எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. கிறித்துவமும் திரும்பத் திரும்ப அன்பைத்தான் போதித்துக் கொண்டிருக்கிறது. ஒருவர் மற்றவர்களுடன் அன்பாக இருங்கள் என்பதுதான் அனைத்து மதங்களின் சாராம்சமாக இருக்கிறது. அத்தகைய எண்ணங்களை நாமும் ஆதரிக்கிறோம். அதனை நாம் விமர்சிப்பது இல்லை.

அன்பு என்பது சாதி பார்க்காது, மதம் பார்க்காது, மொழி பார்க்காது, இனம் பார்க்காது, நிறம் பார்க்காது, பால் பேதம் பார்க்காது. இத்தகைய அன்பை அடிப்படையாகக் கொண்ட எதுவும், யாரும் ஏற்கத்தக்கவர்கள். இதில் பேதம் பார்க்கும் யாரும் ஒதுக்கப்பட வேண்டியவர்கள். அத்தகைய மானுடச் சிந்தனை, மனிதாபிமான எண்ணம் தழைப்பதற்கு, கிறித்துவ நல்லெண்ண இயக்கம் போன்ற இயக்கங்கள் அடித்தளம் அமைத்து இன்றைக்குத் தன்னுடைய பணியைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன், வாழ்த்துகிறேன்.

அத்தகைய அன்பின் வெளிப்பாடாகத்தான் நலத்திட்ட உதவிகள் இங்கே வழங்கப்பட இருக்கிறது. இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுப்போம் – என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இங்கே பொருள்களை நீங்கள் வழங்க இருக்கிறீர்கள்.

மக்கள் தொகை அதிகம் உள்ள நமது நாட்டில் மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசாங்கம் மட்டும் செய்து விட முடியாது. இது போன்ற அமைப்புகளும் உதவிட முன் வர வேண்டும்.

இனிகோ இருதயராஜைப் பொறுத்தவரையில் எப்போது விழா நடத்தினாலும் அதனை ஒரு மத விழாவாக, கொண்டாட்டமான விழாவாக மட்டும் நடத்தாமல் நலிந்திருக்கக் கூடிய மக்களுக்கு உதவிகள் வழங்கும் விழாவாக நடத்துவதை வழக்கமாக வைத்திருக்கிறார். அந்த வழக்கத்தை இந்த மேடையிலும் தொடர்ந்து கடைப்பிடித்துக் காட்டி இருக்கிறார்.

அன்பும், இரக்கமும், கருணையும் கொண்ட அரசைத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு நடத்திக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

❖ கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவர்களின் முதல் தலைமுறையினர் மற்றும் அடுத்த தலைமுறையினருக்கு 1972ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகளை வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

❖ 1989ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையத்தை அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

❖ 1990ஆம் ஆண்டு அப்துல் ஜாபர் தலைமையில் சிறுபான்மையினர் நலக்குழுவை அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

❖ 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

❖ சமூக சீர்திருத்தத்துறையைத் தோற்றுவித்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

❖ 2007ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககம் அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

❖ சிறுபான்மை சமூக – பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தனி வாரியம், இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடை, சத்துணவுத் திட்டம் ஆகியவற்றைக் கிறித்துவ சமுதாய மக்களுக்கு, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கும் நீட்டித்துத் தந்தவர்.

❖ 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

– இவை சிறுபான்மை இன மக்களுக்காகச் செய்யப்பட்டவை மட்டும்தான்.



இப்படி ஒவ்வொரு பிரிவு மக்களுக்கும் தாயைப் போல் பார்த்துப் பார்த்து திட்டங்களைக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

❖ நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோது மகளிர் சுயஉதவிக் குழுக்கள் முன்னேற்றத்துக்கான பொறுப்புகளையும் ஏற்றிருந்தேன். அப்போது, வள்ளுவர் கோட்டம் அருகில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்காக ஒரு தனி கட்டடத்தைக் கட்டி, அதன் திறப்பு விழாவில் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து வந்து திறக்கச் செய்தோம். அதைத் திறக்கும்போது அக்கட்டடத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டபோது, உடனடியாக, அவர் அந்தக் கட்டடத்திற்கு 'அன்னை தெரசா' என்ற பெயரைச் சூட்டுங்கள் என்று சொல்லி, இன்று கம்பீரமாக அந்தக் கட்டடம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.




❖ 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை அ.தி.மு.க. அரசு முடக்கியது. 2006ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்ததும், அதை மீண்டும் செயல்பட வைத்தோம்.

– இத்தகைய சாதனைச் சரித்திரம்தான் மீண்டும் இப்போது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

பல்வேறு திட்டமிடுதல்களை சிறுபான்மைத்துறையும், சிறுபான்மை ஆணையமும் திட்டமிடத் தொடங்கி இருக்கின்றன. கடந்த பத்தாண்டுக் காலமாகப் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட பின்னடைவுகள் அனைத்தையும் சரி செய்யும் முயற்சியையும் தொடங்கி இருக்கிறோம். ஐந்து ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனையை ஐந்தே மாதத்தில் செய்திருக்கிறோம் என்பதை அரசியல் எல்லைகளைக் கடந்து பொதுவானவர்களும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கை வெளியிட்டோம். 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளைக் கொடுத்தோம். அதில் 300க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். நிதிச் சுமை இருந்தாலும் மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை, திட்டங்களை நிறுத்தாமல் செய்து வருகிறோம்.

நாங்கள் சொன்ன அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லி என்னையும் ஏமாற்றி, உங்களையும் ஏமாற்ற நான் தயாராக இல்லை. ஆனால் நிறைவேற்றியே காட்டுவோம், அதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

ஏழை, எளிய மக்களாக இருந்தாலும், மகளிராக இருந்தாலும், பழங்குடியினராக இருந்தாலும், இலங்கைத் தமிழராக இருந்தாலும், மாற்றுத்திறனாளிகளாக இருந்தாலும், திருநங்கையராக இருந்தாலும், குழந்தைகளாக இருந்தாலும், அனைவரது கோரிக்கையையும் தாயுள்ளத்தோடு செய்து கொண்டிருக்கும் தமிழக அரசு இன்றைக்கு மக்களுடைய மனதில் நல்ல இடத்தைப் பிடித்திருக்கிறது.

அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் சட்டம். அத்தகைய சட்டப்படிதான் இந்த அரசு செயல்படும். அந்த உணர்வை ஊட்டும் விழாவாக இந்த கிறிஸ்துமஸ் விழா அமைந்திருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியை இனிகோ இருதயராஜ் நடத்தி இருக்கிறார் என்றால், தொடர்ந்து 12 ஆண்டுகாலமாக இதை நடத்தி வந்து இன்று நாமெல்லாம் கலந்துகொள்ளக் கூடிய வகையில் எழுச்சியோடு, உணர்ச்சியோடு இதை நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்த இருக்கிறார். அதில் எந்த மாற்றமும், சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் நான்தான் வரப்போகிறேன். அந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளப் போகிறேன்.

சில நேரங்களில் இந்த நிகழ்ச்சிக்கு வரும்போது இரண்டு, மூன்று நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினர் எனக் குறிப்பிட்டு என்னை அழைத்திருந்தார்கள். தயவு செய்து, சிறப்பு விருந்தினர் என்று குறிப்பிட்டு என்னைப் பிரித்துவிடாதீர்கள். என்றைக்கும் உங்களோடு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று சொன்னேன். மேயராக இருந்தபோது வந்திருக்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது வந்திருக்கிறேன், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது வந்திருக்கிறேன், துணை முதலமைச்சராக இருந்தபோது வந்திருக்கிறேன். இப்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்று இன்றைக்கு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

இந்த இனிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

# "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு இயக்கம் தொடக்கம்







**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.12.2021 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு இயக்க தொடக்க விழாவில், "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு இயக்கத்தினைத் தொடங்கிவைத்து, மீண்டும் மஞ்சப்பை இலச்சினையை வெளியிட்டு ஆற்றிய உரை.


"மீண்டும் மஞ்சப்பை" என்ற விழிப்புணர்வு இயக்கத்தின் துவக்க விழா நிகழ்ச்சிக்குத் தலைமையுரை ஆற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களே! மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்களே! மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களே! துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி சுப்ரியாசாஹு, இ.ஆ.ப., அவர்களே! தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் திரு. உதயன், இ.வ.ப., அவர்களே! சென்னையிலுள்ள ஜெர்மனி நாட்டினுடைய துணைத்தூதர் திருமதி காரின் கிறிஸ்டினா மரியா ஸ்டோல் அவர்களே! வனத்துறை அதிகாரிகளே! அலுவலர்களே! அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! காவல்துறை, ஊடகத்துறை நண்பர்களே! வணிக அமைப்பைச் சார்ந்திருக்கக் கூடியவர்களே! மகளிர் சுய உதவிக் குழுவில் இடம்பெற்றுள்ள அன்பிற்குரிய சகோதரிகளே! பள்ளியில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய மழலைச் செல்வங்களே! இங்கே திரண்டிருக்கக் கூடிய பெரியோர்களே! தாய்மார்களே! என் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுடைய உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

'மீண்டும் மஞ்சப்பை' என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன்.

மஞ்சள் பை கொண்டு வந்தால், 'வீட்டில் ஏதாவது விசேசமா? பத்திரிகை கொண்டு வந்திருக்கிறீர்களா?' என்று கேட்ட காலம் ஒன்று உண்டு.

அதன்பிறகு பிளாஸ்டிக் பை வந்து அதுதான் நாகரிகம் – மஞ்சள் பை வைத்திருப்பது கேவலம் என்ற ஒரு சூழல் உருவானது.

மஞ்சள் பை வைத்திருந்தாலே அவரைப் பட்டிக்காட்டான் என்று கிண்டல் செய்யக் கூடியவர்களும் உருவானார்கள். சினிமாவிலும் – தொலைக்காட்சித் தொடர்களிலும் கூட மஞ்சள் பையைக் கக்கத்தில் வைத்து ஒருவர் வந்தால்



அவரை கிராமத்துக்காரர் என்று அடையாளம் காட்டுவதற்காக பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.




அழகான – விதவிதமான பைகளை ஒவ்வொரு வணிக நிறுவனங்களும் தயாரித்து தங்களது போட்டிகளுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை வாங்குவதால் மஞ்சள் பையை எடுத்துச் செல்வது மக்கள் மத்தியிலும் குறைந்து விட்டது.

அந்த மஞ்சள் பைதான் சூழலுக்கு – சுற்றுச்சூழலுக்குச் சரியானது – அழகான – நாகரிகமான – பிளாஸ்டிக் பை என்பது சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிப்பது என்பதைப் பரப்புரை செய்தபிறகு இப்போது துணிப்பைகளைக் கொண்டு செல்லும் பழக்கம் அதிகமாகி வருகிறது. அது மேலும் அதிகமாக வேண்டும் என்பதற்காகத்தான் இந்த விழிப்புணர்வுப் பயணம் ஆகும்.

இன்றைய நாள் வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தருகிறோமோ – அந்தளவுக்குச் சுற்றுச் சூழலுக்கும் முக்கியத்துவம் தர வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். சுற்றுச்சூழலில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்பது மனிதகுலத்தை மீளாத துயரத்தில் ஆழ்த்துவது.

வேளாண் அறிஞர் எம்.எஸ்.சுவாமிநாதனின் பிறந்தநாள் விழாவில் நான் கலந்துகொண்டு உரையாற்றும்போது, சுற்றுச்சூழல் பிரச்சினைதான் மானுடத்தின் மாபெரும் பிரச்சினை என்பதை நான் வலியுறுத்திச் சொன்னேன்.

அந்தச் சுற்றுச்சூழலுக்கு மிகக் கேடு விளைவிப்பதுதான் பிளாஸ்டிக். அந்த பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் குறைத்தாக வேண்டும்.

இப்போது இந்த மஞ்சள் பை இருக்கிறது. பருத்திச் செடியில் இருந்து பஞ்சு கிடைக்கிறது. அதில் இருந்து பருத்தி நூலைத் துணியாக நெய்கிறோம். பை தைக்கிறோம். அந்த பை கிழிந்தது என்றால் அதனைக் கரித்துணியாக – மிதியடியாக வீட்டில் பயன்படுத்துகிறோம். அதுவும் சிக்கனத்துக்குப் பெயர்போன நமது பெண்கள் அதை முழுமையாகப் பயன்படுத்துவார்கள். அதன்பிறகு அது மக்கிவிடும். ஆனால், பிளாஸ்டிக் மக்காது. அதுதான் சுற்றுச்சூழலைக் கெடுக்கிறது.

- ஒருமுறை பயன்படுத்தப்பட்டுத் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள்தான் இன்று சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்திருக்கிறது.
- அதுதான் மண், நீர், காற்று என எல்லாவற்றையும் சீரழிக்கிறது.
- பிளாஸ்டிகை மண்ணில் போட்டால் மக்குவதற்குப் பல ஆண்டுகள் ஆகும்.
- இதனால் மண் கெடுகிறது. மண் கெட்டதால் வேளாண்மை பாதிக்கிறது. கால்நடைகளும் இவற்றைத் தின்று இறந்து போகின்றன.
- நீர் நிலைகளில் தூக்கி எறிந்தால் அங்குள்ள உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.
- நீர் மாசுபடக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது.
- ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் கடலின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. கடல்சார் உயிரினங்கள் பிளாஸ்டிக் பொருட்களை உண்டு மடிந்து போகின்றன.
- ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்கை எரிப்பதால் அதிலிருந்து டையாக்சின் வேதிப்பொருள் காற்றில் கலந்து, காற்று நஞ்சாகிறது!
- இதைச் சுவாசிக்கும் மனிதர்களுக்குச் சுவாசக் கோளாறுகள், நுரையீரல் பாதிப்புகள் ஏற்படுகின்றன.
- இத்தனை பாதிப்புகளை உருவாக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை நாம் நிறுத்தியாக வேண்டும். இத்தகைய பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கத் தமிழ்நாடு அரசு ஏராளமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.
- ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியப்படும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவது, உற்பத்தி செய்வது, ஓர் இடத்தில் சேமித்து வைப்பது, விநியோகம் செய்வது, போக்குவரத்து மூலம் எடுத்துச்செல்வது, விற்பனை செய்வது ஆகியவை தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்டுள்ளது.



❖ மக்கும் தன்மையுள்ள இயற்கைக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ அரசு விதிகளை மீறிச் செயல்படுவோரின் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

❖ விதிகளை மீறி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்த 130 தொழிற்சாலைகளுக்கு இதுவரை மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களையும் அரசு செய்து வருகிறது.

❖ ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியக்கூடிய தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த வேண்டாம் எனப் பல வகையிலும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கிறது, அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

❖ பேரங்காடிகள், உணவகங்கள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள் மற்றும் அரசு நிறுவனங்களாக இருக்கும் டாஸ்மாக் நிறுவனம், அறநிலையத்துறை, உணவு பாதுகாப்புத்துறை, பசுமைக் குழுக்கள், தேசிய பசுமைப் படை என அனைவரையும் அழைத்து ஒருமுறை பயன்படுத்தப்பட்டுத் தூக்கி எறியும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைத் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

❖ பிளாஸ்டிக் மாசு இல்லாத் தமிழ்நாடு என்ற தலைப்பில் பெருநகரங்களில் மண்டல மாநாடு நடத்தப்பட்டது.

❖ வாகனக் கண்காட்சி மூலம் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

❖ சமூக வலைதளங்களில் இடைவிடாது பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

❖ சிறு, குறு நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பெரிய தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

❖ ஒருமுறை பயன்படுத்தப்பட்டுத் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்கை ஒழிக்க மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்கிடக் கடந்த 03.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் தமிழ்நாடு அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

கடந்த நவம்பர் 27ஆம் தேதி அரசாணை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் மட்டும் நினைத்தால் இதனைச் செயல்படுத்த முடியாது. மக்களும் இணைய வேண்டும் என்று அரசு உறுதியாக நம்புகிறது. பிளாஸ்டிக் பொருட்களை மக்கள் நிராகரிக்க வேண்டும். மக்கள் நினைத்தால் மாற்றத்தை உடனடியாகச் செயல்படுத்த முடியும்.




அகத்தூய்மை வாய்மைக்கு! புறத்தூய்மை வாழ்வுக்கு!

– என்ற வைர வரிகளை உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்த வழியை அனைத்து மக்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, சுற்றுச்சூழலைக் காப்பதிலும் முன்னிலை வகிக்க வேண்டும்.

இயற்கையைக் காப்போம்!

இயற்கையோடு இணைந்து, இயைந்து காப்போம்!

இயற்கையைக் கெடுக்கும் பிளாஸ்டிக்குக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!


மஞ்சள் பை என்பதை யாரும் அவமானமாகக் கருத வேண்டிய அவசியமில்லை.

சுற்றுச்சூழலைக் காப்பவரின் அடையாளப் பைதான் இந்த மஞ்சள் பை. அதை நாம் நிரூபித்துக் காட்டுவோம் என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சியினைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தனது இல்லத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தெலங்கானா மாநில முதலமைச்சர் திரு. **கே.சந்திரசேகர் ராவ்** அவர்களை வரவேற்றார் (14.12.2021).



# தமிழர் மானம் காக்கச் சூளுரைப்போம்

ஈராயிரம் ஆண்டுகள் அடக்கப்பட்ட இனத்தின் மான உணர்ச்சியைத் தட்டியெழுப்பி, சுயமரியாதை ஒன்றே அடிமை விலங்கைத் தகர்த்தெறியும் விடுதலைக்கான வழி எனத் தொண்டாற்றிய தந்தை பெரியாரின் நினைவு நாளில், ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சிகளை வென்று – திராவிடக் கொள்கைகள் கொண்டு தமிழர் மானம் காக்கச் சூளுரைப்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு



*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.12.2021 அன்று தந்தை பெரியார் அவர்களின் 48ஆவது நினைவு நாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலை, சிம்சன் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*



# சென்னை சேப்பாக்கத்தில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை






**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, சேப்பாக்கம் புதிய அரசு விருந்தினர் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் சிலையினை 26.12.2021 அன்று திறந்து வைத்து, நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள அன்னாரின் நூல்களுக்கான நூலுரிமைத் தொகையினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

''தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர் என்றும், எனக்கே பாடம் கற்றுத் தரும் அளவிற்குத் தகுதி வாய்ந்தவர் நாவலர்'' என்று தந்தை பெரியார் அவர்களாலும், ''தம்பி வா தலைமை ஏற்க வா, நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்லவரே; நாவலரே'' எனப் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களாலும், ''நாடு போற்றும் நாவலரே; நற்றமிழ்க் காவலரே; நடைமிடுக்கும், நகைச்சுவை எடுப்பும் நற்றமிழ்ப் பேச்சால் நாட்டோரைக் கவர்ந்திழுக்கும் நாவன்மை மிக்க நாவலரே'' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலும் ''கற்பதில் நாட்டமும் – கற்றதைத் தெளிவதில் ஆர்வமும் – உண்மையை ஓர்வதில் ஊக்கமும், ஓர்ந்ததை விரித்துரைப்பதில் உவகையும் கொண்ட பண்பாளர்'' என இனமான பேராசிரியரால் போற்றிப் புகழப்பட்டவரே நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆவார்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் திருக்கண்ணபுரத்தில் 11.07.1920ஆம் ஆண்டு ராசகோபாலனார்–மீனாட்சி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். தமிழ்மொழி மீது கொண்டிருந்த அளவற்றப் பற்றின் காரணமாக, இரா. நாராயணசாமி என்கின்ற தனது பெயரினை இரா.நெடுஞ்செழியன் என்று மாற்றிக் கொண்டார். படிக்கின்ற காலங்களில் தாய்மொழியாம் அழகு தமிழ்மொழியை அதீதமாக நேசித்ததன் விளைவாக, தமிழ் இலக்கியங்கள், இதிகாசங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஆர்வமுடனே கற்றுத் தேர்ந்தார். அன்றைய நாட்களில் சமூகத்தில் நிலவி வந்த அவலங்களையும், அநியாயங்களையும் தைரியத்தோடு தட்டிக் கேட்ட தந்தை பெரியார் அவர்களின் பால் ஈர்க்கப்பட்டு, 1944ஆம் ஆண்டு தந்தை பெரியாருடன் திராவிட இயக்கத்தில், இளமைக் காலத்திலேயே, தன்னுடைய 24ஆம் வயதில் இணைத்துக் கொண்டார்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மொழி அறிவும், அசாத்திய பேச்சாற்றலும், சமுதாய நலனும், விடாத சுயமரியாதையும், பகுத்தறிவும் கொண்டு, தான் கொண்டிருந்த கொள்கையில், இலட்சியத்தில் இறுதிவரையில் உறுதி காத்து, அயராது மக்கள் பணியாற்றியதன் காரணமாக, தந்தை








பெரியாரிடமும், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவிடமும் மிகுந்த நன்மதிப்பினைப் பெற்றதோடு, மிகவும் குறுகிய காலத்தில் இயக்கத்தின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராக உயர்ந்து, உச்சம் தொட்டார்.


ஆட்சி மாற்றங்களிலும், அரசியல் மாற்றங்களிலும், மொழிப்போரிலும் மாணவர்களின் பங்களிப்பு மகத்தானது என்பதை உணர்ந்திருந்த காரணத்தினால், திராவிட இயக்கங்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திட நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் பங்களிப்பும், இனமான பேராசிரியர் க.அன்பழகனாரின் பங்களிப்பும் அளவிடக்கரியது. திராவிடக் கருத்துக்களை, சமூகச் சீர்திருத்தங்களை இளைஞர் மனங்களில் விதைத்திட 'மன்றம்' என்கின்ற இதழினைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

இடைவிடாத அரசியல் மற்றும் ஆட்சிப் பணிகளுக்கு இடையிலும், அழகுத் தமிழில் எழுதும் பழக்கமதை என்றும் கைவிடாத காரணத்தால், எண்ணற்ற கதைகள், கட்டுரைகளோடு 30க்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். குறிப்பாக பாவேந்தர் கவிதைகள், திருக்குறள் தெளிவுரை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, புறநானூற்றுப் புதையல், கலித்தொகை தரும் காதல் காட்சிகள், குறுந்தொகை குறித்த சொல்லும் சுவையும் இன்றளவும் இலக்கிய வட்டத்தில் பேசப்படும் நூல்களாகும். மறைந்த திராவிடம், மொழிப் போராட்டம், திராவிட இயக்க வரலாறு, சமூக நீதிப்போர், பண்பாடு போற்றுவோம் ஆகிய நூல்கள் அனைவராலும் விரும்பிப் படிக்கின்ற ஒன்றாகும்.

1967 முதல் 1969 வரை பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராகவும், 1971 முதல் 1975 வரையில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியிலும் கல்வி அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு உணவுத்துறை மற்றும் நிதித்துறை அமைச்சராகத் திறம்படச் செயலாற்றினார். தான் வாழ்கின்ற காலம் வரையில், தான் கொண்டிருந்த பகுத்தறிவுக் கொள்கையை உயிர்போல் காத்து வந்தவர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ''திராவிட இயக்கத்தின் சொல்லோவியம் – நடமாடும் பல்கலைக்கழகம் நாவலரின் நூற்றாண்டு நிறைவு விழாவினை அறிவு சார்ந்த தமிழ் உலகமும், திராவிட இயக்கத்தின் தொண்டர்களும் கொண்டாடி மகிழ்வோம்'' என அறிவித்திருந்தார்கள். மேலும், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் அன்னாரின் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை சேப்பாக்கம் புதிய அரசு விருந்தினர் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் திருவுருவச் சிலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.12.2021 அன்று திறந்து வைத்து, நூற்றாண்டு நிறைவு விழா சிலை திறப்பு சிறப்பு மலரை வெளியிட்டுச் சிறப்பித்தார்.



# கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்ட தேவஸ்தான திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்புச் செலவிற்கான மானியம் உயர்வு




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்புச் செலவிற்காகத் தற்போது வழங்கப்பட்டு வரும் ஆண்டுக்கான அரசு மானியத்தை ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையை சுசீந்திரம், கன்னியாகுமரி தேவஸ்தான திருக்கோயில்கள் இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு.இரா.ஞானசேகர் அவர்களிடம் வழங்கினார். மேலும், புதுக்கோட்டைத் தேவஸ்தான திருக்கோயில்களின் நிருவாக மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு வழங்கப்படும் அரசு மானியத்தை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையைப் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் இணை ஆணையர் திரு. க.தென்னரசு மற்றும் செயல் அலுவலர் திரு. கோ.சரவணன் ஆகியோரிடம் வழங்கினார்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது, கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த செங்கோட்டை வட்டம் ஆகிய பகுதிகள் தமிழ்நாடு மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. அப்பொழுது கன்னியாகுமரி தேவசம் போர்டு என்ற அமைப்பின்கீழ் 490 திருக்கோயில்களின் நிருவாகம் கொண்டுவரப்பட்டது. இத்திருக்கோயில்களுக்காகத் தற்போது ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியமான ரூ.3 கோடி திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் இதரச் செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை.

எனவே, கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் இதரச் செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியத்தினை ரூ.3 கோடியிலிருந்து ரூ.6 கோடியாக உயர்த்தி 22.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

மேலும், புதுக்கோட்டைத் தேவஸ்தான நிருவாகத்தின்கீழ் 225 திருக்கோயில்கள் உள்ளன. இந்நிருவாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்களின் பராமரிப்புச் செலவுகளுக்கு, புதுக்கோட்டைச் சமஸ்தான நிருவாகத்தால், 35 கிராமங்களில் 35,500 ஏக்கர் நன்செய் நிலங்களும், பூஜை பத்து மானியம், உள்துறை சேவை மானியம் மற்றும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் என வகைப்படுத்தப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வரப்பெற்ற நிலையில், மேற்படி நிலங்கள் மூலம் சரியான வருமானம் வராத காரணத்தினால், அரசிடம் நிலங்களை ஒப்படைத்து அதற்குப் பதிலாகப் பூஜை செலவுகளுக்காக 1897ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, ரூ.1.18 இலட்சம் பராமரிப்புச் செலவிற்கு வழங்கப்பட்டது.





இத்தொகை 30.11.2011 முதல் ரூ.1 கோடியாக உயர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தினைக் கருத்தில் கொண்டு அரசு மானியத்தினை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தி 12.11.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் இதரச் செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியத்தை ரூ.6 கோடியாக உயர்த்தியும், புதுக்கோட்டைத் தேவஸ்தான திருக்கோயில் நிருவாக மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக வழங்கப்படும் அரசு மானியத்தை ரூ.3 கோடியாக உயர்த்தியும், அதற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அலுவலர்களிடம் வழங்கினார். ❋



# அர்ச்சகர், ஓதுவார், இசை கற்போர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான உயர்த்தப்பட்ட ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகிய பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1,000 ஊக்கத்தொகையை ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்கும் திட்டத்தை, 18 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி, தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகியோருக்குப் பயிற்சிக் காலத்தில் ஏற்கெனவே ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, அந்த ஊக்கத்தொகை ரூ.3,000ஆக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வேதபாராயணர் பள்ளிகளில் பயின்று வரும் 18 மாணவர்கள், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளில் பயின்று வரும் 24 மாணவர்கள் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தவில், நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகளில் பயின்று வரும் 25 மாணவர்கள் என மொத்தம் 67 மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகையான 3,000 ரூபாயினை 18 மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, தொடங்கி வைத்தார்.





# திருச்சிராப்பள்ளியில் ரூ.1,084.80 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள்






**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.12.2021 அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.153.22 கோடி மதிப்பீட்டில் 203 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.604.10 கோடி மதிப்பீட்டிலான 532 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.327.48 கோடி மதிப்பில் 45,344 பயனாளிகள் பயன்பெறும் வகையில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :**

அரசின் நலத்திட்ட உதவிகள் பல்வேறு திட்டப்பணிகளின் அடிக்கல் நாட்டுவிழா போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைச் சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த நிகழ்ச்சிக்குப் பொறுப்பாக இருந்து பொறுப்போடு பணியாற்றி இது வெற்றிகரமாக அமைந்திட வேண்டும் என்ற உணர்வோடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.க.பொன்முடி அவர்களே! திரு.எஸ்.இரகுபதி அவர்களே! திரு.மா. சுப்பிரமணியன் அவர்களே! திரு.பி.மூர்த்தி அவர்களே! திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களே! இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்று வாழ்த்துரை வழங்கி அமர்ந்துள்ள மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்களே! டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களே! மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் அவர்களே! நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினர் திராவிட கழகத்தின் மாநிலங்களவைத் தலைவர் திரு.என்.சிவா அவர்களே! திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சு.திருநாவுக்கரசர் அவர்களே! கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் புதுக்கோட்டை திரு.அப்துல்லா அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம். பழனியாண்டி அவர்களே! திரு.எ.சௌந்திரபாண்டியன் அவர்களே! திரு.எஸ்.ஸ்டாலின்குமார் அவர்களே! திரு.ந.தியாகராஜன் அவர்களே! திரு.எஸ். இனிகோ இருதயராஜ் அவர்களே! திரு.சீ.கதிரவன் அவர்களே! திரு.பி.அப்துல் சமது அவர்களே! சேலம் திரு.ராஜேந்திரன் அவர்களே! திரு. குடந்தை அன்பழகன் அவர்களே! திரு.துரை சந்திரசேகரன் அவர்களே! மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! உள்ளாட்சிப் பொறுப்பில் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பிரதிநிதிகளே! மக்கள் பிரதிநிதிகளே!

இந்த நிகழ்ச்சியின் நோக்கத்தை, திட்டத்தை எடுத்துவைத்து உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே! பேரூராட்சிகளின் ஆணையர் திரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்களே! நகராட்சித் துறை இயக்குநர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களே! தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களே! துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்களே! மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன் அவர்களே! பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய உயர் அதிகாரிகளே! அலுவலர்களே! எழுச்சியுடன் குழுமியிருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே! குறிப்பாக என் அன்பிற்கினிய மகளிர் சுய உதவிக் குழுவில் இடம்பெற்றிருக்கும் சகோதரிகளே! தாய்மார்களே! பத்திரிகை உலக, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கும் நண்பர்களே! நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாநகராட்சி ஆணையர் திரு.முஜிபுர் ரகுமான் அவர்களே! உங்கள்





அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மன்னர்கள் விசுவநாதரும், முத்துவீரப்பனும் கோட்டை கட்டிய இந்த திருச்சியில் – சந்தா சாகிப் வீரமிகு போர் நடத்திய இந்த திருச்சியில் – ராணி மங்கம்மாள் சிறப்புமிகு ஆட்சி நடத்திய இந்தத் திருச்சியில் – ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் மாளிகை அமைத்துக் குடியிருந்த இந்தத் திருச்சியில் – நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைத் தலைவர் ஆக்கிய இந்தத் திருச்சியில் – இன்றைய தினம் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு நான் வந்திருக்கிறேன். திருச்சிக்கு எத்தனையோ முறை வந்திருக்கிறேன். திருமண விழாக்களில், பொதுக் கூட்டங்களில், கழக நிகழ்ச்சிகளில், அரசு நிகழ்ச்சிகளில், மாநாடுகளில் இலட்சக்கணக்கான தொண்டர்கள், உடன்பிறப்புகள் மத்தியில் நான் பங்கேற்றுப் பலமுறை பேசி இருக்கிறேன். ஆனால், இன்று முதலமைச்சராக மக்கள் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் மீண்டும் ஒரு மக்கள் கடலை இங்கே உருவாக்கி இருக்கிறார். தம்பி மகேஸ் சொன்னார், மாநாட்டு மன்னர் என்று. நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவருக்கு மாநாடு போன்ற கூட்டத்தை எழுப்புவது என்பது சர்வ சாதாரணம், டீக்கடையில் நின்று டீ குடிப்பது போன்று. அதனால்தான் நேரு என்றால் மாநாடு, மாநாடு என்றால் நேரு என்று நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். நேருவுக்கு நிகர் நேருதான் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். மாநாடு என்றால் நேரு என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்று சொன்னால், எதிரியை நேருக்கு நேராக எதிர்ப்பதிலும் நட்பை நெஞ்சுக்கு நேராக அரவணைப்பதிலும் நிகரானவர் நேரு அவர்கள் என்று நான் பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இந்த மேடையில் நிற்கும்போது, திருச்சிக்கு வந்தபோதெல்லாம் நான் சொல்லியிருப்பது, இப்போது மலைக்கோட்டையிலிருந்து எனக்கே எதிரொலியாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

சில நாட்களுக்கு முன் சேலத்தில் இதே போன்ற அரசு நிகழ்ச்சியை நேரு அவர்கள் முன்னின்று நடத்தினார்கள். அங்கிருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிருவாகிகள், உள்ளாட்சி அமைப்பில் இருக்கும் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்திருந்தாலும், முறையோடு, செழிப்போடு, உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு, கம்பீரமாக அதைப் பொறுப்பேற்று நடத்திக் காட்டியவர் திரு.நேரு அவர்கள். முதலில் அவர் திருச்சியில் நடத்தாமல் சேலத்தில் நடத்தி முடித்துவிட்டு, அதன்பிறகு தான் திருச்சிக்கு வந்திருக்கிறார். எனவே, இது அவருடைய பெருந்தன்மையை வெளிப்படுத்துகிறது. சில பெண்கள், திருமணம் முடித்துச் சென்றதும் புகுந்த வீட்டுக்கு அதிக முன்னுரிமை கொடுப்பார்கள். அது தவறில்லை. அது போன்றுதான் நேரு அவர்களும் புகுந்த வீடான சேலத்தில் சிறப்பாக நடத்திவிட்டு, பிறந்த வீட்டையும் மறக்காமல் இங்கும் அவர் சிறப்பாக நடத்திக் கொண்டு இருக்கிறார்.



நகர்ப்புற நிருவாகத்துறை அமைச்சர் நேரு அவர்களும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களும் இரட்டையர்களாகத் திருச்சி மாவட்டம் முழுக்கச் சுற்றுப்பயணம் செய்து மொத்தம் 78,582 மனுக்களை மக்களிடத்திலிருந்து பெற்றுள்ளார்கள். அவற்றை அலசி ஆராய்ந்து ஆய்வு நடத்தி, அதில் 45,088 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மற்ற மனுக்களைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன், பரிசீலனை செய்து கொண்டிருக்கும் மனுக்களில் தகுதியான மனுக்கள் அனைத்தும் நூற்றுக்கு நூறு நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் உங்கள் மத்தியில் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் எந்தத் தனிமனிதருக்கும் அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்க மனு இல்லாத ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அதுதான் என் இலட்சியம். அரசின் நலத் திட்டங்கள், சேவைகள் அனைத்தும் அனைத்து மக்களையும் சென்றடைந்தாக வேண்டும். அரசிடம் கோரிக்கை வைத்தால் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை, ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மனுக்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றால் மீண்டும், மீண்டும் மனுக்களை மக்களிடம் இருந்து பெறக்கூடிய நிலையைத்தான் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது உறுதியாகச் சொல்கிறேன், இத்தகைய சுழற்சி முறையை எப்போதும் நாங்கள் நிறுத்த மாட்டோம். சிலர் நினைக்கலாம், இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், ஆரம்பத்தில் இப்படித்தான், கல்யாண ஜோர், புது மாப்பிள்ளை என்று நினைப்பார்கள். உறுதியாகச் சொல்கிறேன், நாங்கள் எப்போதும் இப்படித்தான் இருப்போம். எந்த நிலையிலும் இதிலிருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம்.

இன்றைய தினம் திருச்சி மாவட்டத்துக்கான பெருந்திட்டங்கள் சிலவற்றை மட்டும் உங்களிடம் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி மாநகராட்சியின் வேகமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இப்பெருந்திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம்.

❖ திருச்சி மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளில் ரூ.210 கோடி செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்.

❖ ரூ.200 கோடி மதிப்பீட்டில் பஞ்சப்பூரில் 100 எம்.எல்.டி. நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட இருக்கிறது.

❖ திருச்சி, திருவரங்கம் இடையிலான பாலம் பழமையானதாக இருக்கிறது. அதனால் புதிய பாலம் அமைப்பது குறித்தும், திருச்சி நீதிமன்ற ரவுண்டானா முதல் சுண்ணாம்புக்காரன்பட்டி வரையில் புதிய வெளிவட்டச் சாலை ஒன்றை அமைப்பது குறித்தும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கச் சொல்லி இருக்கிறேன். அது கிடைத்த பிறகு அந்தப் பணியும் விரைவில் தொடங்கப்படும்.

❖ துறையூர் மாநகராட்சி மக்களுக்காகப் புதிய குடிநீர்த் திட்டமானது ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

❖ மணப்பாறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.18 கோடி மதிப்பீட்டில் மேலும் மேம்படுத்தப்படும் – ஆகிய இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை நான் இங்குச் சுருக்கமாக உங்களிடத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

திருச்சியைப் பொறுத்தவரையில் ரூ.153.22 கோடி மதிப்பிலான 203 திட்டப்பணிகள் முடிந்து அவை மக்கள் பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. இன்றைய தினம் ரூ.604.10 கோடி மதிப்பிலான 532 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இவை விரைவாக முடிக்கப்பட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும். அடிக்கல் நாட்டிய பணிகள் எந்தளவுக்கு வேகத்துடன் நடந்து வருகிறது என்பதை இந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அமைச்சர் மட்டுமல்ல முதலமைச்சராக இருக்கக்கூடிய நானே அடிக்கடி வந்து நேரடியாக ஆய்வு நடத்துவேன், துரிதப்படுத்துவேன். இன்றைக்குக் காலையிலே கூட தஞ்சையிலே இதே போன்று ஒரு அரசு நிகழ்ச்சி நடந்தது. நான் அங்கே பேசும்பொழுதும் தெளிவாகச் சொன்னேன். ஏன் என்றால் இன்றைக்கு அதிகம் கூட்டம் கூட்டக் கூடாது. அப்படியே ஒருவேளை கூட்டம் கூட்டினாலும் மாஸ்க்குடன் நீங்கள் வரவேண்டும். கொரோனாவுக்கு என்னென்ன விதிமுறைகள் வகுத்துத் தந்து இருக்கின்றோமோ நீங்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆகவே, கொரோனாவை முழு அளவில் கட்டுப்படுத்தாவிட்டாலும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம்.

இப்போது ஒமிக்ரான் என்கிற ஒரு புதிய தொற்று வந்திருக்கிறது. வெளிநாடுகளில் பெரிய அதிர்ச்சியைத் தரக்கூடிய வகையில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவிலேயே சில மாநிலங்களில் வந்து விட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டு நாட்களாக அப்படியே தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நான் போய் தஞ்சையிலே, திருச்சியிலே இந்த நிகழ்ச்சியை நடத்தினால் அந்த நோய் பரவக்கூடிய காரணமாக அமைந்துவிடுமோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதனால் நேரு அவர்களையும், மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் இரண்டு நாளைக்கு முன்பு சென்னைக்கு வரச்சொல்லி, கலந்துபேசி ஏறக்குறைய தஞ்சையைப் பொறுத்தவரைக் கிட்டத்தட்ட ஒரு 20,000–25,000 பயனாளிகளை அழைத்து நடத்த வேண்டும். அதே போலத் திருச்சியைப் பொறுத்த வரை 45,344 பயனாளிகளை அழைத்து நடத்த வேண்டும். ஆகவே அதை யோசித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று சொன்னபோது மிகவும் பெருந்தன்மையோடு சொன்னார்கள்.



நாங்கள் அத்தனைப் பேரையும் கூப்பிடவில்லை. அதில் ஒரு 25 சதவிகிதம் அதாவது 5,000 பயனாளிகளை மட்டும் அழைத்துச் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து, இடைவெளி விட்டு இடைவெளிவிட்டு அவர்களை உட்கார வைத்து இந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டும். அது ஒன்றும் தவறில்லை என்று என்னிடத்திலே எடுத்துச் சொல்லி அதற்குப் பிறகு அந்த வகையிலேதான் நாம் காலையிலும் இப்பொழுது மாலையில் திருச்சியிலும் நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மட்டும் 44,645 பயனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் நலத்திட்ட உதவிகள். அவர்கள் அத்தனை பேரும் இங்கு வரவில்லை. ஒரு 5,000 பேர் மட்டும்தான் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் இந்த விழா முடிவடையும் நேரத்தில் அந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. மிச்சம் இருக்கக்கூடியவர்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் கலந்து பேசி முடிவெடுத்திருக்கிறோம்.

இன்றிலிருந்து மூன்றே நாட்களுக்குள்ளே அந்த மிச்சம் இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் வீடுதேடி வந்து அதிகாரிகளே, நம்முடைய மக்கள் பிரதிநிதிகளே உங்களிடத்திலே அந்த நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது உறுதி. ஆகவே, இதன் மொத்த மதிப்பு ரூ.327.48 கோடி ஆகும். ஆகமொத்தம் இன்றைய தினம் மட்டும் சுமார் ரூ.1,084.80 கோடி மதிப்பிலான திட்டங்கள், அடிக்கல் நாட்டு விழாக்கள் என்ற இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. எனக்கு உண்மையில் மனநிறைவாக இருக்கிறது. எனது மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் உண்மையான, மக்கள் நலன் சார்ந்த தெம்போடு, ஒரு இருமாப்போடு இந்த ஆட்சியை வழங்கிக் கொண்டு இருக்கிறேன்.

நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து இந்த இடத்திற்கு 10 அல்லது 15 நிமிடத்திற்குள் வந்துவிட முடியும், ஆனால் ஏறக்குறைய இரண்டு, இரண்டரை மணி நேரம் ஆகியிருக்கிறது. என்ன காரணம்? மகேஸ் சொன்னார், திரு.சிவா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார். பொதுமக்கள் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் சிலர், சாலை இருமருங்கிலும் நின்றுகொண்டு மகிழ்ச்சியோடு, உணர்ச்சியோடு வரவேற்றார்கள். இங்கே சொன்னதுபோல அடைமொழி வைத்து என்னை வாழ்த்தி முழக்கமிட்டார்கள், மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, பூரித்துப் போனேன்.

ஆனால், அதே நேரத்தில் எனக்கு ஒரு அச்சுறுத்தலும் ஏற்பட்டது. எவ்வளவு நம்பிக்கை நம் மீது வைத்திருக்கிறார்கள், அந்த நம்பிக்கையை நாம் எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்பதுதான் எனக்கு வந்தது.



எங்கே சென்றாலும், மனுநீதிச் சோழன் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இப்போது மனு வாங்கக்கூடிய சோழனாக இன்றைக்கு வலம் வரக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த மனுக்களைக்கூட சில நேரங்களில் உள்ளே புகுந்து, இடிபாடுகளில் சிக்கி அவதிக்கு ஆளாகும் அந்தச் சூழ்நிலையைப் பார்க்கும்போது, நான் ஏற்கெனவே நம்முடைய தோழர்கள், தொண்டர்களிடத்தில், அரசு அதிகாரிகளிடத்தில், அரசு அலுவலர்களிடத்தில் நீங்களே முன்கூட்டியே நேரடியாகச் சென்று அதைப் பெற்றுக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு நான் அதை வாங்கிக் கொள்கிறேன், எளிமையாக முடியும் என்றும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் முடிக்கலாம் என்று நான் சொன்னேன். ஒரு சிலர் கொடுக்கிறார்கள், ஒரு சிலர் கொடுப்பதில்லை, அவர் கையில்தான் கொடுப்போம், அப்போதுதான் அது நிறைவேறும் என்ற நம்பிக்கை இன்றைக்கு மக்களிடத்தில் வந்திருக்கிறது.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் செய்வதுமான நிகழ்ச்சியில் பங்கெடுப்பதன் மூலமாக ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற வாக்குக்கு உண்மையாக இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.


சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இதே திருச்சியில் ஒரு மாபெரும் மாநாடு. ஒரு பொதுக் கூட்டத்தை மாநாடு போல் நம்முடைய அமைச்சர் திரு. நேரு அவர்கள் நாம் ஆட்சிக்கு முன்பு, தேர்தலுக்கு முன்பு நடத்தினார். அந்தக் கூட்டத்தில் ஏழு உறுதிமொழிகளை நான் தந்தேன். அந்த உறுதிமொழிப்படிதான் இன்றைக்கு நாம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

“தி.மு.க. தலைமையில் அடுத்து அமைகிற ஆட்சி தந்தை பெரியார் விரும்பிய சமூகநீதி ஆட்சியாக இருக்கும்.

பேரறிஞர் அண்ணாவின் மாநில சுயாட்சியின் ஆட்சியாக இருக்கும்.

நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய நவீன மேம்பாட்டு ஆட்சியாக இருக்கும்.

பெருந்தலைவர் காமராசரின் கல்வி வளர்ச்சி ஆட்சியாக இருக்கும்.



தோழர் ஜீவா விரும்பிய சமத்துவ ஆட்சியாக அமையும்!” என்று நான் சொன்னேன். அத்தகைய ஆட்சியைத்தான் நாம் அமைத்திருக்கிறோம். அமைத்தது மட்டுமல்லாமல், அத்தகைய ஆட்சியைத்தான் இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆட்சி அமைந்தால் அந்த அரசு என்னென்ன திட்டங்களுக்கு முன்னுரிமை தரும் என்பதையும் அந்தக் கூட்டத்தில் அப்போது நான் சொன்னேன். அந்த ஏழு உறுதிமொழிகளைத் தந்து அதற்கு என்னென்ன முன்னுரிமையை நாங்கள் வழங்குவோம் என்று தெளிவாக நான் எடுத்துச் சொன்னேன்.

- ❖ வளரும் வாய்ப்புகள் – வளமான தமிழ்நாடு!
- ❖ மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!
- ❖ குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்!
- ❖ அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்தர மருத்துவம்!
- ❖ எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!
- ❖ உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்!
- ❖ அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்!

இவற்றைத்தான் எனது ஏழு உறுதிமொழிகளோடு நான் குறிப்பிட்டுச் சொன்னேன்!

இந்த ஆறு மாத காலத்தில் ஏராளமான புதிய தொழில்களை உருவாக்க ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது. அதனால், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறப் போகிறார்கள். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்பது மிகப்பெரிய இலக்கை எட்ட இருக்கிறது.

வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கையை வெளியிட்டு உள்ளோம். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழ்நாட்டில் வேளாண்மைக்கு என்று நிதிநிலை அறிக்கையை நாங்கள் வெளியிடுவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னோம். அதை முதல் நிதிநிலை அறிக்கையிலேயே மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறோம். வேளாண்மைத்துறைக்கு என்று தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பைக் கொடுத்து மகசூலை அதிகரிக்க உதவிகள் செய்து வருகிறோம்! கிராமப்புறத் திட்டங்கள் அனைத்தையும் புதுப்பித்து நிதிகளை ஒதுக்கீடு செய்து வருகிறோம்! புதிய கல்லூரிகள் அறிவிக்கப்பட்டுள்ளன! மக்களைத் தேடி மருத்துவம் முதல் அதிநவீன மருத்துவமனைகள் வரை எத்தனையோ திட்டமிடுதல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன! நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகள், சாலைகள், பாலங்கள் அறிவிக்கப்பட்டுப் பணிகள் நடக்கத் தொடங்கி இருக்கிறது!

தொழில் வளர்ச்சிக்குத் தரும் அதே முக்கியத்துவத்தைச் சமூக வளர்ச்சிக்கும், வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும், பெண்களுக்கான மேம்பாட்டுக்கும் தரத் தொடங்கி இருக்கிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் திருச்சியில் தேர்தலுக்கு முன்பு நான் வழங்கிய ஏழு உறுதிமொழிகளையும் எடுத்து வைத்துக் கொண்டு, நான் செயல்படுத்தத் தொடங்கி விட்டேன். இதைத் திருச்சி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் நான் விரும்புகிறேன்.

“நம்மால் முடியும்! நம்மால் மட்டும்தான் முடியும்!” என்று நான் அப்போதே குறிப்பிட்டேன். அந்த நம்பிக்கை தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட இப்போது எனக்கு அதிகமாக வந்துவிட்டது. கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் அனைத்தையும் சமாளித்துச் சமூக வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயல்படுத்திக் காட்டி வருகிறோம். ஆட்சிக்கு வந்தபோது கொரோனாவின் கோரத்தாண்டவம்! அதன் பிறகு மழை, வெள்ளப் பாதிப்புகள். அத்தனை சோதனைகளையும்




வென்றோம். இந்தச் சோதனையான நேரங்களில் எல்லாம் மக்களோடு மக்களாக நான் இருந்தேன். நான் மட்டுமல்ல, அமைச்சர் பெருமக்கள் இருந்தார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள், உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் இருந்தார்கள், அரசு அதிகாரிகள், அரசு அலுவலர்கள் அனைவரும் இருந்தார்கள். மொத்தத்தில் அரசாங்கமே இருந்தது.

தமிழ்நாட்டு மக்களே உங்கள் கோரிக்கைகளை எங்கள் தோளில் இறக்கி வையுங்கள். அவற்றை நிறைவேற்றிக் காட்டுவோம். நாளை மறுநாள் 2022 புதிய ஆண்டு பிறக்கிறது. புதிய ஆண்டு பிறக்கப் போகும் நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது 2021 முடிந்து 2022 அடுத்த ஆண்டு பிறப்பதாகக் கருத வேண்டாம். கடந்த காலச் சுமைகள், சோகங்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து, ஒரு சிறப்பான ஆண்டு பிறக்கப் போகிறது. மக்களின் அனைத்து ஆசைகளும் நிறைவேறும் ஆண்டாக 2022 அமையட்டும். அனைத்துத் துறைகளிலும் தமிழகம் சிறந்து விளங்கக்கூடிய ஆண்டாக இருக்கட்டும்.

இந்தியாவிலேயே இருக்கக்கூடிய மாநிலங்களை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து, அதில் இருக்கும் முதலமைச்சர்களை எல்லாம் சுட்டிக்காட்டி, ஒரு கருத்துக்கணிப்பு நடத்தி அந்த செய்திகள் எல்லாம் வந்தது. எனக்கு அதில் மகிழ்ச்சி கிடையாது, ஒரு பக்கத்தில் இருக்கலாம், அது வேறு. ஆனால், முழு மனநிறைவு அடைய வேண்டுமென்றால் இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த மு.க.ஸ்டாலின் முதலிடம் என்று சொல்வதைவிட, இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் நம்முடைய தமிழ்நாடு முதலிடம் என்று சொல்லக்கூடிய நிலை வந்தால்தான் எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி ஏற்படும். ஆகவே, 2022ஆம் ஆண்டை சிறந்த ஆண்டாக ஆக்குவதற்கு நம்முடைய அரசு தொடர்ந்து தன்னுடைய கடமையை ஆற்றும், அதற்கு நீங்கள் ஒன்றிணைந்து, துணை நின்று கரம் கொடுங்கள். அந்த வாய்ப்பை எங்களுக்கு ஏற்படுத்தித் தருவதற்கு நீங்களும் ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டு, உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

விழாவினையொட்டி, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 28.12.2021

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அகவிலைப்படி பெறத் தகுதியுள்ள ஏனைய பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2022 முதல் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என 07.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அகவிலைப்படி பெறத் தகுதியுள்ள ஏனைய பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படியினை 14 சதவிகிதம் உயர்த்தி, 01.01.2022 முதல் 17 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாக உயர்த்தி வழங்கிட 28.12.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த அகவிலைப்படி உயர்வின் காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றிற்குத் தோராயமாக ரூ.8,724 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

மேலும், பொங்கல் பரிசாக ‘C’ மற்றும் ‘D’ பிரிவுப் பணியாளர்களுக்கு ரூ.3 ஆயிரமும், ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.500 வழங்கிடவும், சிறப்புக் காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பொங்கல் பரிசாக ரூ.1,000மும், முன்னாள் கிராம நிருவாக அலுவலர்கள் உள்ளிட்ட சிறப்புக் காலமுறை ஊதியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற சிறப்பு ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.500 வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் காரணமாக, அரசுக்குத் தோராயமாக ரூ.169.56 கோடி அளவிற்குச் செலவினம் ஏற்படும்.

தமிழ்நாடு அரசுக்கு நிதிச்சுமை உள்ள இந்தச் சூழ்நிலையிலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலன் கருதி, அகவிலைப்படியினை 17 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாக உயர்த்தி வழங்கிடவும், ‘C’ மற்றும் ‘D’ பிரிவுப் பணியாளர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

# தஞ்சாவூரில் ரூ.1,231.75 கோடியில் திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.12.2021 அன்று தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசு கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.98.77 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 90 திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, ரூ.894.56 கோடி மதிப்பீட்டிலான 134 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 44,525 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.238.40 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை :**

அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.கே.என்.நேரு அவர்களே! முனைவர் க.பொன்முடி அவர்களே! திரு.எஸ்.ரகுபதி அவர்களே! திரு.அர.சக்கரபாணி அவர்களே! திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே! திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களே! தஞ்சை மாவட்டத்தினுடைய பொறுப்பை ஏற்று, தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே! திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்களே! மாண்புமிகு அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் அவர்களே! திரு.செ. ராமலிங்கம் அவர்களே! திரு.எஸ். சண்முகம் அவர்களே! புதுக்கோட்டை திரு.அப்துல்லா அவர்களே! தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்களே! சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் ஜவாஹிருல்லா அவர்களே! திரு. துரை சந்திரசேகரன் அவர்களே! திரு.டி.கே.ஜி.நீலமேகம் அவர்களே! திரு.கா.அண்ணாதுரை அவர்களே! திரு.பூண்டி கலைவாணன் அவர்களே! திரு. டி.ஆர்.பி.ராஜா அவர்களே! திரு. என்.அசோக்குமார் அவர்களே! இந்த விழாவின் துவக்கத்தில் நம் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., அவர்களே! கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா அவர்களே! மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி உஷா புண்ணியமூர்த்தி அவர்களே! பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்திருக்கக் கூடிய அதிகாரிகளே! அலுவலர்களே! தொலைக்காட்சி, பத்திரிகை உலக நண்பர்களே! சகோதரர்களே! காவல்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! என்னுடைய பாசத்திற்கும், பேரன்பிற்கும் உரிய மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய சகோதரிகளே! தாய்மார்களே! நிறைவாக நன்றி உரை ஆற்றவிருக்கக்கூடிய கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.எச்.எஸ்.ஸ்ரீகாந்த் அவர்களே! பெருந்திரளாகத் திரண்டிருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே! பல்வேறு நலத்திட்டத்தின் மூலமாகப் பயன்பெற இருக்கக்கூடிய பயனாளிகளே!



என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.



கோவில்களில் பெரிய கோவிலாக அமைந்திருப்பது தஞ்சையில்தான்! பெருமை வாய்ந்த, கல்லணை இந்த தஞ்சை பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டுக்கே சோறு போடக்கூடிய நெற்களஞ்சியமாக இந்த தஞ்சை விளங்கிக் கொண்டிருக்கிறது. சோழர்கள் ஆட்சியின் தலைநகர் இதுதான். காவிரி பாயும் மண்ணும் இந்த தஞ்சைதான்.

இவை அனைத்துக்கும் மேலாகத் தலைவர் கலைஞர் அவர்களுக்குப் போராட்டப் பயிற்சி கொடுத்து, அவரை உலகத் தலைவர்களில் ஒருவராக உயர்த்தியதும் இந்தத் தஞ்சைதான்.

அத்தகைய தஞ்சை மண்ணில் மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெறும் இந்த அரசு விழாவில் நானும் பங்கேற்றுப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி வைக்கக்கூடிய ஒரு பெருமை, சிறப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை தந்திருக்கக் கூடிய அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாமன்னன் இராசராசன், தான் ஒரு மாமன்னன் என்பதன் அடையாளமாகப் பெருவுடையார் கோயிலைக் கட்டினார். அத்தகைய மாமன்னனுக்குப் பெருவுடையார் கோயிலில் சிலை அமைத்திட வேண்டுமென்று நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால், அன்றைக்கு இருந்த ஒன்றிய அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை. இதில் என்ன வேடிக்கை என்றால், கோயிலைக் கட்டியவர் அவர். ஆனால் அவருக்குக் கோயிலில் சிலை வைக்க அனுமதி கொடுக்கவில்லை. ஆனாலும் பரவாயில்லை, கோயிலின் உள்ளேதானே சிலை வைக்கக்கூடாது, நான் கோயிலுக்கு வெளியே சிலை வைக்கிறேன் என்று சொல்லி தலைவர் கலைஞர் அவர்கள் அதை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள்.

இராசராசன் கட்டிய பெருவுடையார் கோயிலின் ஆயிரமாண்டு விழாவை நடத்தியவரும் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அந்த விழாவிற்கு இதுவரையில் யாரும் பார்த்திராத வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த விழாவின் நிகழ்ச்சிக்கு வருகிறபோது பட்டுவேட்டி கட்டிக் கொண்டு வந்தார் என்பது வரலாறு.

அந்த அளவுக்குப் பெரிய கோயிலையும், மாமன்னன் இராசராசனையும், அத்தோடு சேர்த்து, தஞ்சையையும் பெருமைப்படுத்திய அரசுதான், கலைஞர் தலைமையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை உங்களுக்கு நான் இந்த நேரத்தில் பெருமையோடு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தஞ்சை என்றாலே காவிரி பூமி! காவிரி நீரைப் பங்கிடுவதில் கருநாடகாவுக்கும், தமிழகத்துக்கும் பிரச்சினை வந்தபோதே, அதாவது 1970ஆம் ஆண்டே, காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் எடுத்து வைத்தார்கள். இதனை வலியுறுத்தித் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1971ஆம் ஆண்டு தீர்மானமும் நிறைவேற்றினார்கள். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் 1990ஆம் ஆண்டு மத்தியில் பிரதமராக இருந்த திரு.வி.பி.சிங் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி, வற்புறுத்தி, காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கச் செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தமிழகத்துக்கு எவ்வளவு தண்ணீர் தரப்பட வேண்டும் என்ற இடைக்காலத் தீர்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இப்படி அறிவிக்கப்பட்ட தண்ணீரைக் கருநாடக அரசு ஒழுங்காக வழங்குகிறதா என்று கண்காணிப்பதற்காக, ஒரு கண்காணிப்பு ஆணையத்தை அமைப்பதற்கான முயற்சிகளைச் செய்து 1997ஆம் ஆண்டு அதைச் செய்து முடித்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அவர் பிரதமராக இருந்தபோது, அது அமையக் காரணமாக இருந்தவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்!

காவிரி இறுதித் தீர்ப்பும் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், 2007ஆம் ஆண்டு நமக்குக் கிடைத்தது வந்தது. இப்படி காவிரி உரிமையைக் காப்பாற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்களும் மறந்திருக்கமாட்டீர்கள். அத்தகைய சாதனையின் தொடர்ச்சியாகத்தான் இந்த மாபெரும் நிகழ்ச்சி இப்போது நடந்துகொண்டு இருக்கிறது.

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் இதில் திரள்வார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டோம். ஆனால், இன்றைக்குக் கொரோனாவின் தாக்கத்தைத் தமிழகத்தைப் பொறுத்தவரைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும் இன்றைக்கு வேறு பெயரில் அந்தத் தொற்று வரக்கூடிய சூழலில் ஆங்காங்கே பல்வேறு மாநிலங்களில், பல்வேறு நாடுகளில் அது பெரிய அளவிற்கு உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தாலும், நம் தமிழகத்திற்கு அதுபோன்ற நிலைமை வந்துவிடக்கூடாது என்பதற்காக இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களையும், திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் நான் சென்னைக்கு அழைத்து இப்போது நிகழ்ச்சி தேவையா? அந்த நிகழ்ச்சி நடத்தும்போது அதனால் தொற்று ஏற்பட்டுவிடுமா? என்று அதிகாரிகளுடன் கலந்துபேசி அதற்குப்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கலந்துபேசி, இந்தத் தஞ்சையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு ஏறக்குறைய 22,000 பயனாளிகள் பயன்பெறக்கூடிய வகையில் இந்த

நிகழ்ச்சியை நடத்தப்போகிறோம் என்று சொன்னார்கள் அப்படியென்றால், இலட்சத்தைத் தாண்டக்கூடிய அளவிற்குத்தான் பொதுமக்கள் இங்கு வருவார்கள். அதற்கேற்ற வகையில்தான் பந்தலும் அமைக்கப்பட்டது. ஆனால், இப்போது தொற்று ஆங்காங்கே தலைதூக்கத் தொடங்கியுள்ளதால், தயவு கூர்ந்து நிகழ்ச்சியை ஒத்திவைக்கலாமா, ரத்து செய்யலாமா என்று யோசித்தபோது, கொரோனாவின் தாக்கத்தைக் குறைக்க அரசு விதிக்கும் நிபந்தனைகளை கடைப்பிடிக்கக் காத்திருக்கிறோம். எனவே, 5,000 நபர்களுக்கு மட்டும்தான் வழங்கி நிகழ்ச்சியை நடத்தி முடிக்கலாம் என்று திட்டமிட்டு அதற்குப் பிறகு இந்த நிகழ்ச்சியை நாம் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், ஏறக்குறைய 22,000 நபர்களுக்கு நாம் தகவல் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஏமாற்றமடைய வேண்டாம். இங்கே 5,000 பயனாளிகளுக்குத்தான் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. மீதமுள்ள பயனாளிகளுக்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் நம்முடைய ஆட்சித்தலைவர் மூலம் நியமிக்கப்படக்கூடிய சில அதிகாரிகள் மூலம் உங்கள் வீடு தேடி வந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நேற்று மாலையில் நான் தஞ்சைக்கு வந்த பிறகு நான் தங்கியிருக்கும் இடத்திற்கு ஆட்சித் தலைவரையும், சில அதிகாரிகளையும் அழைத்து, சில விவரங்களை நான் ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டேன், அது என்னவென்றால், விவசாயிகளை அழைத்துப் பேசினீர்களா ? விவசாயிகளை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தி இருக்கிறீர்களா ? அப்படி நடத்துகிற நேரத்தில் அவர்கள் சொன்ன முக்கியமான பிரச்சினைகள் என்ன ? என்பது பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர் சொன்ன ஒரு செய்தி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அதை உங்களிடமும் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

1973 அதாவது 48 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சாதனை அளவாக 1,66,135 ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்று ஒரு மகிழ்ச்சியான செய்தியை என்னிடம் சொன்னார்.

குறுவை இலக்கு என்பது 1,06,250 ஏக்கர்தான். ஆனால் அதையும் தாண்டி மிக அதிகமாக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியாகச் சொன்னார்கள் என்று என்னிடத்தில் அவர் சொன்னார்.

இந்தச் சாதனைகளை அடைவதற்கு அரசு எடுத்த பல்வேறு முயற்சிகள்தான் காரணம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. வழக்கமாக சூன் 12ஆம் தேதி நாங்கள் மேட்டூர் அணையைத் திறப்பது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அது நிறைவேறாத நிலையிலிருந்தது, குறித்த காலத்திற்குள் திறக்கப்பட முடியாத சூழ்நிலை தொடர்ந்து ஏற்பட்டது. ஆனால் நாம் ஆட்சிக்கு வந்தபிறகு, சூன் 12ஆம் தேதி மிகச்சரியாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்டோம். இதில் என்ன முக்கியம் என்று கேட்டால்,

- ★ இப்படித் திறந்து விடுவதற்கு முன்னதாக டெல்டா பகுதியில் தூர்வாரவேண்டும் என்ற ஒரு திட்டத்தை வேகப்படுத்தி, அப்படித் தூர் வாரி முடித்தால் இதனால் கடைமடைப் பகுதி வரைக்கும் தண்ணீர் போகும் என்று திட்டமிட்டு அந்தப் பணியை நிறைவேற்றினோம்.
- ★ குறுவைத் தொகுப்புத் திட்டம் அறிவித்தோம். இதன் மூலம் மானியத்தில் உரங்கள் வழங்கினோம். நெல் விதைகளை 50 சதவிகித மானியத்தில் வழங்கினோம்.



இவை அனைத்தும் சேர்ந்துதான் நெல் சாகுபடியை அதிகப்படுத்தி, இந்த நெல் சாகுபடியை அதிகப்படுத்துவதும், சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துவதும் தான் இந்த அரசினுடைய இலக்காக அமைத்தோம்.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் முதல் ஆறு மாத காலத்திலே மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத ஒரு சாதனையாக 2021–2022ஆம் ஆண்டு சம்பா / தாளடி இலக்கு என்பது 3,12,599 ஏக்கருக்குப் பதிலாக 3,42,973 ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி நடந்துள்ளது என்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேற்றைக்கு என்னிடத்தில் சொன்னார்.

நம்முடைய அரசு தமிழகத்தில் மாபெரும் வேளாண் புரட்சிக்கு அடித்தளம் அமைக்கும் வகையில் வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் செய்ய முடியாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டிலே நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். அந்த நிதிநிலை அறிக்கை மூலமாகத் தமிழகத்தில் வேளாண் புரட்சியை உருவாக்குவோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்துக்கான அரசுப் பணிகளை, அரசுத் திட்டங்களை மக்கள் வைக்கக்கூடிய கோரிக்கைகளைக் கவனிக்கவும், துரிதப்படுத்துவதற்கும், என்னதான் ஆட்சித் தலைவர், அதிகாரிகள் அதில் கடுமையாக அந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், ஆனால் அரசோடு அன்றைக்கு அன்றைக்குத் தொடர்பு வைத்து, அந்தந்த நிமிடத்தில் தொடர்பு வைத்துப் பேச வேண்டும் என்பதற்காகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை நாங்கள் நியமித்தோம்.



தஞ்சாவூர், சரசுவதி மகால் அருங்காட்சியகத்தில் காகிதச்சுவடிகள் பராமரிக்கும் பணிகளைப் பார்வையிடல்...

பொதுவாக, இன்னொரு மாவட்டத்துக்கு வந்து பணிகளைச் செய்வது என்பது சாதாரண காரியம் கிடையாது, எல்லோராலும் முடியாது. அதனால்தான் எந்த நிலத்திலும் வளரும் மரம் என்பதை நம்முடைய அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். உள்ளபடியே அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை இந்த அரசின் சார்பில் இந்தப் பணிகளை மேற்கொண்டதில் ஓரளவிற்கு வெற்றி கண்டிருக்கிறார் என்பதற்காக அவரைப் பாராட்ட, அவருக்கு வாழ்த்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுவும், அன்பிலார் குடும்பத்துக்கும் நம்முடைய தலைவர் குடும்பத்துக்கும் என்ன நட்பு என்பது உங்களுக்குத் தெரியும். மூன்று தலைமுறைகளாகத் தொட்டுத் தொடரும் நட்பு! தலைவர் குடும்பம் என்று சொன்னாலும், எங்கள் குடும்பம் என்று சொன்னாலும், அது தப்பு கிடையாது. தலைவர் கலைஞர் அவர்களுக்கு அன்பில் தர்மலிங்கம் எப்படி உற்ற தோழனாக இருந்தாரோ, அதுபோல அவருடைய மகன் மறைந்த அன்பில் பொய்யாமொழி அவர்கள் எனக்கு எவ்வளவு உற்ற தோழனாக இருந்தார் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர் இருந்து சிறப்பித்திருக்க வேண்டிய, அவர் இருந்து அமைச்சராக ஆற்ற வேண்டிய பணியை, இன்றைக்கு அவரது மகன் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆற்றிக் கொண்டிருக்கிறார், அதிலும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். தாத்தாவுக்கும் அப்பாவுக்கும் செய்யவேண்டிய வரலாற்றுக் கடமையைத்தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதனால், இந்த நிகழ்ச்சியின் மூலமாக நம்முடைய அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை உங்கள் கரவொலியின் மூலமாக என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அன்பில் அழைக்கிறார் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் சொல்லப்பட்டதுண்டு. இப்பொழுது அன்பில் மகேஸ் நம்மை அழைக்கிறார் என்ற உணர்வோடு இந்த நிகழ்ச்சிக்கு நாம் வந்திருக்கிறோம் அது தான். ஆகவே, இங்கே பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதும், தஞ்சை மாவட்டம் முழுக்க அவர் சுற்றிச் சுழன்று பொதுமக்களைச் சந்தித்து மனுக்களை எல்லாம் வாங்கி இருக்கிறார்.

மனுக்களுடைய கணக்கைப் பற்றி அவர் சொன்னார். 48 ஆயிரத்து 550 மனுக்கள் இதுவரை அவர் மூலமாகப் பெறப்பட்டிருக்கிறது. இதில் இந்த இரண்டு மாத காலத்தில், அதாவது 48,550 மனுக்களில் 50 சதவிகிதம் அதாவது 22,997 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மனுக்கள் தகுதியானவை தானா? என்பதைத் தீர விசாரித்து, பரிசீலித்து நிச்சயமாகச் சொல்கிறேன் அதில் நியாயம் இருக்கவேண்டும் என்று சொன்னால், உறுதியாக அவைகளும் நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'சொன்னதைச் செய்வோம் – செய்வதைச் சொல்வோம்' – இது தலைவர் கலைஞருடைய சொற்கள். இப்பொழுது சொல்லாததையும் செய்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதைக் கண்கூடாக இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியக்கூடிய பல்வேறு பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வழங்கப்படக் கூடிய ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வற்புறுத்தி, வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இதுகுறித்து, இங்கு அமர்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள் சட்டமன்றத்திலும் பேசினார். அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத்திலும் போராடி இருக்கிறார். ஏன் என்னிடத்தில் கூட வாதாடி இருக்கிறார். ஆகவே அந்த அடிப்படையில்தான் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தொழிலாளர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு.சக்கரபாணி அவர்களும் என்னிடம் தெரிவித்தார். இவற்றைப் பரிசீலித்து அங்கே பணிபுரியக்கூடிய பட்டியல் எழுத்தருக்கு வழங்கப்படக்கூடிய மாதாந்திர ஊதியம் ரூ.5,285 ஆகவும், உதவியாளர்களுக்கு, காவலர்களுக்கு வழங்கப்படக்கூடிய ஊதியத்தை ரூ.5,218 ஆகவும் உயர்த்தி, அகவிலைப்படித்தொகை ரூ.3,499 சேர்த்து வழங்கிட ஒப்புதல் அளித்திருக்கிறேன் என்று நான் குறிப்பிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இங்கு பணிபுரியக்கூடிய சுமை தூக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வழங்கப்படக்கூடிய கூலித்தொகையை மூட்டை ஒன்றுக்கு ரூ.3.25லிருந்து ரூ.10ஆக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற ஒப்புதலை நான் அறிவித்திருக்கிறேன். அதுமட்டுமின்றி பருவகால பட்டியல் எழுத்தர், உதவியாளர் மற்றும் காவலர்களுக்கு போக்குவரத்துப்படியும் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.83 கோடி கூடுதல் செலவு ஏற்படும். இப்போதுள்ள நிதி நெருக்கடியிலும், நமது நெல் கொள்முதல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இந்த உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அரசின் நோக்கத்தை முழுமையாக மனதிலே நிலைநிறுத்தி தங்களது உழைப்பின் பயனாக நெல்லைக் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரக்கூடிய விவசாயிகள் எந்தவித புகார்களும் தெரிவிக்க இடமளிக்காதவாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழகத் தொழிலாளர்கள் சேவை ஆற்றிட வேண்டுமென்று நான் இந்தத் தருணத்திலே வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மனுக்களின் கோரிக்கைகளை – விண்ணப்பங்களை – மனுக்களை நிறைவேற்றித் தருவதற்காகத்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம்.

இன்று ஏதோ இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் – அது எங்களுக்காக அல்ல. மக்களுக்காகத்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய நாள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கின்றன. என்னென்ன திட்டங்கள் என்று பார்த்தீர்கள் என்றால்,

❖ இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ❖ ஒய்வூதியங்கள்

❖ உழவர் பாதுகாப்புத் திட்டம் ❖ கருணை அடிப்படையில் வேலை ❖ புதிய குடும்ப அட்டைகள் ❖ பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டம் ❖ புதிய வேலைவாய்ப்புகள்
❖ ஏழைப்பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம்

❖ தையல் இயந்திரங்கள் ❖ பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் ❖ தேசிய வளர்ச்சி வேளாண்மைத் திட்டம்

❖ மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ❖ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ❖ தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் ❖ கூட்டுப்பண்ணைத் திட்டம்

❖ நம்முடைய தலைவர் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மைத் திட்டம் ❖ தோட்டக்கலை இயக்கம் ❖ நெல் அறுக்கும் இயந்திரம் வழங்குதல் ❖ மரச்செக்கு வழங்குதல் ❖ மாற்றுத்திறனாளிகளுக்கு ஏராளமான உதவிகள் ❖ கூட்டுறவுத்துறை மூலமாக பல்வேறு கடன்கள் ❖ தொழிலாளர் நலத்துறை மூலமாக பல்வேறு நிதிகள் என்று மொத்தம் 44,525 பயனாளிகளுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நலத்திட்ட உதவிகள் கொடுக்கப்படும் காட்சியைப் பார்க்கும்போது உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். 44 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன் அடைய வழிவகை செய்துள்ளோம்.

இவை அனைத்துக்கும் ஏறத்தாழ ரூ.238 கோடி இதற்கென்று நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தோடு முடியவில்லை. இது தொடக்கம்தான். இதுபோன்ற நலத்திட்ட உதவிகள் நிச்சயமாக, உறுதியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வளர்ச்சியின் குறியீடு என்று சொல்லப்படுகின்ற அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றுவதுதான் எங்களுடைய ஒரே இலக்கு. நாளைக்கே அனைத்தையும் மாற்றிவிடுவோம் என்று நான் சொல்லவில்லை. அந்த அளவுக்குக் கற்பனையில் மிதப்பவன் நான் இல்லை. எந்த இலக்கையும் அடைவதற்கு முன்னால் அந்த இலக்கை மிகச் சரியாகத் தீர்மானிக்க வேண்டும். அப்படிச் சரியான இலக்கை நான் தீர்மானித்துள்ளேன். வளர்ச்சியின் குறியீடான அனைத்திலும் முன்னேறிய மாநிலமாகத் தமிழ்நாட்டை ஆக்குவதுதான் எனது இலக்கு. அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் அரசுடன் மக்களும் ஒத்துழைக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்தையும் அரசு செய்துதர முன்வர வேண்டும்.


தஞ்சாவூர், சரசுவதி மகால் அருங்காட்சியகத்தில் ஓலைச்சுவடிகள் பராமரிக்கும் பணிகளைப் பார்வையிடல்...

இந்த நிகழ்ச்சியை அருமையாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய அருமைத் தம்பி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், அவருக்குத் துணை நின்றிருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடிய பிரதிநிதிகளுக்கும், இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பொதுமக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அந்த இலக்கை நோக்கிய பயணத்திலே தேவையான அனைத்தையும் அரசு செய்துதர முன் வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்து, குறிப்பாக, மகளிர் சுயஉதவிக் குழு, மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள், ஓய்வூதியங்கள், பட்டாக்கள் ஆகியவற்றை எதிர்நோக்கிக் காத்திருக்கக்கூடிய பொதுமக்கள் அத்தனைப் பேரும் இந்த அரசுக்கு நீங்கள் முழு ஒத்துழைப்பை எந்த அளவுக்குத் தருகிறீர்களோ அதற்கு மேலாக உங்களுக்குப் பணியாற்ற நாங்கள் காத்திருக்கிறோம்.

இதைப் பேசிவிட்டு ஓய்வெடுக்கப் போகிறவர்கள் நாங்கள் அல்ல. அதைச் சொன்னதைச் செய்கிற ஆட்சிதான் கலைஞருடைய ஆட்சி. கலைஞர் அப்படித்தான் நம்மை எல்லாம் உருவாக்கியிருக்கிறார். எனவே அவர் வழிநின்று என்னுடைய கடமை தொடரும், தொடரும், தொடரும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அத்தனை பேருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மன்னர் சரபோஜி அரசு கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கங்களைப் பார்வையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சரசுவதி மகால் அருங்காட்சியகத்திற்கு நேரில் சென்று ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள் பராமரிக்கும் பணிகளையும் பார்வையிட்டார்.




# கோவிட்-19, ஒமிக்ரான் நோய்த்தொற்று
# தமிழ்நாட்டில் தொடரும் தடுப்புப் பணிகள்...

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, ஆட்சிப்பொறுப்பேற்றுக் கொண்டதும், கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு, 2ஆவது அலை பாதிப்பிலிருந்து தமிழ்நாடு மீண்டு வந்துள்ளது.

நோய்த்தடுப்புப் பணிகள் மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு மேம்பாடு, நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அதி நவீன சிகிச்சைகள், நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முன்களப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 08.12.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுஉயிரிழந்தவர்களின்குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கும் வகையில், சென்னை மாவட்டத்தில், கொரோனா தொற்றால் உயிரிழந்த 10 குடும்பங்களுக்குத் தலா ரூ.50,000 நிவாரண நிதி வழங்கினார். மேலும், சென்னை பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் 2 முன்களப்பணியாளர்களின் குடும்பத்தினருக்கு, கொரோனா நிவாரண உதவித்தொகையாகத் தலா ரூ.25 இலட்சத்திற்கான காசோலை மற்றும் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.



பண்டிகைக் காலங்களில், கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துதல், அண்டை மாநிலங்களில் பரவி வரும் உருமாறிய கொரோனா ஒமைக்ரான் வைரஸ் நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகளை விரைவுபடுத்துதல் குறித்தும், 13.12.2021 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும், பரவி வரும் உருமாறிய கொரோனா – ஒமிக்ரான் வைரஸ் நோயைக் கருத்தில் கொண்டும், பொது மக்கள் நலன் கருதியும் நடைமுறையில் உள்ள ஊரடங்குக் கட்டுப்பாடுகள் 31.12.2021 வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் 14.12.2021 நாளிட்ட அறிக்கையில், கொரோனா பெருந்தொற்றினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.50,000 நிதி உதவி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வாரிசுதாரர்கள் அரசின் இழப்பீட்டு உதவித்தொகை பெறுவதை எளிமையாக்கும் வகையில் <https://www.tn.gov.in> என்னும் தமிழ்நாடு அரசு இணையதள முகவரியில் “வாட்ஸ் நியூ (what’s new) பகுதியில் “Ex-Gratia for Covid-19 என்னும் விண்ணப்பத்திற்கான இணைப்பைத் தேர்வுசெய்து, ஆன்லைன் (Online) மூலம் விண்ணப்பம் செய்து உதவித்தொகை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2021 அன்று, நந்திவரம் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்தில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 24.12.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், பண்டிகைக் காலங்களில் கொரோனா நோய்த்தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கொரோனா நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் கொரோனா தடுப்பு நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் பொது மக்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூடுவதால் கொரோனா மற்றும் ஒமிக்ரான் நோய்த்தொற்றுப் பரவல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் அனைவரும் கூட்டம் கூடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியில் வரும்போதும் கட்டாயம் முகக் கவசம் அணிவதோடு, சமூக இடைவெளியினையும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். தடுப்பூசி முகாம்களுக்குச் சென்று பொதுமக்கள் தவறாது தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும். கொரோனா நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் நலன் கருதி அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 26.12.2021 அன்று ஒமிக்ரான் பரவலைத் தடுக்க, எடுத்து வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்கள். ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் மையத்தினைப் பார்வையிட்டு, அங்கு கோவிட் நோய் பாதிக்கப்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்த ஏற்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தார்கள்.



தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள அவசரக்கால ஆக்சிஜன் சிலிண்டர் சேமிப்புக் கிடங்கினையும், உயிர் காக்கும் அவசர சிகிச்சை உபகரணங்களுடன் கூடிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்களையும் பார்வையிட்டார்.



பின்னர், 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் அவசரக்கால அழைப்பு நிலையம், அவசரக்கால கட்டுப்பாட்டு அறை (Emergency Control Room) மற்றும் மாநில கட்டளை மையத்தையும் (State War Room), 24 மணிநேர கொரோனா தடுப்பூசி மையத்தினையும் ஆய்வு செய்தார்.



ஒமிக்ரான் வகை கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 1.15 இலட்சம் படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. மேலும், தற்காலிக கோவிட் சிறப்பு மையங்களில் தேவைக்கேற்ப 50,000 படுக்கைகள் வசதி ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கோவிட் அலையின் போது ஏற்பட்ட மருத்துவ ஆக்ஸிஜன் தட்டுப்பாட்டினை முழுதும் நீக்கும் வகையில் மாநில அரசு, மத்திய அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து 222 ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் வாயிலாக, கூடுதலாக நாள்தோறும் 244 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் வசதி பல்வேறு அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது, திரவ ஆக்ஸிஜன் இருப்பு வைக்கும் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு, 1,731 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜன் சேமித்து வைக்க வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 17,940 ஆக்சிஜன் செரிவூட்டிகள் மூலம் 167 டன் திரவ ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முடியும். இவை தவிர சுமார் 25,000 பி மற்றும் டி வகை ஆக்ஸிஜன் சிலிண்டர்களும் தயார் நிலையில் உள்ளன.



ஒமிக்ரான் வகை கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக அனைத்துச் சர்வதேச விமான நிலையங்களிலும் மத்திய அரசு வழிகாட்டுதலின்படி ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை மற்றும் அனைத்துத் தேவையான கட்டுப்பாடுகளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகள் வருகை மற்றும் ஒமிக்ரான் குறித்த விவரங்களைத் தினசரி அறிக்கையில் (Media Bulletin) கூடுதலாக வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.




கொரோனா நோய்த்தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், தடுப்பூசி செலுத்தும் பணியினை விரைவுபடுத்தவும் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 31.12.2021 அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பொதுமக்கள் நலன் கருதி நடைமுறையில் உள்ள ஊரடங்கு கட்டுப்பாடுகள் 10.01.2022 வரை நீட்டித்து உத்தரவிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.01.2022 அன்று, காணொலி வாயிலாக கொரோனா தடுப்பு குறித்து உரையாற்றியபோது,

உங்கள் எல்லோருக்கும் என் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

இந்த 2022ஆம் ஆண்டு மிகவும் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் நம் எல்லோருடைய எதிர்பார்ப்பு, நம்பிக்கை. அப்படி நன்றாக இருக்க வேண்டும் என்றால் கடந்த ஆண்டுகள் தந்த பாடங்களை நாம் மறந்துவிடக்கூடாது. கொரோனா என்ற நோய்த்தொற்றின் முதலாவது அலை மற்றும் இரண்டாவது அலையிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், இரண்டாவது அலை உச்சக்கட்டத்தில்

இருந்த போதுதான், உங்களுடைய முதலமைச்சராக மட்டும் அல்ல, உங்களுடைய நலனுக்கும் நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்துவதுதான் என்னுடைய முதல் வேலையாக இருந்தது. என்னுடன் நம் அமைச்சர் பெருமக்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையினர், உள்ளாட்சி நிருவாகத்தினர், காவல்துறையினர், தூய்மைப் பணியாளர்கள் என்று பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இணைந்து நின்று செயல்பட்டார்கள். அதை மறக்கவே முடியாது. அதனால் குறைந்த கால அளவிலேயே, இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்தினோம். அதற்குப் பொதுமக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் முக்கிய காரணமாக இருந்தது.

தடுப்பூசி முகாம்களைத் தொடர்ந்து நடத்திய போது, அறிவியல் மீது நம்பிக்கை வைத்து ஆர்வத்துடன் வந்து ஊசி போட்டுக் கொண்டீர்கள். உங்களுடைய ஆர்வம் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதனால் தடுப்பூசி போட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கொரோனா பரவலையும், இறப்பு எண்ணிக்கையையும் பெருமளவில் கட்டுப்படுத்த முடிந்தது. அதே மாதிரியான ஒரு ஒத்துழைப்பைத்தான் இந்த புத்தாண்டில் உங்களிடம் மறுபடியும் நான் எதிர்பார்க்கிறேன்.

கொரோனாத் தொற்றுப் பல உருமாற்றங்களை அடைந்திருக்கிறது. இப்போது ஒமிக்ரான் என்ற பெயரில் அது உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது. அதனுடைய வேகம் அதிகரித்து இருக்கிறது. அதனால் நாம் இன்னும் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஒமிக்ரான் பரவலைக் கட்டுப்படுத்த என் தலைமையில் இருக்கக்கூடிய உங்கள் அரசு, தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் வருபவர்களுக்கான பரிசோதனை, நம் மாநிலத்தில் அறிகுறி தெரிந்தால் அதற்கான பரிசோதனை, சிகிச்சைக்கான ஆக்சிஜன், படுக்கை, மருந்து அனைத்தும் போதுமான அளவில் இருக்கிறது. கூடுதல் தேவையை யோசித்தும் அதற்கேற்றவாறு முழுமையான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதனால் நீங்கள் யாரும் பயப்படத் தேவை இல்லை. உங்கள் ஒத்துழைப்புதான் எங்களுக்குத் தேவைப்படுகிறது.

ஒமிக்ரான் பரவலைத் தடுக்க சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் போட்டிருக்கிறது. அது உங்கள் பாதுகாப்பிற்காகத்தான். அந்த கட்டுப்பாடுகளைக் கடைப்பிடியுங்கள். COVID Appropriate Behaviour என்ற கோவிட் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கங்களைக் கட்டாயமாக நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.

கூட்டம் கூடுகின்ற நிகழ்ச்சிகளைத் தயவுசெய்து தவிர்த்துவிடுங்கள். அவசரத் தேவைகள், அன்றாடப் பணிகளுக்காக வெளியில் போகும்போது போதுமான இடைவெளியைக் கடைப்பிடியுங்கள். சானிடைசர் பயன்படுத்துங்கள் அல்லது சோப்பு போட்டு நன்றாகக் கையைக் கழுவுங்கள். முகக்கவசத்தைக் கட்டாயம் பொதுவெளியில் போட்டுக்கொள்ளுங்கள். அதை எப்போதும் மறந்துவிடாதீர்கள். அது உங்கள் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல, உங்களைச் சார்ந்திருக்கக் கூடிய அனைவருடைய பாதுகாப்பிற்காகத்தான்.

தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் இருந்தீர்கள் என்றால், தாமதிக்காமல் போட்டுக் கொள்ளுங்கள். முதல் டோஸ் போட்டவர்கள், உங்களுக்குச் சொல்லப்பட்ட தேதியில் இரண்டாவது டோஸ் போட்டுக்கொள்ளுங்கள்.

ஜனவரி மாதத்திலிருந்து ஒன்றிய அரசு, 15 வயதிலிருந்து 18 வயது வரையிலான சிறார்களுக்குத் தடுப்பூசி திட்டத்தைச் செயல்படுத்த அறிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அந்த திட்டத்தையும் முழுமையாகச் செயல்படுத்தும். உங்கள் வீட்டில் அந்த வயதில் சிறார்கள் இருந்தால், மறக்காமல் தடுப்பூசி முகாமிற்கு அழைத்துச் சென்று ஊசி போட்டுக்கொண்டு வாருங்கள். தடுப்பூசி முழுமையாகப் போட்டிருந்தால், ஒமிக்ரான் நோய்த்தொற்று ஏற்பட்டாலும், அதனுடைய தாக்கம் மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும் என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதனால் இதுவரையில் தடுப்பூசி போடாதவர்கள் உடனே கண்டிப்பாகப் போட்டுக்கொள்ளுங்கள். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய உடல் நலனும் உங்களுடைய முதலமைச்சரான எனக்கு மிகவும் முக்கியம். அதற்காகத்தான் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழ்நாட்டு மக்களான நீங்கள் நிச்சயமாக ஒத்துழைப்பு தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். அரசு அறிவித்திருக்கிற வழிகாட்டு நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று உங்களுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய அன்பு சகோதரனாகவும், உங்களில் ஒருவனாகவும், மிகுந்த பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை புத்தாண்டு வாழ்த்துகளைச் சொல்லிக் கொள்வதுடன், புத்தாண்டில் மகிழ்ச்சியாக இருப்பதைப் போலவே நீங்கள் எல்லோரும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **03.01.2022** அன்று, சென்னை, சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் **15** முதல் **18** வயதுள்ள மாணவ, மாணவிகளுக்குக் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், **04.01.2022** அன்று, சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று கொரோனா மற்றும் ஒமிக்ரான் வைரஸ் தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கையாகப் பொதுமக்களுக்கு முகக்கவசம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



சென்னை, ஓமந்தூரார் பல்நோக்குச் சிறப்பு மருத்துவமனை பேருந்து நிலையம், ரிச்சி தெரு அருகில், காஸ்மொபோலிடன் கிளப் அருகில், ஸ்பென்சர் பிளாசா எதிரில், ஆயிரம் விளக்குப் பகுதி, சேப்பாக்கம், தேனாம்பேட்டை சித்தி விநாயகர் கோயில் தெரு, எல்டாம்ஸ் சாலை சிக்னல், எஸ்.ஐ.இ.டி. கல்லூரி பேருந்து நிலையம் ஆகிய இடங்களுக்கும் நேரில் சென்று அங்கிருந்த பொதுமக்களிடம் முகக்கவசங்களை வழங்கி, முகக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து எடுத்துரைத்து, விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.



கொரோனா மற்றும் ஒமிக்ரான் வைரஸ் தொற்றுப் பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்டுவரும், **504** ஆக்ஸிஜன் படுக்கைகள், **400** சாதாரண படுக்கைகள் என மொத்தம் **904** படுக்கை வசதியுடன் கோவிட் சிகிச்சை மையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

சென்னை வர்த்தக மையத்தில் அமைக்கப்பட்டு வரும் கோவிட் சிகிச்சை மையத்தில் **11** கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட **2** ஆக்ஸிஜன் சேமிப்பு கலன்கள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.01.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் தொற்றுப் பாதித்த நபர்களை அழைத்துச் செல்வதற்கு ஏதுவாக 42 சிறப்பு ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றுப் பாதித்த நபர்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து முதற்கட்ட உடற்பரிசோதனை மையங்களுக்கும், பரிசோதனைகளுக்குப் பிறகு கொரோனா பாதுகாப்பு, சிகிச்சை மையங்களுக்கோ அல்லது மருத்துவமனைகளுக்கோ அழைத்துச் செல்ல ஏதுவாக 250 கார் ஆம்புலன்ஸ் வாகனங்கள் 12.05.2021 அன்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலில் சென்னை மாநகராட்சியில் தொடங்கப்பட்டது. தேசிய அளவில் வரவேற்பினைப் பெற்ற இத்திட்டம் அனைத்து மாநிலங்களிலும் பின்பற்றப்பட்டது.

மாநில முதல்வர்களுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இந்தக் கார் ஆம்புலன்ஸ் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காகத் தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் பாராட்டினைத் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் , 08.01.2022 அன்று, சென்னை சத்யா நகர்ப் பகுதியில், நியாயவிலைக்கடை ஆய்வின்போது, கொரோனா விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டார்.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 10.01.2022 அன்று, சென்னை, எம்.ஆர்.சி. நகரில் சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட இணைநோய் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசித் திட்டத்தைத் (Precaution Dose) தொடங்கி வைத்தார்.

சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி செலுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் தகுதியான 2,06,128 சுகாதாரப் பணியாளர்கள், 92,816 முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட 1,01,069 இணைநோய் உள்ளவர்கள் என மொத்தம் 4,00,013 பேர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி முதற்கட்டமாகச் செலுத்தப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 10.01.2022 அன்று, தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு கூடுதல் கட்டுப்பாடுகளுடன் 31.01.2022 வரை நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்களப் பணியாளர் என்ற முறையில் 11.01.2022 அன்று, முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டார்.

**தமிழ்நாட்டில், இதுவரை 8,79,84,156 கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 15 முதல் 18 வயதுள்ள 23,34,845 மாணவ, மாணவிகளுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளன.**



மேலும், வலைத்தளப் பதிவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது :

“நான் முன்களப் பணியாளர் என்ற முறையில் இன்று முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி எடுத்துக் கொண்டேன்.

அனைத்து முன்களப் பணியாளர்களும், இணை நோய்கள் கொண்ட 60 வயது நிரம்பிய மூத்த குடிமக்களும் தவறாமல் முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள்.

தடுப்பூசி எனும் கவசத்தைக் கொண்டு நம்மையும் காப்போம்; நாட்டையும் காப்போம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 06.01.2022 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் அரியலூர் மாவட்ட மக்கள் அளித்த 21 இலட்சத்து 40 ஆயிரத்து 611 ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பல்வேறு தரப்பினர் தன்னிடம் அளித்த 13 இலட்சத்து 55 ஆயிரத்து 349 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் 25.12.2021 அன்று, அமெரிக்கா சிகாகோ பல்கலைக்கழகத்தில் கட்டணமின்றி மேற்படிப்பிற்குப் பயில்வதற்காகத் தேர்வு செய்யப்பட்ட ஈரோடு மாவட்டம், பி காசிபாளையம் பகுதியைச் சேர்ந்த மாணவி எஸ்.ஸ்வேகா அவர்களைப் பாராட்டினார்.

## கருணை அடிப்படையில் பணிநியமன ஆணை



11.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் எழுது பொருள் அச்சுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை 4 வாரிசுதாரர்களுக்கு வழங்கினார்.




# கனமழை பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடரும் களப்பணிகள்

தமிழகத்தில் வரலாறு காணாத மழை பெய்த போதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையிலான அரசு, போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருவதால் வெள்ளப் பாதிப்புகள் விரைவாகச் சீர்செய்யப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கனமழை தொடங்கிய நாள் முதல் தொடர்ந்து சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டு வருவதை ஆய்வு செய்து வருகிறார்.

**29.12.2021**

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதிப்பிலிருந்து மீளவும், சேதமடைந்த கட்டமைப்புகளைச் சரிசெய்திடவும், போக்குவரத்து, நீர்ப்பாசனம், கல்வி போன்றவற்றை மீண்டும் வழக்கமான நிலைமைக்குக் கொண்டு வரவும் ஏதுவாக, ஒன்றிய அரசின் நிதியினை விரைவில் விடுவித்திட உள்துறை அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறு கேட்டு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் வரலாறு காணாத மழை பெய்த சூழ்நிலையில், தமிழ்நாடு அரசு விரைவாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, குறுகிய காலத்தில் இயல்பு நிலையை மீட்டெடுத்துள்ளதாகத் தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பெருமழையினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக, மத்தியக் குழுவினர் 21.11.2021 அன்று தமிழ்நாட்டில் ஆய்வு மேற்கொண்டதைக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.1,510.83 கோடியும், சாலைகள், பாலங்கள் மற்றும் பொதுக் கட்டடங்கள் போன்ற சேதமடைந்த உள்கட்டமைப்புகளை நிரந்தரமாகச் சரிசெய்வதற்காக ரூ.4,719.62 கோடியும் நிவாரணமாக வழங்கிடக் கோரி, ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் 16.11.2021, 25.11.2021, 15.12.2021 ஆகிய நாட்களில் சேத விவரங்களுடன் கூடிய விரிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவஹர் நகரில் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**30.12.2021**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, சென்னை திரும்பியவுடன், சென்னையில் பெய்த கனமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்து பெருநகரச் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறைக்கு நள்ளிரவு நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, கட்டுப்பாட்டு அறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மழைநீர் தேக்கம் குறித்த புகார்கள் குறித்தும், அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், கட்டுப்பாட்டு அறையில் பெருநகரச் சென்னை

மாநகராட்சியுடன் இணைந்து பணிகளில் ஈடுபட்டுள்ள பிற சேவைத் துறைகளான காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், சென்னைக் குடிநீர் வாரியம் மற்றும் மின்துறை சார்ந்த அலுவலர்களுடன் அவர்கள் துறை சார்ந்த புகார்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பெருநகரச் சென்னை மாநகராட்சி ஆணையாளர், துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோருடன் மாநகரின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் அகற்றும் பணிகள் குறித்தும், இயக்கப்பட்டு வரும் மோட்டார் பம்புகள் குறித்தும் விரிவாகக் கேட்டறிந்து மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் தேவையான அளவிற்கு நீர் இறைக்கும் பம்புகள் கொண்டு உடனடியாக தேங்கிய மழைநீரை வெளியேற்றவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



பின்னர், பெருநகரச் சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மோட்டார் பம்புகள் கொண்டு மழைநீர் வெளியேற்றப்படும் பணியையும், பெரியமேடு சைடனஹாம்ஸ் சாலையில் மசூதி அருகே தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் பம்பு கொண்டு வெளியேற்றப்படும் பணியையும் மற்றும் பாரிமுனை பிரகாசம் சாலை சந்திப்பில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



மேலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படாதவாறு பாலங்களில் தேங்கியிருக்கும் மழைநீர் தேக்கத்தை அகற்றவும், இரயில்கள், பேருந்துகள் இயக்கும் நேரத்தை அதிகப்படுத்திடவும், மின்சாரம் தடையின்றிக் கிடைத்திடவும், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**31.12.2021**



பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், சீதாம்மாள் காலனியில் தேங்கியுள்ள மழைநீரை மோட்டார் கொண்டு அகற்றிடும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். டாக்டர் கிரியப்பா சாலையில் பொக்லைன் இயந்திரங்கள் கொண்டு மழைநீர் வடிகாலில் இருந்து மாம்பலம் கால்வாயில் மழைநீரை வெளியேற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், கோடம்பாக்கம் மண்டலம், திருமலை பிள்ளை சாலை – பசுல்லா சாலை சந்திப்பில் டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நீர் இறைக்கும் பம்புகள் கொண்டு மழைநீரை வெளியேற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக, சென்னையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்யும் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

**கேள்வி :** எதிர்பாராதவிதமாக இவ்வளவு பெரிய மழை பெய்திருக்கிறதே, அது பற்றி ?

**பதில் :** வானிலை மையம் பொதுவாக முன்கணிப்புச் செய்து தகவல் கொடுப்பார்கள். ஆனால், இந்த முறை அவர்களாலேயே கணிக்க முடியவில்லை. அதனால் எதிர்பாராதவிதமாக திடீரென்று பேய் மழை பெய்து இருக்கிறது. ஆகவே, தேங்கியிருந்த மழை தண்ணீரை எப்படியாவது சரிசெய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், நான் திருச்சியிலிருந்து வந்தவுடன் நேரடியாகப் பெருநகரச் சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள war roomக்கு சென்று, மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைக் குறித்து கலந்து பேசி என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டறிந்தேன். பாதிக்கப்பட்டுள்ள மழைநீர் தேங்கியுள்ள இடங்களில், ஆங்காங்கே மோட்டார் பம்புசெட் வைத்து மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. அது ஓரளவுக்குத் திருப்திகரமாக இருக்கிறது. நிச்சயமாக இன்றைக்குள் எல்லாமே சரிசெய்யப்பட்டுவிடும்.

**கேள்வி :** திடீர் மழை என்னும்போது, வானிலை மையம் முன்கணிப்பு அளிப்பதில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா? உபகரணங்கள் மாற்றுவதற்கு மத்திய அரசிடம் ஏதாவது கோரிக்கை அளிக்கப்படுமா?

**பதில் :** அது அவர்கள் செய்ய வேண்டிய வேலை. இருந்தாலும், நீங்கள் சொன்னதற்காக, தமிழ்நாடு அரசு இது குறித்து ஒன்றிய அரசுக்கு நினைவுபடுத்தும்.

**கேள்வி :** மழைத் தண்ணீர் தேங்கி இருக்கக்கூடிய இடங்களிலேயே, மழைத் தண்ணீர் தேங்கும் சூழ்நிலை இருக்கிறது. திட்டமிடுதலில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா?

**பதில் :** அதாவது, கடந்த பத்து வருடங்களாகக் குட்டிச்சுவர் ஆக்கி வைத்திருக்கிறார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.அதை இப்போது விமர்சனம் செய்வதற்கு நாங்கள் தயாராகயில்லை. மழைத் தண்ணீர் தேங்குவதைச் சரிசெய்ய வேண்டும். அடுத்த மழைக்காலம் வருவதற்குள் இதை நாங்கள் நிச்சயமாகச் சரிசெய்து விடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் 20 செ.மீட்டருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எதிர்பாராத கனமழை ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளைச் சரிசெய்ய ஒவ்வொரு அதிகாரியும் நேரம் காலம் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கின்றனர். சீரமைப்புப் பணிகளை நானும் நேரடியாகவே ஆய்வுசெய்து கண்காணித்து வருகிறேன். விரைவில் நிலைமை சீரடையும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளதாவது :

வானிலைக் கணிப்புகளையும் மீறிக் கொட்டித் தீர்க்கிறது மழை. எதிர்பாராத மாமழையால் பல இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதோடு, கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது. திருச்சியில் இருந்து திரும்பியவுடன், சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கட்டளை மையத்திற்கு வந்து, எடுக்கப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்து, அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளேன். நிலைமை விரைந்து சீர்செய்யப்படும்.

பொதுமக்களும் கவனமுடன் தங்கள் பயணத்தை அமைத்துக் கொள்வதோடு, மழைக்கால வழிகாட்டுதல்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**01.01.2022**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் செயல்பாட்டினை மேம்படுத்திட மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. **அமித் ஷா** அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில்,

பெருமழைக் கால சூழ்நிலையில் மாநில அரசு அதனை எதிர்கொள்வது குறித்த ஒரு முக்கியமான விஷயத்தினை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பெருமழை, கடும் புயல் போன்ற இயற்கை இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள மாநில அரசு இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையைச் சார்ந்திருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். உரியக் காலத்தில் இந்த மையத்திலிருந்து பெறப்படும் முன்னெச்சரிக்கைகள் மாவட்ட நிருவாகத்தினை தயார் நிலையில் வைத்திருக்கவும் அதன்மூலம் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் ஏதுவாக அமைகிறது. ஆனால், பெருமழை குறித்த அறிவிப்புகள் உரியநேரத்தில் சென்னை வானிலை ஆய்வு மையத்தால் வழங்க இயலாதநிலை உள்ளதைக் காண்கிறோம். உதாரணமாக 30.12.2021 அன்று மதியம் 12 மணிக்கு ஆய்வறிக்கையில் சென்னை வானிலை ஆய்வு மையம் இடியுடன் கூடிய மிதமான மழைக் காலையில் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் குறிப்பாக விழுப்புரம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் பெய்யும் எனத் தெரிவித்து அதே சமயம் இடியுடன் கூடிய இலேசான மற்றும் மிதமான மழை சென்னையில் சில இடங்களில் பெய்யும் எனவும் தெரிவித்திருந்தது. பின்னர் மாலை 3.40 மணிக்கு இந்த மையம் அளித்த எச்சரிக்கை அறிக்கையில் இடியுடன் கூடிய இலேசானது முதல் மிதமான மழை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் அடுத்த ஓரிரு மணி நேரங்களில் பெய்யும் எனக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், மிகக் கடுமையான மழை சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நேற்று மதியம் முதல் இரவு வரை பெய்தது. மாலை 4.15 மணிக்குச் சென்னை வானிலை ஆய்வு மையம் "ஆரஞ்சு அலர்ட்" வெளியிட்டது. அதற்குள் மிக அதிக கனமழை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் பெய்து பல பகுதிகள் மூழ்கி அதனால் கடும் போக்குவரத்து நெரிசலும் சென்னையில் ஏற்பட்டது.

சென்னை வானிலை ஆய்வு மையத்தில் மழை குறித்து உரிய நேரத்தில் சரியாகக் கணக்கிட்டு எச்சரிக்கை அளிக்கப் போதுமான திறன் குறைபாடாக உள்ளதால் மாநில மற்றும் மாவட்ட நிருவாகத்தினால் தக்க நேரத்தில் உரிய முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை அடிக்கடி ஏற்பட்டு விடுகிறது. இது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் மருத்துவ சேவைகள் வழங்குவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுவதற்கும் முக்கியமான கட்டமைப்புகள் சேதமடைவதற்கும் காரணமாக அமைந்து விடுகிறது.


இந்த நிகழ்வுகள் சென்னை இந்திய வானிலை ஆய்வு மையத்தின் வானிலை அறிக்கை தயாரிக்கும் அமைப்பினை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அதன் தொழில்நுட்பத்தைச் செம்மைப்படுத்துவதில் கூடுதல் முதலீடு செய்யவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, பெருமழை, புயல் போன்ற "ரெட் அலர்ட்" சூழ்நிலைகளைத் துரிதமாக முன்கூட்டியே தெரிவிக்கும் வகையில் சென்னை வானிலை ஆய்வு மையம் மேம்படுத்தப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 03.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக திரு. திருப்புகழ், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட சென்னை வெள்ள இடர் தணிப்பு மேலாண்மைக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

## சாகித்ய விருதாளர்களுக்கு வாழ்த்து





தனது ‘சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை’ என்ற சிறுகதைத் தொகுப்புக்காகச் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் அம்பைக்கு வாழ்த்துக்கள்!

தமிழில், பல ஆண்டுகளுக்குப் பின் பெண் எழுத்தாளருக்கு விருது அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். பெண் படைப்பாளிகளுக்கு இது மேலும் ஊக்கமளிக்கட்டும்.

கவிஞர் மு.முருகேஷ் அவர்கள் ‘அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை’ என்ற படைப்பிற்காகப் பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்றமைக்கு வாழ்த்துக்கள்!

சிறார்களுக்கான எளிய, இனிய படைப்புகள் தமிழில் செழித்திட இந்த விருது ஊக்கம் அளிக்கட்டும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 03.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பால சாகித்ய புரஸ்கார் விருது பெறவுள்ள கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் தனது குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.





## சாகச வளையம் சுற்றுவதில் உலக சாதனைப் படைத்த சிறுமிக்கு வாழ்த்து



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 23.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சாகச வளையம் சுற்றுவதில் கின்னஸ் உலக சாதனை படைத்த சிறுமி பி. சஹானா அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## சாலையோரம் அடிபட்டுக் கிடந்த குரங்கிற்கு முதலுதவி செய்தமைக்குப் பாராட்டு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பெரம்பலூர் மாவட்டம், ஒதியம் சமத்துவபுரத்தில், சாலையோரம் அடிபட்டுக் கிடந்த குரங்கிற்கு முதலுதவி செய்த திரு. மு.பிரபு அவர்களை நேரில் அழைத்துப் பாராட்டினார்.



## மதுரையில்

# கலைஞர் நினைவு நூலகம்







ஒரு நூற்றாண்டு கால இந்திய வரலாற்றில் எங்கு நோக்கினும் இடைவெளியின்றி முத்திரைப்பதித்திருக்கும் உன்னதத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்றால் அது மிகையாகாது. 80 ஆண்டுக்கால பொதுவாழ்க்கையில் அயராது பணியாற்றியவர், சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் சண்டமாருதமாக முழங்கியவர், 13 முறை அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற்றுச் சட்டமன்றம் சென்றவர். 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று அரிய பல சாதனைகளை நிகழ்த்தி அழியாப் புகழ்பெற்றவர்.

எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகையாளர், படைப்பாளி, அரசியல், ஆட்சி என எத்துறையைத் தொட்டாலும், அத்துறையில் முத்திரை பதித்த மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 03.06.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், 'புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதின் மீதும் வாழ்நாள் முழுவதும் தீராப் பற்றினைக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2010ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 102ஆவது பிறந்தநாள் அன்று சென்னை, கோட்டூர்புரத்தில், ஆசியாவின் அதிநவீன மிகப் பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக இந்த நூலகம் விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களும், இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம் இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்' என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப் பணித்துறை வளாகத்தில் 2.70 ஏக்கர் நிலத்தில், 99 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,13,288 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டப்படவுள்ள அடித்தளத்துடன் கூடிய 8 தளங்கள் கொண்ட **கலைஞர் நினைவு நூலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

கலைஞர் நினைவு நூலகத்திற்குத் தேவையான நூல்கள், மின்நூல்கள் இணையவழிப் பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்கு ரூ.10 கோடியும், தொழில் நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு அரசால் ரூ.5 கோடியும் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகம், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கியவாதிகள், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்ப்படுத்திக் கொள்ளும் இளைஞர்கள், பள்ளிச்சிறார்கள் எனச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



டிசம்பர் 23 : தேசிய உழவர் நாள்



## உழவர்களின் நலன் காப்போம்...

உலகத்தவர்க்கு அச்சாணியாக அய்யன் திருவள்ளுவர் குறிப்பிடும் உழவர்கள்தான் இன்று மக்களாட்சியின் வலிமையை உலகுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

உழவர்களின் நலனை அவர்கள் பயிர்களைக் காப்பதுபோல் எந்நாளும் காப்போம்!

உழவர்களுடன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து அதற்கு உறுதியேற்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



# வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கும் திட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், ரூ.15 கோடி மதிப்பில், கடப்பாரை, இரும்புச்சட்டி, களைக்கொத்து, மண்வெட்டி, கதிர் அறுவாள் ஆகிய வேளாண் உபகரண தொகுப்புகளை 64,444 வேளாண் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வழங்கிடும் அடையாளமாக 5 வேளாண் குடும்பங்களுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார்.

வேளாண் உபகரணங்களான கடப்பாரை, இரும்புச்சட்டி, களைக்கொத்து, மண்வெட்டி மற்றும் இரண்டு கதிர் அறுவாள்கள் ஆகிய ஆறு உபகரணங்கள் அடங்கிய "வேளாண் உபகரணங்கள் தொகுப்பு" பொது விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியம் அல்லது ரூ.2,250 மிகாமலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 90 சதவிகித மானியம் அல்லது ரூ.2,700 மிகாமலும் வேளாண் உபகரணங்கள் வழங்கப்படும். இத்திட்டத்தின் வாயிலாகச் சிறு, குறு விவசாயப் பெருமக்களின் உழைப்புத் திறன் மேம்படுத்தப்பட்டு, உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

அதனைத் தொடர்ந்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 87 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 10 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் ரூ.9.24 கோடி மதிப்பில் 672 விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல், சூரிய மின்வேலி அமைத்தல், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களைத் துவக்கி வைக்கும் அடையாளமாக, 9 விவசாயிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார்.



## தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் 26.12.2021 அன்று சென்னையில், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

64ஆவது

# தேசியத் துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு வாழ்த்து...







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 27.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 64ஆவது தேசியத் துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மற்றும் போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்துப்பெற்றனர்.

# செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களின் பணி ஆய்வு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்துள்ளவாறு, 28.12.2021 அன்று கலைவாணர் அலுவலக வளாகத்தில் உள்ள மாநிலச் செய்தி நிலையக் கூட்டரங்கில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், செய்தி மக்கள் தொடர்புத்துறை அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த மண்டல இணை இயக்குநர்களுடனான ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தனது தலைமை உரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அரசின் திட்டங்கள் யாவும் மக்களுக்கு எளிதில் எடுத்துச் செல்லும் பணிகளை, செய்தித் துறையின் சார்பில் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேலும் செம்மைப்படுத்துகின்ற வகையில் செய்தித்துறையின் புதிய முயற்சியாக 6 மண்டல இணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகளை ஆய்வு செய்தல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழாக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் அரசு விழாப் பணிகளை ஒருங்கிணைத்தல், துறை வாரியான செய்தியாளர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுதல், குறிப்பாக அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபங்கள் மற்றும் நினைவகங்களில் மக்கள் பயன்பாட்டினை உறுதி செய்தல், மாவட்டங்களில் கள விளம்பரப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிநவீன எல்.ஈ.டி வாகனங்களின் செயல்பாட்டினைக் கண்காணித்தல், தமிழரசு இதழ் சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல். குறிப்பாகத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் இல்லம் தேடிக் கல்வித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் கடைக்கோடி மக்களிடமும் சென்றடைந்திட அர்ப்பணிப்புடன் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என அறிவுறுத்தினார்.

# கணினித் தமிழ்

## வளர்ச்சியும் சவால்களும் - நூல் வெளியீடு






இணையம் வழியாகத் தமிழ்மொழியை உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் தமிழ் இணையக் கல்விக்கழகம் மாறிவரும் கல்விச் சூழலுக்கேற்ப கல்வியில் புதுமையைப் புகுத்தும் வண்ணமாகத் தமிழ் சார்ந்த மென்பொருள்களை உருவாக்கிப் பொதுப் பயன்பாட்டிற்கு இலவசமாக அளித்து வருகிறது. மேலும் கணினியில் தமிழை உட்புகுத்திக் கணினி சார்ந்த எண்ணற்ற பணிகளை மேற்கொள்ளும் வண்ணம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மொழியியல், கணினி சார்ந்த பேராசிரியர்கள், வல்லுநர்கள் எனப் பல்வேறு துறை சார்ந்தவர்களைக் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் நடத்தப்பட்ட **'கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும்' என்ற இணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் மூலம் பெறப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுப் பன்னாட்டுத் தரப்புத்தக எண்ணுடன் கூடிய இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. புத்தகங்களை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 24.12.2021 அன்று வெளியிட்டார்.**

கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும் என்ற இவ்விணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் ஆய்வுப் புத்தகங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பயன்படும் வண்ணம் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் www.tamilvu.org என்ற இணையதளத்தில் மின் புத்தகமாகப் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இப்புத்தகத்தினை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம். மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் கணினித் தமிழ்ப் பேரவை செயல்படும் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் இப்புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

# குறளோவியப் போட்டி






உலகெங்கும் இணையம் வழியாகத் தமிழ்க் கற்பித்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டு தகவல் தொழில்நுட்பவியல் துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம், இலக்கணம், இலக்கியம் முதலானவற்றையும் வழங்கி வருகின்றது. அவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதும், அறிஞர் பெருமக்களைத் தம்பால் ஈர்த்த பெருமைக்குரியதும், எக்காலத்திற்கும் பொருந்தும்படியான அறவாழ்வியல் கருத்துகளைக் கொண்ட உலகப் பொதுமறையான திருக்குறளில் குறளோவியம் என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடைபெறவுள்ளது.

**இணைய வழியிலான இப்போட்டியினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 22.12.2021 அன்று தொடங்கி வைத்தார்.**





# விவசாயிகளின் தோழர்

“ஓமந்தூரார் அவர்களைத் தமிழ்நாட்டு மக்கள் தங்களிலே ஒருவராகக் கருதுகின்ற அளவிற்கு உருவம் படைத்தவர், உள்ளம் படைத்தவர். அப்படிப்பட்ட எளியவர், இனியவர், ஏழைப் பங்காளர், விவசாயிகளின் தோழர், விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக வளர்க்க வேண்டுமென்று பெருவிருப்பம் கொண்டு பணிகளை ஆற்றியவர். 1934ஆம் ஆண்டிலேயே மேல்சாதி, கீழ்சாதி கொடுமைகூடாது என்பதற்காக ஆதிதிராவிடர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சிதம்பரம், ஓமந்தூர் போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களுக்குள் ஆலயப்பிரவேசம் செய்து காட்டியவர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு 15 மாதங்கள் வேலூர், தஞ்சை, திருச்சி ஆகிய சிறைகளிலே தண்டனை அனுபவித்தவர். அப்படிப்பட்டவருடைய நினைவை நாம் போற்றிக் கொண்டிருக்கிறோம்”.

*– முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்*




ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், திண்டிவனத்துக்கு அருகில் அமைந்துள்ள ஓமந்தூர் கிராமத்தில் 1895ஆம் ஆண்டு பிறந்தார். இளவயதிலேயே இந்திய விடுதலை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக மார்ச் 23, 1947 முதல் ஏப்ரல் 6, 1949 வரை பதவியில் இருந்தார். சுதந்திர இந்தியாவின் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சராவார். இவரது பதவிக் காலத்தில், ஜமீன்தார் இனாம் முறையை ஒழித்தார். ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தார். பூரண மதுவிலக்கை அமல்படுத்தினார். இந்து சமய அறநிலையத்துறைச் சட்டம் மற்றும் தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் ஆகியவற்றை இயற்றினார்.



## பாவாணருக்குப் பெருமை சேர்த்த முத்தமிழறிஞர்



★ 1974இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்ட இயக்ககத்தின் இயக்குநராகப் பாவாணர் அவர்களை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்தார்.

★ 1996இல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பாவாணரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் தம் மரபுரிமையருக்கு ரூ.20 இலட்சம் வழங்கிச் சிறப்பித்தார்.

★ 2006இல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பாவாணர் நினைவு அஞ்சல் தபால் தலையை வெளியிட்டார்.

★ தமிழக அரசின் சார்பில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள பாவாணர் மணிமண்டபத்தை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30.10.2007அன்று திறந்து வைத்தார். பாவாணரின் பேத்தி திருமதி பரிபூரிணம் அவர்களுக்கு மணிமண்டபக் காப்பாளர் பணி நியமன ஆணையை வழங்கினார்.

தேவநேயப் பாவாணர் அவர்கள் 1902ஆம் ஆண்டு, பிப்ரவரி 7ஆம் நாள் சங்கரன்கோவில், கோமதி முத்துபுரத்தில் பிறந்தார். மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் 40க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவரது ஒப்பரிய தமிழறிவும், பன்மொழியில் அறிவும் கருதி, சிறப்பாக, பெருஞ்சித்திரனாரால் “மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்” என்று அழைக்கப்பட்டார்.





“ஏழைகளும் புரிந்துகொள்ளும் வகையில் கம்யூனிசத்தைப் பரப்பிய பெருமை சிங்காரவேலு ‘சுயமரியாதை இயக்கம்’, சமதர்மம் இந்நாட்டு மக்களுக்குத் தக்கபடி எடுத்துரைத்துச் சொல்லி, மார்க்ஸியம் என்னும் பொருளாதாரத் தத்துவத்தைச் சாதாரணமானவரும் உணரும்படி செய்த பெருமை தமிழ்நாட்டில் இருவரையே சாரும். பெரியார் ராமசாமி அவர்களும், சிங்காரவேலரும். தோழர் சிங்காரவேலு சுயமரியாதை இயக்கம் வளருவதற்குப் பெரிதும் பாடுபட்டார். அவரின் உழைப்பை எந்தச் சுயமரியாதைக்காரனும் மறக்க மாட்டான்.”

– பேரறிஞர் **அண்ணா** அவர்கள்



சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர் அவர்கள் 1860ஆம் ஆண்டு, பிப்ரவரி 18ஆம் நாள் சென்னையில் பிறந்தார். சிறந்த வழக்குரைஞர், தொழிற்சங்கத்தலைவர், விடுதலைப் போராட்ட வீரர். மயிலாப்பூர் சிங்காரவேலு என்ற முழுப்பெயர் கொண்ட இவர் பொதுவுடைமைச் சிந்தனைகளைத் தமிழ்நாட்டில் பரப்ப, ஆற்றிய பணிகளுக்காகச் “சிந்தனைச் சிற்பி” எனப் போற்றப்படுகிறார்.



# தமிழ்த் தாத்தா

உ.வே.சா. அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் 1855ஆம் ஆண்டு பிப்ரவரி 19ஆம் நாள் பிறந்தார். உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் என்பதைச் சுருக்கி உ.வே.சா. என அழைக்கப்பட்டார். இவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினால் ‘தமிழ்த் தாத்தா’ எனத் தமிழர்களால் சிறப்பிக்கப்பட்டார். இவர் ஒரு சிறந்த தமிழறிஞர். தமிழ் மொழியில் அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடித்தேடி அலைந்து பெற்று அச்சிட்டுப் பதிப்பித்தவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் உ. வே.சா. குறிப்பிடத்தக்கவர். தமது அச்சு பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தவர். உ.வே.சா. அவர்கள் 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சு பதித்தது மட்டுமின்றி 3,000க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்து ஏடுகளையும் சேகரித்தவர்.

பிப்ரவரி 22 : தில்லையாடி வள்ளியம்மை பிறந்தநாள்

# அண்ணல் போற்றிய வள்ளியம்மை



தில்லையாடி வள்ளியம்மை 1898ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் மயிலாடுதுறை மாவட்டம், தில்லையாடி என்ற ஊரைச் சார்ந்த, தென்னாப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க் நகரில் சிறு வணிகம் நடத்திவந்த தம்பதியருக்கு மகளாகத் தென்னாப்பிரிக்காவில் பிறந்தார். கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெறாத திருமணங்கள் செல்லாது எனத் தென்னாப்பிரிக்க ஆங்கிலேய அரசு அறிவித்தது. அப்போது தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டிருந்த காந்திஜி தலைமையில் அங்கு வாழ்ந்துவந்த இந்தியர்கள் போராட்டம் நடத்தினர். மேலும், அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்கு அரசால் விதிக்கப்பட்ட வரியை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்தன. இப்போராட்டங்களில் பங்குபெற்று அறவழியில் போராடிய தில்லையாடி வள்ளியம்மையை 1913ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார். உடல் நலக் குறைவால் விடுதலை செய்யப்பட்டபோதும் கோரிக்கை நிறைவேறாததால் வெளியேவர மறுத்தார். இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்ட பின்பு விடுதலையை ஏற்று வெளியே வந்தார். “பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றிகண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்கள்தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்” என அண்ணல் காந்தியடிகளார் பாராட்டியுள்ளார்.


# தமிழரசு

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு**

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.20 |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.240 |
| ஆயுள் சந்தா | : | ரூ.2,000 (10 ஆண்டுகள்) |

**தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.20 |
| ஆண்டுச் சந்தா | : | ரூ.240 |
| ஆயுள் சந்தா | : | ரூ.2,400 (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ **இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113** என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித் தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.01.2022 அன்று,
கொரோனா மற்றும் ஒமைக்ரான் வைரஸ் தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கையாக,
சென்னை மாநகரின் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று பொதுமக்களுக்கு முகக் கவசங்களை வழங்கி,
முகக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

*Date of Publication : 2nd week of every month*
*Date of Posting : 27th - 30th of every month*




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.12.2021 அன்று, சுவர்னிம் விஜய் வர்ஷ் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுடனான போரில், இந்தியா வெற்றி பெற்றதன் பொன்விழாவை முன்னிட்டுச் சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள போர் நினைவுச் சின்னத்தில், தாய்த் திருநாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தினரை நினைவு கூறும் வகையில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,